அமரன்
அம்பிகாபதி
சே.ர. குமாரசாமி. பி.ஏ.



இந்நூலாசிரியர் :

கவிஞர் சே. ர. குமாரசாமி

"கன்னலொடு தேன்பாலும் கலந்துமேலும்
கனிரசங்கள் நனிசிறந்த சேர்த்தாலென்ன
சொன்னயமும் பொருள்நயமும் சுவைக்கக்கூட்டி
சொல்லாத புதுக்கதையைச் சொல்லுகின்றான்
கன்னியெழில் தமிழ்த்தாயின் காதல் மைந்தன்
கவிநயக்கும் எனதன்புக் ***குமாரசாமி***"

— **நாமக்கல் கவிஞர்.**

ஸ்ரீ. S. இராமசாமி செட்டியார்
அவர்கட்கு அன்பளிப்பு

தெ. பொ. மீனாட்சிசுந்தரம்
30/5/57

அமரன்

அம்பிகாபதி

[stamp]

ஆக்கியவர்:
கவிஞர்
சே. ர. குமாரசாமி பி. ஏ.

★

தேவி பதிப்பகம்
அம்மாப்பேட்டை, சேலம்-3.

முதற் பதிப்பு:— நவம்பர் 1—1956.

உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூபாய் இரண்டு.

தேவி அச்சகம், அம்மாப்பேட்டை, சேலம்-3.

பதிப்புரை

o

கவிஞர் திரு. குமாரசாமி அவர்கள் ஆக்கிய இக் காவிய மலரைத் தமிழ்த்தாயின் திருவடிகளிலே பெருமையோடு சூட்டுகிறோம்.

—பதிப்பகத்தார்.

‘ சொல்லின் செல்வர் ’

உயர்திரு. பேராசிரியர்

ரா. பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல்.

அவர்களின்

அணிந்துரை

இளமை அருதும் வளமை குன்றுதும் வளர்ந்து வரும் இயல்புடையது தமிழ் மொழி. இதன் இலக்கியப் பேராறு இடைவற்றிப் போனதே இல்லை. அதிலும் இந்த நூற்றுண்டில் அப்பேராறு கரைபுரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.

நண்பர் குமாரசாமியின் ‘அமரன் அம்பிகாபதி’ என்னும் இக்கவிதைக் கதை, மேற்குறிப்பிட்ட ஆற்றில் எழுந்துள்ள ஒரு புதிய அலை.

ஒட்டக்கூத்தர், அவ்வையாரோடும், கம்பர், புகழேந்தி முதலியவரோடும் கவிதைப் போர்கள் செய்த தாகத் தனிப்பாடல் திரட்டு, தமிழ் நாவலர் சரிதை முதலிய நூல்களில் படித்திருக்கிறோம்; இக்கதை, அம்பிகாபதி -அமராவதி காதல் வாழ்வில் மோதிய ‘தீக்குண(VILLAIN) ஞ்’க அவரைக் காட்டுகின்றது. இது பழைய கதையில் ஒரு புதுமையை ஓட விடுகின்றது.

இக்கவிதைக் கதை என்னும் பெருமுகிலில் கவிஞ ரின் கற்பனை மின்னல்கள் அங்கங்கே பளிச்சிடுகின்றன.

II

பொன்னிக் கரையின் எழிலைப்பாடும் கவிஞர், இறுதியாக,

அழகுப் பெருந்தெய்வம் ஆங்கிருந்து ஆட்சி
பழகுவதை யாவருமே பார்க்கலாம்...”

என்று கூறுகிருர்.

அம்பிகாபதிக்கும் அமராவதிக்கும் காதல் தொடர்பு உண்டென்பது உண்மைதானு என்று கண்டறிய விருந்து ஏற்பாடு செய்திருக்கிருன் மன்னன். அமராவதியே விருந்து பரிமாறுகிருள். அவள் எழில் கண்டு 'நெஞ்சுக்குள்ளே பிதற்றிய' அம்பிகாபதி, 'இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க...' என்று வெளிப்படையாகவே 'புலம்பி' விடுகிருன்! அப்போது கம்பர்,

“ பிள்ளையை எவ்வா றேனும்
பிழைநிலை நின்று வாரி
அள்ளிடத் துடித்தார்; அன்னை
அருந்தமிழ்க் கரத்தை ஈந்தாள்!”

விழுகின்ற மகனை வாரி அள்ளிடத் துடித்தாராம்; அள்ளிடக் கை வேண்டுமே — அன்னை ‘தமிழ்க் கரம்’ ஈந்தாளாம் !

கம்பரை,

“ கலையுள நெஞ்ச மெல்லாம்
கம்பனுக்கு ஆட்சிப் பீடம்”

என்று பாராட்டும் கவிஞர், அவன் படைத்த காவியத்தை,

"... நெஞ்சை
அள்ளுகின்ற கலைப்படையின் அணிவகுப்போ?
சோராத இன்பமெலாம் செழிக்கப் பெய்யும்
செந்தமிழின் அடைமழையோ? "

என்றெல்லாம் வியக்கிருர்.

கதை முழுவதும் 'ஊழிற் பெருவலி யாவுள' என்னும் கொள்கையை அள்ளித் தெளித்து வருகிருர். ஓரிடத்தில்,

"... தணியா ஊழை
ஒப்பாதார் சக்தி ஒன்றை ஒப்பா தாரே!
ஒன்றுண்டு வல்வினையே! ஒப்ப வேண்டும்!"

என்று கட்டளையே பிறப்பித்து விடுகின்ருர்!

இவ் இளங்கவிஞர் நல்ல பல நூல்களைத் தமிழுக்குத் தந்து சிறந்து வாழ்க.

சென்னை,
19—10—56.

ரா. பி. சேதுப்பிள்ளை

தமிழக ஆஸ்தான கவிஞர்
உயர்திரு.

நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை
அவர்களின்

பாராட்டுப் பாடல்

ஒப்பரிய காவியத்தை உரிமை யாக்கி
உலகமெல்லாம் தமிழ்த்தாயை வணங்கச் செய்த
அப்பெரிய கம்பனுடை அருமை மைந்தன்
அம்பிகா பதிதன்னை அமர ளுக்கும்
இப்புதிய கற்பனையை எமக்குத் தந்து
இன்னதென்று எவராலும் விளக்க மாகச்
செப்பரிய 'காதல்'என்னும் சிறந்த அன்பின்
செய்கைதனை அழகாகச் சித்தி ரித்து

கன்னலொடு தேன்பாலும் கலந்து மேலும்
கனிரசங்கள் நனிசிறந்த சேர்த்தா லென்ன
சொன்னயமும் பொருள்நயமும் சுவைக்கக் கூட்டி
சொல்லாத புதுக்கதையைச் சொல்லு கின்றான்
கன்னியெழில் தமிழ்த்தாயின் காதல் மைந்தன்
கவிநயக்கும் எனதன்புக் குமார சாமி
பன்னலமும் பெரும்புகழும் படைத்து வாழப்
பல்லாண்டு பல்லாண்டு பரமன் காக்கும்.

நாமக்கல்,
19—10—56.

வெ. இராமலிங்கன்

பிரபல நாவலாசிரியரும், ''பிரசண்ட விகடன்'' ஆசிரியருமான உயர்திரு.

நாரண-துரைக்கண்ணன் ('ஜீவா')

அவர்களின்

சிறப்புரை.

உலக மகா காவியங்களில் காதல் கதைகளுக்குத்தான் உன்னத ஸ்தானம் இருந்து வருகிறது. 'நவ ரசங்களும் பொருந்தியிருப்பது தான் காவியம் எனப்படும்' என இலக்கணம் சொல்லப்பட்டாலும், வீரம், காதல் என்ற இரண்டு ரசங்களைத்தான் பெரும்பாலான காவியங்களும் கவிதைகளும் விதந்தோதி வருகின்றன. அவ்விரண்டிலும் கூட, காதல் ரசத்துக்குத்தான் முதன்மை கொடுத்துக் கவிஞர்கள் அனைவரும் பாடி வருகிறார்கள். அப்படிப் பாடப்பட்ட காதல் காவியங்கள் தாம், உலக இலக்கியவரிசையில் முதலிடம்பெற்றிருக்கின்றன. முதல் மகா காவியமான வால்மீகி இராமாயணத்துக்குப் பின்னர் சமஸ்கிருத மொழியில் எத்தனையோ காவியங்கள் உண்டாகி இருக்கின்றன. ஆனாலும், காளிதாசன் பாடியுள்ள சாகுந்தல நாடகத்தையே மிகச் சிறந்த காவியம் எனப் போற்றுகிறார்கள். 'காவியத்துக்குக் காளிதாசன் தான்' என்று வடமொழிக்கவிஞரொருவரே பாராட்டிப்பாடியிருக்கிறார். காளிதாசன் பிறந்த கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைத் தான் இந்திய இலக்கிய மறுமலர்ச்சி உதயமான காலம் எனப் பிரபல சரித்திராசிரியரான ஸ்ரீ விநய குமார ஸர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார். கிரேக்க மகா கவியான ஹோமர்

எத்தனையோ காவியங்கள் செய்திருந்தாலும் 'டிராய் தேசத்து ஹெலன்' (Helen of Troy) என்ற காதல் காவியம் தான் உலகப் பிரசித்திப் பெற்றிருக்கிறது. அதுபோலவே ஆங்கில மகாகவியான வில்லியம் ஷேக்ஸ்பியர் எத்தனையோ நாடக காவியங்கள் பாடியிருந்தாலும் ரோமியோ-ஜூலியட் (Romeo and Juliet) என்ற காதல் காவியம்தான் சர்வதேசப் பேரறிஞர்களாலும் வியந்து பாராட்டப் பட்டு வருகிறது. திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணியும், கம்பரின் இராமாயணமும் காதல் ரசத்துக்கு முதன்மை தந்து பாடியிருப்பதனால் தான், பெருங் காவியங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன.

'கவிதைக்கே காதல் தான் அடுத்தது' என்று முடிவு செய்யப்படு மளவுக்குக் கவிதா சன்னதத்தைக் காதல் கவளீகரித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால்தான்,காலந்தோறும், காதல் கதைகளும், அக்கதைகளைப் பாடும் காவியங்களும் உண்டாய்க்கொண்டே இருக்கின்றன. அம்பிகாபதி-அமராவதி, பில்ஹணன் - யாமினிபூர்ணதிலகை, லைலா-மஜ்னு, ரோமியோ-ஜூலியட் போன்ற கதைகளை வரலாற்றுக்கதைகள் என்று விவகாரம் செய்யவேண்டிய அவசியமில்லை. கவிஞர்களாயுள்ளோர் காவியங்கள் செய்து தருவதற்கென்றே கற்பனு சக்தி வாய்ந்தவர்களால் கட்டிவிடப்பட்ட கதைகள் என்று கூறினாலும் தவறில்லை.

அம்பிகாபதி—அமராவதி காதல் கதைக்கு வரலாற்றுச் சான்று எதுவும் கிடையாது. கம்பர், குலோத்துங்கன் போன்ற சரித்திர புருஷர்கள் இரண்டொருவர் பெயர் இக்கதையில் அடிபடுவதைக் கொண்டு மட்டும் இதை நடந்த கதை எனச் சொல்ல முடியாது. நெடுங்காலமாக நம் நாட்டில் வழங்கப்படும் கர்ண பரம்பரைக் கதைகளில்

ஒன்று என்று தான் நாம் கொள்ள வேண்டும்.

உலகம் அனைத்தும் புகழ்ந்து போற்றத் தக்க ஒப்பற்ற காதல் கதைகளில் ஒன்றான அம்பிகாபதி-அமராவதி கதை இதுவரை எந்தக் கவிஞன் கண்ணிலும்,கருத்திலும் படாமல் கர்ண பரம்பரைக் கதையாகவே—நாடோடிக் கதையாகவே-எப்படி யிருந்து வந்திருக்கிறது என்று நான் அடிக்கடி எண்ணி ஆச்சரியப்படுவதுண்டு. ஆனால், அந்த வியப்பு இன்று எனக்கு நீங்கி விட்டது. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியுள்ள இளங் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவரான திரு. சே. ர. குமாரசாமியின் கைவண்ணத்துக்காகவே இக்கதை காத்துக்கொண்டிருந்திருக்கிறது. நாத விந்து கலைகளுக்கு அதிபதியான இறைவனுடைய திருவுள்ளக் குறிப்புப்படி நண்பர் குமாரசாமி அருமையான சிறு காவிய மொன்றைப் படைத்து, அம்பிகாபதியையும், அமராவதியையும் அமரர்களாக்கி விட்டார். ஆம்; உலகம் அமிழ்ந்தாலும் அழியாத அழகிய காவிய சிற்பங்களாக அவர்களைச் செதுக்கி வைத்து விட்டார்.

கிராமியக் கதையாக வழங்கப்பட்டுவரும் அமராவதி—அம்பிகாபதி கதை, கதையாகவும் நாடகமாகவும் சிலரால் எழுதப்பட்டு வந்திருக்கிறது. வெள்ளித் திரையிலும் ஒரு முறை ஓடியிருக்கிறது. ஆனால், அக்கதைக்குச் சரியான கட்டுக் கோப்பு நன்றாக அமையவில்லை. கவிஞர் குமாரசாமி தாம் இயற்றியுள்ள "அமரன் அம்பிகாபதி" என்ற இந்தக் காவியத்தின் வாயிலாக அக்குறையைப்போக்கி விட்டார் என்றே சொல்ல வேண்டும். கதைக்கட்டுக் கோப்பு மிக நன்றாக அமைந்திருக்கிறது. இதில் ஒட்டக் கூத்தனைத்தீயோனாகச் சிருஷ்டித்திருப்பதும் புகழேந்திப்

புலவரை முக்கிய பாத்திரமாக முதலிலிருந்து இறுதிவரை இணைத்திருப்பதும் கதைக்கு ஒரு புதிய வேகத்தைக் கொடுத்திருக்கிறது. கதாபாத்திர சிருஷ்டி ஒவ்வொன்றும் அபாரம். அம்பிகாபதி, அமராவதி, கம்பர், குலோத் துங்கன், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியவர்கள் உயிரு டன் நடமாடும் ஒப்பற்ற சித்திரங்கள். சிறுசிறு உப பாத் திரங்கள் கூட இவருடைய கவிதா சமத்காரத்தால் வலிமை பெற்றிருக்கின்றன. கதைச்சுவையுடன் காவியச் சுவை போட்டியிடுகிறது. காவியச் சுவை பலபடியாலும் பாராட்டப்படும் வகையில் அமைந்திருக்கிறது. இவர் கூறும் உருவகங்களும், உவமைகளும் கற்போர் இதயங் களைக் களிப்புறச் செய்வனவாயிருக்கின்றன. இயற்கை வருணனைகளும் இங்கிதமாயிருக்கின்றன.

கவிதைக்கு உணர்ச்சி, சொல், கருத்து, அழகு இனிமை ஆகியவை இன்றியமையாதனவாகும். இவை யனைத்தும் இச்சிறு காவியத்தில் நன்கு பொருந்தியிருக் கின்றன. தம் கவிதைப் பாங்குக் கேற்ப, சொல், இசை, எதுகை, மோனைகளை இலாகவமாக அமைத்துக் கொண் டிருக்கிறார். ஆனால் எதுகை, மோனைகளுக்காக அர்த்த மில்லாத சொற்களை ஓரிடத்தில் கூட அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பாட்டுக்கேற்ற பதங் களைத் தேடியலையவில்லை என்பதையும் அவை ஆற்றொ ழுக்குப் போல் தட்டுத் தடையில்லாமல் நேராக அமைத் திருப்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

கவிஞர்கள் எப்போதுமே உணர்ச்சிக்களஞ்சியங்கள். பாரதிதாசனைப் போல், குமாரசாமி தம் பாடலில் நெடுகி லும் உணர்ச்சியைப் பாய விட்டிருக்கிறார். காதல் கட்டங் களில் இவ்வுணர்ச்சி மேலோங்கி நிற்கிறது.

கதை நிகழ்ச்சிகளுக்கேற்ப, சந்தர்ப்பங்களுக்கிசைய, இவர் பாவினங்களை மாறி மாறிக் கையாண்டிருப்பதும் பாராட்டத் தக்கதொன்று. வெண்பா, விருத்தப்பா, ஆசிரியப்பா, பஃறொடை வெண்பா முதலியவைகளால் இக் காவியம் அமைந்திருக்கிறது. ஆனாலும், பஃறொடை வெண்பாவும், விருத்தப்பாவும் இவருடைய கவிதா மேதையை நன்கு வெளிப்படுத்துகின்றன.

புகழேந்தி, கம்பர், இளங்கோ போன்ற மகாகவிகளின் கவிதைகளில் இவர் தம் இதயத்தை மிகவும் தோய விட்டிருக்கிறார். அதை இக்காவியத்தில் ஆங்காங்கு விரவியிருக்கும் மேற் குறித்த கவிஞர்களின் சிறந்த கருத்துக்களும் கவிதை நயங்களும் உவமைகளும் தெரிவிக்கின்றன.

பாரதி சகாப்தத்துக்குப்பின் காவியங்கள் என வெளிவந்தவை மிகச்சில. அவற்றில் என் உள்ளத்தைக் கவர்ந்தவை பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்', பாரதி தாசனின் 'புரட்சிக் கவி', ச. து. சு. யோகியின் 'மேரி மக்தலேனா', 'தமிழ் ஒளி'யின் 'வீராயி' ஆகியனவாம். இவற்றையடுத்து இன்று 'அமரன் அம்பிகாபதி' என் இதயத்தை முற்றும் கொள்ளை கொண்டு விட்டது. சமீப காலக் காவியங்களில் 'அமரன் அம்பிகாபதி' ஓர் அமர காவியமாக விளங்கும் என்பதும் எதிர் காலக் கவியுலகில் குமாரசாமி குறிப்பிடத்தக்க கவிஞராக விளங்குவார் என்பதும் திண்ணம்.

நண்பர் குமாரசாமி இது போன்ற சிறந்த காவியங்களையும், அழகிய கவிதைகளையும் எழுதிப் பெரும் புகழ் பெற வேண்டுமென்று, இறைவன் திருவருளை வழுத்தி நல்வாழ்த்து கூறுகின்றேன்.

"ஜீவோதயம்"
சென்னை-24.
27–1–56

நாரண-துரைக்கண்ணன்

'தமிழ்த்தும்பி'
அவர்களின்
தந்துரை

O

உணர்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்து, திக்குமுக்காடி தடுமாறும் போதுதான் ஒருவனின் உள்ளம் வாழ்க்கையின் சுவைமிக்க காட்சிகளைக் கண்டு, உணர்ந்து, சுவைக்க முடிகிறது. தான் கண்டு அனுபவித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் தான் கண்டு நுகர்ந்த மாதிரியே காட்டுவதில் தான் ஒரு கலைஞனின் சிறப்பும் உயர்வும் ஒளிர முடியும். கலையின் பல பகுதிகளில் மிகவும் முதன்மையானது கவிதை தான். உணர்ச்சிப் பெருக்கை ஒரு பாடலில், ஒரு வரியில், ஏன் ஒரே சொல்லில் கூட வடித்தெடுக்க முடிவது கவிஞன் கற்ற கலையான கவிதை ஒன்றில் தான் என்பது மிகையாகாது. சொற்செட்டும், பொருள் விரிவும் கவிஞனின் இலக்கணங்களாகும். உணர்ச்சியில் கவிஞன் சொல், எதுகை, மோனை முதலியவற்றைத் தேடிச் செல்வதில்லை. மாறாக அவை இவனைத் தேடி ஓடி வரும்.

'பிரசண்ட விகடன்' ஆசிரியர் உயர்திரு **"ஜீவா"** (நாரண-துரைக்கண்ணன்) அவர்களைத் தமிழ் இலக்கிய உலகம் நன்கு அறியும். அன்னார் வாயிலாக உருவான எழுத்தாளர்கள் (கதாசிரியர், கட்டுரையாளர், நாடகாசிரியர், கவிஞர்கள்) தமிழ் நாட்டில் எத்தனையோ பேர். அவர்களின் இன்றைய வளர்ச்சிக்கு அடிகோலியவர் அவர். அவர்களது பெரும் பாராட்டுதலைப் பெற்று, அவரது '**விகடனி**'லேயே **"அமரன் அம்பிகாபதி"** தொடர் காவியமாக வந்தது. தொடர் கதைகளை மட்டுமே வெளியிடும் இக் காலத்தில் திரு. 'ஜீவா' அவர்கள் ஒரு காவியத்தைத் தொடர்ச்சியாக வெளியிட்டது அவரது துணிச்சலையும், **கவிஞர் திரு. சே.ர. குமாரசாமி** அவர்களின் காவிய நய உயர்வையும் தான் காட்டுகிறது. அப்போதே ஏராளமான பாராட்டுகள் வந்து மலிந்தன. காவியம் பெற்று வந்த பெரு வரவேற்பைப் பல படியாக எடுத்துக் காட்டியது. சில தவிர்க்க இயலாத காரணங்களால் காவியத்தின் கடைசி காதையின் கடைப்பகுதி 'விகடனில்' வர முடியாமற் போய் விட்டது. ரசிகர்களை ஏமாற்றத்துக்குள் ஆழ்த்தியது.

XI

இப்போது அதே காவியம் " அமரன் அம்பிகாபதி " என்ற பெயரில் புத்தக உருவில் வருவது பெரு மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். காவியத்தின் ஆசிரியரான திரு. சே. ர. குமாரசாமி அவர்கள், ஆசிரியர் "ஜீவா" அவர்கள் அடிக்கடி என்னிடம் சொல்வது போல உணர்ச்சி துடிக்கும் காதல் உள்ளம் கொண்ட இளங்கவிஞர் ஆவார். என் பள்ளித் தோழரான கவிஞர் குமாரசாமி, "ஜீவா" போன்ற இலக்கிய ஜாம்பவான் ஒருவரிடம் ஆசியையும், பாராட்டையும் பெற்றதில் என்னைவிடக் கூத்தாடுபவர்கள் வேறு யார் இருக்க முடியும்?

அம்பிகாபதி-அமராவதி ஆகிய இப்பெயர்கள் தமிழ் நாட்டுக்குப் புதியன அல்ல. தமிழ் நாட்டின் மூலை முடுக்கு, பட்டி தொட்டி, நாடு நகர் எல்லாம் அறிமுகமான பழக்கமான பெயர்கள். அம்பிகாபதி-அமராவதி என்றவுடனே காதல் என்ற சொல்லுக்கு விளக்கம் தந்தவர்கள் அவர்கள் என்பதைப் படித்த, படிக்காத தமிழர்கள் யாவரும் அறிவர். உலகக் காதல் பேரிலக்கியங்களின் நாயகர்களான **ரோமியோ-ஜூலியட், லைலா–கயஸ் (மஜ்னு), ஷிரின்–பர்ஹாத்** போன்ற முதல் வரிசைக் காதலர்களின் சிறப்பான அம்சம் இவர்களின் வாழ்விலும் நன்கு தென்பட்டது. இக் காதலர்களின் கதை நம் நாட்டில் நாடகமாக, கதையாக, நாட்டுப் பாடலாக உலவுகிறது. திரைப்படமாக முன் ஒரு முறை வந்து இன்னொரு முறை புதிதாக இப்போது வரவிருக்கிறது. ஆனால் காவிய உருவில் இது வந்ததில்லை. அந்த வடிவத்தைத் தான் **கவிஞர் குமாரசாமி** தருகிறார்.

உணர்ச்சி வயப்படுத்த நல்ல சாதனம் காவியம். உணர்ச்சியைச் சித்தரிப்பதில் வல்லவன் கவிஞன். உயிர் ததும்பும் காதலர்கள் அம்பிகாபதியும், அமராவதியும். உணர்ச்சிப் பெரு வெள்ளத்தில் கவிஞர் நம்மையெல்லாம் திக்குமுக்காட வைக்கிறார். நல்ல கவிநயம், சொல்லழகு, வர்ணனை மேம்பாடு, உயிரோட்டம், நல்ல முறையில் பாத்திரப்படைப்பு இலக்கண அமைதி கொண்ட " **அமரன் அம்பிகாபதி** " தமிழர் எல்லோரையும் இன்பத்தில் ஆழ்த்தும் என்பதில் ஐயமில்லை.

சென்னை-1,
15–10–56.

'தமிழ்த் தும்பி'

ஆசிரியர் முன்னுரை

சென்னையிலே ஒரு நாள்! நண்பர்கள் திரு. நாரண துரைக்கண்ணன், 'தமிழ்த்தும்பி', நான் ஆகிய மூவரும் உரையாடிக் கொண்டிருந்தோம். அடிக்கடி எனக்குக் கூறும் ஒரு முக்கிய விஷயம் பற்றி அன்றும் திரு. நாரணதுரைக் கண்ணன் குறிப்பிட்டார். "கவிஞர்களுள் பலர் தனிப்பாடல் கள் எழுதுவதோடு நின்று விடுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆற்றலிற்கேற்ப, சிறிய பெரிய காவியங்கள் செய்ய வேண் டும். அதுதான் சிறந்த தொண்டு. நீங்கள் ஏன் முயலக் கூடாது?" என்றார். அப்போது 'தமிழ்த்தும்பி' ஒரு அரிய யோசனையை எனக்குக் கூறினர். **அம்பிகாபதி-அமராவதி** காதல் வாழ்வைக் காவிய வடிவிலே செய்யுமாறு என்னைப் பணித்தார். உடனே நானும் அப்பெரும் பொறுப்பை ஏற்க இசைந்தேன். இதுவே இக்காவியம் தோன்றிய வரலாறு. இக்காவியம் திரு. நாரணதுரைக்கண்ணன் அவர்களை ஆசி ரியராகக் கொண்ட "பிரசண்ட விகடனில்" தொடர்ந்து வந்தது. இன்று **'அமரன் அம்பிகாபதி'** என்ற பெயரிலே நூல் வடிவிலே வெளியிடப் படுகிறது.

அம்பிகாபதி—அமராவதி காதல் கதை தமிழகத்திலே கர்ண பரம்பரையாக வழங்கி வருகிறது. ஆனால் இக் கதைக்கு ஆதாரமாகப் போதிய அளவு வரலாற்றுச் சான்று கள் கிடையாது. சிற்சில தமிழ்ப் பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. ஆனால் அறிஞர்கள் அப்பாடல்கள் கூட

ஐயத்திற் கிடமானவை என்று கருதுகின்றனர். எனவே இக்கதைக்கு வரலாற்று முறையிலே வடிவு கொடுக்க இயலாமல் போகிறது. எனினும் இக்காவியத்தில் கர்ண பரம்பரையாக வழங்கும் அடிப்படைக் கதை மட்டும் அப்படியே கொள்ளப்பட்டுள்ளது. கதைப் போக்கும், நிகழ்ச்சிகளும் பெரிதும் கற்பனையால் புனையப்பட்டவைகளே யாகும்.

இக் காவியத்தில் கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் மூவரும் சமகாலத்தவராகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய ஆராய்ச்சியாளரின் முடிபு மாறுபட்டதாகும். கூத்தரை இதிலே தீக்குண (VILLAIN) ப் பாத்திரமாகவும் காட்டப்பட்டுள்ளது. கூத்தர், கம்பருடன் பகையுணர்வு மிக்கவராகவும் ஆக்கப்பட்டுள்ளது. இவ்வாறெல்லாம் செய்தது கதைச் சுவைக்காகவே என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

காதல் மனித சமுதாயத்திலே மிக முக்கிய இடம் பெற்றுள்ளது. காதல் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒத்த உணர்ச்சியும், ஒத்த அன்பும் உடையவரிடையே தான் உயர் காதல் தோன்றுகிறது. உயரிய காதலர்கள் நாட்டிலே-ஏட்டிலே அழியாத இடம் பெறுகின்றனர். தமிழகத்திலே சிறந்த காதலுக்கு அம்பிகாபதி—அமராவதி சிரிய எடுத்துக்காட்டு. அவர்களது காதல் துன்பியலிலே (TRAGEDY) தான் முடிகிறது. இருந்தாலும், காதலின் மேன்மையைக்-கண்ணியத்தை-இலட்சியத்தை அவர்கள் மண்ணிலே நிலைநிறுத்துகின்றனர். காதல் வாழ்விலே வெற்றி கண்ட அவர்கள் காவிய வாழ்வு காண வேண்டுமல்லவா? அத் தேவையை

இந்நூல் பூர்த்தி செய்கிறது.

இந்நூலுக்கு அணிந்துரைகள் வழங்கி அன்புசெய்த திருவாளர்கள் **பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, நாமக்கல் கவிஞர், 'ஜீவா', 'தமிழ்த்தும்பி'** முதலிய தமிழ் அறிஞர்கட்கு எனது அன்பு கலந்த நன்றியை அறிவித்துக் கொள்ளுகின்றேன். இக்காவியம் உருவாவதிலே மிகுந்த அக்கறை காட்டி என்னை ஊக்குவித்த அன்பர்கள் அனைவர்க்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இக்காவியத்திலே தமிழறிஞர்கள் பல குறைகளைக் காணக் கூடும், பேசக் கூடும். ஆசையால் அறைந்த இக் காவியத்தை ஆசியால் புனிதப் படுத்துமாறு அவர்களது பொன்னார் பதங்களைப் போற்றி வேண்டி இச்சிறு காணிக் கையைத் தமிழன்னையின் திருவடிகளிலே சூட்டி, வணங்குகின்றேன்.

அம்மாப்பேட்டை,
சேலம்-3.
1-11-56

சே. ர. குமாரசாமி

—o—

காவியக் கதை

கம்பர் தமிழில் செய்த இராமாயண காவியத்தைக் குலோத்துங்கன் அவையிலே அரங்கேற்றும் மணித்திருநாள்! மக்கள் அலைகடல் போல் வந்து அவையில் நிறைந்தனர். கம்பர் தனது காவியத்தை அரங்கேற்றம் புரிந்தார். காவிய இன்பத்தில் அவை முழுதும் மூழ்கியது. ஆனால் ஒட்டக்கூத்தரும் அவரைச் சேர்ந்த சில புலவர்களும் மட்டும் காவியத்தைக் குறை கூறி நின்றனர். கம்பர் மகன் அம்பிகாபதி, அவர்கட்குத் தக்க முறையில் விடைகூறிக் காவிய அரங்கேற்றத்தை வெற்றி பெறச் செய்தான். புகழேந்திப் புலவரும் காவியத்தின் மாண்பைக் கட்டுரைத்தார். ஒட்டக்கூத்தர் மிக்க அவமான முற்றார். அவையோரெல்லாம் கம்பருக்கு 'கவிச்சக்ரவர்த்தி' என்ற பட்டம் தந்து மகிழ்ந்தனர்; பாராட்டி வாழ்த்தினர்.

அரங்கேற்றத்தின் போது அம்பிகாபதியால் தனக்கேற்பட்ட வீழ்ச்சிக்குப்பின் ஒட்டக்கூத்தருக்கு வஞ்சமன முண்டாயிற்று. நெஞ்சகத்தில் பொறாமைத் தீயை வளர்க்கலுற்றார். அவரைப்போலவே பெருந்தீயை மங்கை ஒருத்தியும் வளர்க்கத் தொடங்கினாள். அவள் மன்னன் மகள் அமராவதியே ஆவாள். அரங்கேற்றத்தின் போது அம்பிகாபதியைக் கண்டாள். அவன் மேல் காதல் கொண்டாள். அன்றே அவள் நெஞ்சில் காதல் தீப்பற்றியது

அம்பிகாபதி நாள் தோறும் காவிரிக் கரை சோலையிலே கவிபாடி இருப்பது வழக்கம். அமராவதி அவனை அங்குச் சென்று சந்திப்பதென்று தீர்மானித்தாள். ஒரு நாள். காலை இளம்பரிதி முளைத்தது. கவிஞன் சோலைக்கு வந்தான். கற்பனை வாசல் கதவு திறந்தது. கோவை புனைவதில் அவனுள்ளம் இறங்கியது. அப்போது அவனெதிரே அமராவதி தோன்றினாள். விழிகள் உறவாடின. உணர்ச்சிகள் ஒன்றுபட்டன. ஏடும் எழுத்தாணியும் எறிந்து விட்டுக் கவிஞன் மங்கையை அணுகினான். ஆனால் அவள் அரசன் மகள் என்று அறிந்ததும் அவன் திடுக்கிட்டான்; ஆர்த்த உணர்ச்சியை அடக்கினான். எனினும் அமராவதியின் அணையாத காதல் அவன் உள்ளத்தைக் கசிவித்தது. கவிஞன் தன்னைக் கைவிட்டுப் போனால் தன் ஆவி மெய்விட்டுப் போகுமென அலறித் துடித்து அமராவதி காதல் வரம் வேண்டினாள். கம்பன் சேய் மன முருகினான். "இசைக் குயிலே! 'சீரான காதல் சிறப்பை நிலைநாட்ட ஈரான நந்தம் இனியநல் ஆவியினை அர்ப்பணிப்போம்!" என்று அவளை ஏற்று அணைத்துக் கொண்டான்.

பொறாமையாலுந்தப்பட்ட கூத்தர் முதலிய புலவர்களின் காதில் அம்பிகாபதி-அமராவதி காதல் செய்தி விழுந்தது. கூத்தர் செய்தியை மன்னனிடம் கொண்டு சென்றார். மன்னன் மிக்க சினமுற்றான். அப்

XVI

போது அங்கே வந்த புகழேந்தி உண்மையை ஆராய விருந்தொன்று ஏற்பாடு செய்ய யோசனை கூறினர். அதன்படி பொங்கலன்று அம்பிகாபதி, கம்பர், கூத்தர் முதலியோர் விருந்திற்கு அழைக்கப்பட்டனர். அமராவதி பரிமாறினள். அவள் அழகில் ஈடுபட்ட அம்பிகாபதி நாவில் கவிதை மலர்ந்தது. கம்பர் இடைமறித்து வெளியே கொட்டிக் கிழங்கு விற்பவளைப் பாடியது போல எஞ்சிய ஈரடிகளை முடித்தார். வெகுண்ட அரசனுக்கு விளக்கமும் கூறினர். ஒரு சோதனையால் மன்னன், அன்றிரவு அம்பிகாபதியும் அமராவதியும் சந்திக்கப் போவதைச் சேவகன் மூலம் அறிந்தான்.

அன்றிரவு அமராவதியும் அம்பிகாபதியும் சந்தித்தனர். இருவரது காதல் உரையாட்டத்தையும் குலோத்துங்கன் மறைந்திருந்து கேட்டான். பின்னர் மன்னன் வெளிப்பட்டு அம்பிகாபதியைக் கண்டவாறு பேசிச் சிறைக்கனுப்பினன். தன் மகளுக்கு அறிவுரை புகன்று அம்பிகாபதியை மறக்குமாறு வற்புறுத்தினன். அமராவதி மறுத்துக் 'காதலனை மறப்பது தமிழ்ப் பண்பாடோ?' என்று கேட்டாள். அடுத்த நாள் அரசவை கூடிற்று. அரசன் அம்பிகாபதி செய்த குற்றத்தைக்கூறி அவனைத் தண்டிக்கப் போவதாகச் சாற்றினன். புகழேந்தியார்; நிகழ்ந்தவற்றைக் கூறி, அம்பிகாபதி பேரின்பப் பொருளிலே நூறு பாடல்கள் பாடினல் அமராவதியை அவனுக்குத் திருமணம் செய்விக்கலாமென்றும், அவ்வாறு பாடத் தவறினல் அரசன் மனம் போலத் தண்டிக்கலாமென்றும் யோசனை பகர்ந்தார். ஆனல் அம்பிகாபதி, ஊழின் சூழ்ச்சியாலே, அதன்படி நூறு பாடல்களும் பேரின்பப் பொருளிலே பாடத் தவறினன்.

அரசன் வெகுண்டு அம்பிகாபதியைக் கொல்லத் தீர்மானித்தான். ஒட்டக்கூத்தரும் தூபமிட்டார். கம்பர் எவ்வளவோ வேண்டிப் பார்த்தார். அரசன் கேட்க மறுக்கவே, கம்பர் மனம் நொந்து அவையை விட்டு வெளியேறினர். புகழேந்தியின் அறிவுரையும் பயன் தரவில்லை. குலோத்துங்கன் தானே சென்று அம்பிகாபதியை வெட்டி வீழ்த்தினன். கம்பருக்குச் செய்தி சென்றது. பதறினர். ஆவேசமுற்றார். மன்னனையும் கூத்தரையும் கண்டு பலவாறு பழித்துரைத்தார். அமராவதியும் காதலனைத் தேடி விண்ணுலகம் போன சேதி வந்தது. கம்பர் துடிதுடித்தார். துயர் தாங்காமல் மனமுடைந்து மடிந்தார். குலோத்துங்கன் மனம் மாறினன். கூத்தரும் குற்றத்தை உணர்ந்தார். புகழேந்தி அமைதிப் படுத்தினர். காவிரிக் கரையிலே அம்பிகாபதி-அமராவதிக்குச் சிலை! அவையிலே கம்பருக்குச் சிலை! ***கம்பர் காவிய உலகிலே அழியா வாழ்வு பெற்றார். அம்பிகாபதி–அமராவதி காதல் உலகிலே அழியா வாழ்வு பெற்றனர்.***

வாழ்க!

அமரன் அம்பிகாபதி

கவிஞர்
சே. ர. குமாரசாமி பி. எ.

அமரன் அம்பிகாபதி

தமிழ் வாழ்த்து

ஆவி கொடுத்ததூஉம் ஆரமுதம் தந்ததூஉம்
நாவில் மொழிதவழ நட்டதூஉம்—மேவிநின்று
காயான நெஞ்சம் கனியநெறி சொன்னதூஉம்
தாயான அன்புத் தமிழ்.

1. அரங்கேற்று காதை

பெற்றமையும் கல்வியினுல் பெரியன் கம்பன்
பெயர்த்தெடுத்த இன்பரசம் பெருகும் ஞான
முற்றமையும் காவியத்தை மூத்து நின்ற
முத்தமிழின் நூல் முறையின் முடிவு கண்டு
கற்றமையும் புலமையுற்ருர் கழகம் தன்னில்
காட்டிஅரங் கேற்றுவிக்கும் கலைவி ழாநாள் !
உற்றமையும் கலைமடந்தை உவகை பூத்து
உளமினிது மகிழ்கின்ற உயர்ந்த நாளே ! (1)

மலை,கடல்,ஆய் வளம்கொழிக்கும் மண்ணும் நீரார்
மணிநதியும் ஆள்சோழ மன்னன், ஆழ்ந்த
கலை(க்)கடலாய்த் திகழுபுகழ் குலோத்துங் கன்சீர்
கவின்மன்றில் செந்தமிழைக் காமுற் ருேடி
அலைகடலாய் மக்களினம் ஆர்ந்தார் ! ஆங்கு
அணிந்தெழுந்து சோதிவிடும் அருணன் போல
விலைகடந்த கவிமணிகள் விளைக்கும் கம்பர்
வீற்றிருந்தார் ! தமிழமுதை விருந்து செய்தார். (2)

காவியத்தை எழுந்திசைத்தார் ! கரிய ராமன்
கதைக்கடலில் அவைமுழுதும் கலந்து மூழ்கி
ஆவியத்தைக் கம்பனிடம் அனுப்பி விட்டு
அப்படியே ஆடாது அசைவி லாது
ஓவியத்தின் எழிலுருவை யொப்ப நின்றார் !
ஒழுகிவரும் தேன்குடித்து ஒளிரும் பூத்த
பூவியத்த வண்டினம்போல் பொறிவா யெல்லாம்
புல்லரிக்க உணர்விழந்து பூரித் தாரே ! (3)

" ஆராத நல்விருந்தோ ? அமுதோ ? நெஞ்சை
அள்ளுகின்ற கலைப்படையின் அணிவ குப்போ ?
சேராத இன்பமெலாம் செழிக்கப் பெய்யும்
செந்தமிழின் அடைமழையோ ? செகத்தி லென்றும்
வாராத அறிவொளியின் வண்ணம் காட்டும்
வற்றாத சாகரத்தின் வளமோ ?" என்று
தீராத கலவியிலே திளைத்தார் போலத்
தீந்தமிழின் காவியத்தின் திறத்தைச் சொன்னார் ! (4)

இவ்வுலகில் நன்றுஎன்றுஒன்(று) இலங்கும் போது
'இழிவு' என்று அதைஎதிர்த்து ஈனம் பேச
வெவ்வுகின்ற திருக்கூட்ட வம்சம் கூட
வாழுமன்றோ ? கம்பனுயிர் வாங்கு வான்போல்
கவ்வுகின்ற கனல்தெறிக்கும் கண்க ளோடு
கவிஒட்டக் கூத்தனவன் கடிந்து சீறி,
" எவ்வுயர்வை எச்சுவையை ஏதைக் கண்டு
ஏய்க்குமிச் சிறுநூலை ஏற்றீர் ?" என்றான். (5)

தண்ணலரும் கவியுலகத் தண்ணல் கம்பன்
தமிழுக்கே ஈன்றினிது தந்த மைந்தன்
பண்ணலரும் அம்பிகா பதியாங் கார்ந்து
பகைநொறுக்கும் மதக்களிறுப் பாய்ந்தெ ழுந்தான்

"வெண்ணெயினை அதன்பாலே விளங்கும் நன்மை
விளைவதனை ஓராது விரைந்து ஏனோ
சுண்ணமென மனம்சுழித்துச் சொல்லி விட்டீர்!
சூழ்புலமைப் பெருந்தமிழைச் சுமந்து நின்றோய்!" (6)

என்றுரைத்தான் கலைமுதிர்ந்த ஏற்றின் சொல்லை
ஏற்றினிது மன்னவனும், "எல்லாம் கற்றோய்!
நன்றுரைத்தாய்! நன்றுரைத்தாய்! நன்று! நன்று!
நந்தமிழின் நல்லமுதை நாடி நூலாய்
ஒன்றுரைத்த கவியரசின் ஓயா இன்ப
ஓவியத்தின் நலமுணரா(து) ஒட்டக் கூத்தன்
மன்றுரைத்த எதிரான மாற்ற மேனோ?
மாத்தமிழ்க்கு மாசன்றோ? மயக்கோ?" என்றான். (7)

புற்றெழுந்த நாகம்போல் புலவன் கூத்தன்
புலனெல்லாம் சினமென்னும் புயலே வீசப்
"பற்றெழுந்த காரணத்தால் பாராள் வேந்தே!
பாராட்டிக் கம்பனுடைப் பனுவல் தன்னை
மற்றெழுந்து பேசுகின்றீர்! மதித்து இந்த
மண்டலமும் இன்றிதனை மயங்கி ஏற்றுக்
கற்றெழுந்த காவியமாய்க் கருதி னாலும்
காலமெனும் தீவிரைவில் கருக்கும் கண்டாய்! (8)

மண்ணுண்ட இராமனும்தான் மனிதன்! கொண்ட
மனையாளை இராவணன்பால் மாற விட்டுக்
கண்ணுண்ட அருவியைப்போல் கண்ணீர் மல்கிக்
கதறுவதைக் காவியத்தில் கண்டோம்! கம்பன்
விண்ணுண்ட தெய்வமென வியந்து ஏனோ
விதவிதமாய் நவநவமாய் வீணில் நின்று
பண்ணுண்ட செந்தமிழால் பாட லுற்றான்?
பண்பாடோ? பகுத்தறிவோ? பாரீர்! அந்தோ! (9)

சாவாத நல்லமிழ்தைச் சார்ந்து குப்பைச்
சாக்கடையில் தெளிப்பதுநற் சால்போ ? ஈண்டு
மேவாத ஆரியத்தை மேவிக் கம்பன்
மென்தமிழால் பாடியது மேன்மை யாமோ ?
கூவாத பூங்குயில்போல் கூவி இன்பக்
குளிர்தமிழில் இசைபயிலக் கூறி னுலும்
ஓவாது ! இம் மாசுடைநூல் ஒழிக !" என்று
ஒட்டனுமாங்(கு) இடிமுழக்க ஓசை செய்தான் ! (10)

ஓங்கிருந்த கம்பன்தன் ஒல்காப் பேரை
ஒழித்தெரிக்க மனங்கொண்டான் ஒட்டக் கூத்தன்
ஆங்கிருந்த சிலபுலவர் அவன்பால் சேர்ந்தார் !
அழுக்காறு படமெடுத்து ஆடிச் சோதிப்
பாங்கிருந்த நெறிநூலைப் பற்றிற்(று) ! "என்னே !
பாரிழந்து கூனியினுல் பரிந்து ராமன்
கோங்கிருந்த மார்பாளைக் கொண்டு மீட்க
குரங்குதவி நாடுவதும் குறைபா டன்றோ ?" (11)

"வன்னெஞ்ச இராமன்தான் வாலி தன்னை
வஞ்சகத்தால் கொன்ற(து) அற வழிய தாமோ ?"
"கன்னெஞ்ச வீடணனைக் காரார் மேனி
காகுத்தன் ஏற்றதொரு களங்க மன்றோ ?"
"தன்நெஞ்ச மஞ்சாது தமிழில் கம்பன்
தரமற்ற ஆபாசம் தந்தான் !" "நாடி
என்னெஞ்ச மேற்காது என்போல் சைவர்க்(கு)
ஏற்றதல்ல ; வைணவரே ஏற்ப தாகும் !" (12)

கூத்தன் நின்ற அவ்வழியே கூடி இங்ஙன்
குறைகள்பல சிலபுலவர் கூறிக் கூறி
ஆர்த்துநின்றார் ! மகிழ்ந்திருந்த அவையின் மாந்தர்
அகமெல்லாம் தளர்வுற்ற(து) அழகு சாலப்

பூத்துநின்ற சோலையிலே புகுந்து பொல்லாப்
புயல்மலரை வீழ்த்துவதைப் போல அன்னார்
காத்துநின்ற முகமலர்ச்சி கடிதில் வீழ்ந்து
காரிருள்வாய் சேர்ந்த(து)அதைக்காளை கண்டான்!

இருளார்ந்த நிலையறுக்க எழுந்த சோதி
இளம்பருதி தனையொப்ப இனிது ஞான
அருளார்ந்த முகங்காட்டி அன்பு காட்டி
அம்பிகா பதியெழுந்தான்: " அவையோ ரே!ஓர்
மருளார்ந்த பண்பமையா மதியை ஏய்க்கும்
மாமழைநம் நெஞ்சமெலாம் மண்டிற்(று) ! ஐயோ !
தெருளார்ந்த காவியத்தைத் தெரியக் கேட்டும்
தெளிவமைய நலமறியத் தெரிந்தோ மில்லை. (14)

கூற்றனுக்கும் அவன்பாலே கூடி நிற்கும்
கும்பலுக்கும் தெளிவுறுத்தக் கூறு கின்றேன் :
ஆற்றினுக்குச் செல்லுகின்றோம்! ஆங்கு மேனி
அழுக்கெல்லாம் போகநன்னீ ராடத் தானே !
சேற்றினுக்கு மதிப்பளித்துச் சென்று பூசச்
சேர்ந்தோமா ? யாதுஅறிவோர் செயலே ? வெற்றுக்
காற்றினுக்குப் பேச்சென்று கட்டிப் பேரைக்
கண்டதெலாம் வீசுவதால் கண்ட தென்ன ? (15)

கொண்டதொரு நன்னூலில் குணத்தை நாடிக்
கொண்டமைதல் நல்லறிஞர் கோளாம் ! ஆங்குக்
கண்டதொரு சிறுமையினைக்—களங்கம் தன்னைக்
காட்டியதைக் கடிந்தெறிதல் கருத மாட்டார் !
பண்டதொரு நற்கதையைப் பருக இன்பப்
பைந்தமிழில் அழகொழுகப் படமாய்க் காட்டி
விண்ட(து)ஒரு தமிழ்த்தாய்க்கு விளக்க மன்றோ ?
வீசுபுகழ் நற்றமிழ்க்கு வெற்றி யன்றோ ? (16)

கறைகாத்து நலமெல்லாம் காற்றில் விட்டால்
கண்ணியந்தான் வாழ்ந்திடுமோ ? கற்ற கல்வி
நிறைகாத்து வாழ்புலவீர் ! நீவிர் எல்லாம்
நீர்மையுற வள்ளுவனர் நீட்டிச் சொன்ன
"முறைகாத்து நாட்டுநலம் முன்னிக் காக்கும்
முனிவறியா மன்னவனே முதலில் மக்கள்
இறை" காத்திவ் வுரைநோக்க இனிது செல்வீர் !
இறையென்று இராமனைத்தான் இயம்பி லென்ன ?

கூனியன்றே இராவணற்குக் கூற்ற னுக,
குலராமன் தனையனுப்பிக் கொடுத்துப் பின்னர்
வானியன்ற கீர்த்தியெலாம் வாங்கித் தந்தாள் !
வாய்மைநெறி சீராமன் வனத்தை நாடித்
தேனியன்ற கோதையொடு தேரா னுயின்
தென்னிலங்கை அவுணர்குலம் தெறித்துச் சாமோ ?
கானியன்ற வால்குரங்கு கனையை ஏவி
காரவுணர் படைக்கடலைக் கடந்து ராமன் (18)

போற்றுகின்ற வெற்றியினைப் பொருந்தி நின்றுன் !
புலவர்களே ! வாலிக்குப் புரிந்த தீதைத்
தூற்றுகின்றீர் ! வாலிக்கே தூய ராமன்
துப்புரவாய் எடுத்துரைத்த(து) உன்னிக் காணீர் !
சாற்றுகின்ற சீராமன் சரணங் கொண்ட
சான்றநெறி வீடணனும் சுக்ரீ வன்னும்
ஆற்றுகின்ற நல்வாழ்வு அடையச் செய்தல்
அன்னவனின் பொறுப்பன்றே? அறம தன்றே? (19)

நவரசமும் கரைபுரள நயந்து எந்தை
நல்லதொரு காவியத்தை நாடிச் செய்தார்
அவரவர்க்கு வேண்டுவதை அள்ளி அள்ளி
அகமுழுதும் குளுமையுற அருந்து தற்குக்

கவரவந்து விருந்துசெயல் கவிநோக் கன்றே ?
காமுகர்க்கும் அவ்வாறே கருதித் தந்தார் !
எவரெவர்க்கு எப்பொருள்மேல் எழுச்சி யுண்டோ
ஏற்றதனைக் கவியருளல் இயல்பே யாகும் ! (20)

நீதியினை, வையகத்தில் நிலைப்ப தான
நியமத்தை, நல்லறத்தை, நிற்கும் பண்பின்
ஆதியினை, வான்மழைபோல் அடைந்து செய்யும்
அன்புஅருளைச் செந்தமிழில் அறிய நன்று
ஓதியினி(து) எடுத்தியம்பி ஒழுக்கங் காட்டும்
ஒருநிலையில் நூல்மலர்ந்து ஓங்க வேண்டும்
ஈதியங்கும் நூலன்றி ஏனை யாவும்
ஈங்(கு)எரியும் தீவிருந்தாய் ஏற்கற் பாற்றே ! (21)

சொல்லறமும், மனஞ்சிறிதுஞ் சோர்வி லாது
சூழ்தனயன் காடுவந்து சூழும் தியாக
நல்லறமும் மெய்யொளிரும் நட்பும், கற்பும்,
நயவஞ்சக் கொடியவரை நாடி வீழ்த்தும்
வில்லறமும், சரண்புகுந்தார் விசனம் தீர
விரிந்தலரும் பேரருளும், வீரம், மற்று
வல்லறமும், வகுத்துரைத்த வளத்தி லன்றே
வாய்மையெனும் மெய்மைநெறி வளர லாகும் !" (22)

இவ்வாறு கம்பன்தன் இளைய காளை
இனிதான காவியத்தின் இயல்பைச் சுட்டி
எவ்வாறு செந்தமிழ்நூல் எழுத வேண்டும் ?
எதுமெய்ந்நூல்? கலைவானில் எழிலாய் நிற்கும்
அவ்வாழ்வு கொண்டிலங்கும் அமரத் தன்மை
அடைவதெது ? என்றெல்லாம் அறியக் கூறி
வெவ்வாயின் நச்சரவின் விடத்தைப் போக்கும்
வெல்மருந்தாய் ஆங்கினிது விளங்கி னானே. (23)

மண்கொடுத்த நல்வயிர மணியா னாலும்
மதித்ததனைத் தீட்டியொளி மல்கு மாறு
கண்கொடுத்து விட்டால்தான் கவரும்! கம்பர்
கலைமணிக்கும் அவர்மைந்தன் கவிதை மின்னும்
பண்கொடுத்த தன்னறிவுப் படையால் தீட்டிப்
பரிமளிப்பு மேவநலம் பயந்தான்! கொள்ளத்
தண்கொடுத்த காவியந்தான் தந்து நின்ற
தனிச்சிறப்பை நயங்கொழித்துத் தாங்கி னானே. (24)

வெண்பாவின் பேருலகை வெற்றி கண்ட
வெறித்தமிழ்த்தேன் புரந்தளிக்கும் வேந்த னான
பண்பாவின் நயந்தெரிந்த பண்பார் நெஞ்சப்
பாவலனும் புகழேந்தி, "பரந்து ஆவி
உண்பாவின் மெய்விருந்தை உவந்து கம்பன்
உய்யபுவிக் கருளின்ன் இன்(று) உலகும் நீண்ட
விண்பாரும் நெடுமலையும் விரிந்த ஆழி
வீழ்ந்தாலும் சாகாநூல் விளைத்துத் தந்தான்!" (25)

எனமுழக்கி வையமெலாம் ஏற்க, கம்பன்
எழிலாரும் கலையமுதாய் என்றும் நின்று
வனமுழக்கிக் கனிவிளைத்து வழங்கு கின்ற
வண்ணம்போல் திகழ்நூலில் வாய்ந்த நீதி
இனமுழக்கி இசைமுழக்கி இன்பங் காணும்
இடமுழக்கி திடமுழக்கி இனிது தன்நல்
மனமுழக்கும் பேருவகை மயக்கந் தீர
மணித்தமிழ்ச்சீர் காவியத்தின் மாண்பைச் சொன்னார்.

மேடையிலே வீற்றிருந்து மேவுங் கல்வி
மேலவரும் மற்றவரு மெல்லா முள்ளம்
கோடையிலே தவழ்ந்துவந்து கொடுக்கு மின்பக்
குளிர்தென்றல் புணர்ந்தவர்போல் கூர்ந்தார்! வேக

வாடையிலே உதிர்இலைபோல் வந்த எல்லா
வல்லெதிர்ப்புச் சலசலப்பும் வற்றிற்(று) ஒட்டன்
ஆடையிலா(து) அவைநடுவே அற்றம் காக்கும்
ஆதரவு இல்லான்போல் ஆவி சோர்ந்தான் ! (27)

செந்தமிழால் இப்புவிக்குச் செம்மை நூலைச்
செய்தளித்து விலையறியாச் - சென்று வீழா
அந்தமிலாப் புகழ்வளைத்த அறிவாய்ச் சூழ்ந்த
ஆழிக்குக் - கம்பனுக்கு - அமர னுக்குச்
சந்தமுலாம் பாவலற்குச் - சபையோ ரன்பாய்ச்
சார்ந்து‘கவிச் சக்ரவர்த்தி’ என்ற பட்டம்
தந்துமுழக் கம்செய்தார் ! தரணிக்(கு) அந்நாள்
தான்கண்ட வரலாற்றில் தனிநா ளன்றோ ? (28)

“வானாரும் புகழ்திகழ்நூல் வாழ்க !” என்றார் !
“வாழ்கதமிழ்க் கவிச்சக்ர வர்த்தி” என்றார் !
“தேனாரும் அறிவமுதத் தெளிவே !” என்றார் !
“தேடிவந்த பெருஞ்செல்வத் திருவே !” என்றார் !
“மீனாரும் விண்கடலில் மிதந்து வந்து
மேவுகின்ற கலைமதிய மே ! ஓ !” என்றார் !
ஏனாரும் மனத்தகத்தே எழுச்சி பொங்க
ஏற்றுளம்போல் கம்பனையே ஏத்திச் சென்றார். (29)

வெண்பா

ஆதித் தமிழும் அறிவும் அருள்நெறியும்
நீதித் தமிழுமுயர் நீள்புவிக்கு—ஓதினரே
உம்பர் அமிழ் தாக உயிர்வளரப் பண்புயரக்
கம்பர் அமிழ் தாகக் கவி. (30)

2. தீ வளர் காதை

[வே று]

அரங்கெட்டிக் காவியத்திற்(கு) அம்பிகா பதியே
அமரத்வம் செய்துவைத்து அன்றளித்த வீழ்ச்சி,
சிரங்கெட்டிக் கொண்டவன்போல் சிந்தையிலே ஊன்றிச்
சீழ்பிடித்துத் துயர்கொடுத்துச் சீரழித்த(து) ஒட்டன்
தரங்கெட்டான் ! நெஞ்சகந்தான் தாங்காப்பொ றுமைத்
தணலுற்றான் நாடிநின்று தாக்கியவன் வாழ்வைக்
குரங்கெட்டிப் பிடித்தநறுங் குளிர்வாழைத் தோப்பாய்க்
குலைத்தழித்து வீழ்த்தமனம் குறித்தவனும் நின்றான்

"வாராதோ சமய"மென்று வாளரவம் போன்று
வழிநோக்கிப் பழிவாங்க வாய்ப்பெண்ணி நின்றான் ;
"கோராத வசைமொழிகள் கோரிஎனது உள்ளம்
கொதிப்படைய அச்சிறுவன் கோளரிஎன் றென்னைத்
தேராது தன்வாழ்வு தேய்ந்தொழிந்து மாயத்
தேடிபெரும் பகைகொண்டான் ! தீந்தமிழின் ஆழம்
பாராத கம்பனுடைப் பாலகனே ! பார் ! பார் !
பார்வேந்தன் பகையினையே பயக்கின்றேன் யானே!"

ஒட்டனுமிவ் வாறுபல உளமெண்ணி எண்ணி
ஒருக்கணமும் தன்னுடைய அகமதனைத் தானே
விட்டகலாக் கோபத்தீ வீங்கிவளர்ந் தோங்க
விளைத்திட்டான் ! இவ்வாறே வேகின்ற நற்றீ
வட்டகவின் தண்ணிலவின் வதனமது கொண்ட
வஞ்சியவள் ஒருத்தியும் வாய்க்கவே பெற்றாள் !
மட்டவிழும் பூங்கோதை மாதரசி யான
மன்னவன்தன் பொன் அமரா வதியாளே கண்டீர்! (3)

பேராரும் நற்கவிதைப் பெருநூலைக் - கம்பன்
பெருவாழ்வை - அமர நிலை பெற்றளித்த அமுதைச் -
சீராரும் தன்னரிய சிந்தனையில் வார்த்த
சீவனுறு நல்லின்பச் சிற்பத்தை ஏற்று
ஆராரும் கொண்டாட அம்பிகா பதியே
ஆற்றியநல் விளக்கமதை அழகுஅமரா வதியே
நீராரும் மலர்விழியால் நெடிதுண்ட அன்றே
நிலைகுலைய நெஞ்சகத்தே நெடுந்தீயைப் பெற்றாள் !

வான்புணரும் மாளிகையில், வருகின்ற தென்றல்
வண்ணமலர் வாசனையை வாரியங்கு வீசித்
தான்புணரும் மாடத்தில், தண்ணமுதம் பொங்கத்
தாவிவரும் மதியுலவும் தனியிடத்தில், நாடித்
தேன்புணரும் மலர்ப்புணரும் தேர்கல்விச் செல்வத்
திருப்புணரும் மன்னவனின் திருமகள்தான் எண்ணி
மீன்புணரும் கூர்விழியாள் மிக்கன்புத் தோழி
மேனகையோ டுரையாடி மெல்லணையி லுற்றாள். (5)

"மண்ணாளும் மன்னரினும், மதியாளும் - கல்வி
மலையாளும் - செந்தமிழின் மாட்சியினை ஆளும் -
பண்ணாளும் நற்புலமைப் பாவலர்கள் இந்தப்
பாரகத்தே நிலைபெற்றுப் பயனுள்ள கீர்த்தி
விண்ணாளத் தான்பெற்று வெற்றியடை வாரே !
வீரன்அம்பி காபதியே விளைத்தஅறி வின்றும்
கண்ணாளப் பெற்றுவிட்டேன் ! கதிரவன்போ லோங்கிக்
கருத்தாளக் கொண்டுவிட்டான் காளையவன் தானே!

தந்தையினும் மேலாகத் தனயன்அறி வுள்ளான் !
தாரணியில் அழிவறியாத் தானம்அடை வானே !
விந்தையினும் விந்தையவன் வெற்றியடி ! அஞ்சா
வீரனடி ! தீரனடி ! மாரனடி ! கொண்ட

சிந்தையினில் நன்னெறியே சிறந்தொளிரும் ஞானச்
சீலனடி ! கற்பனையின் மூலனடி ! ஏடி !
அந்தயனும் பாவையரின் அகநிறைவைக் கண்டு
அளந்தறியத் தான்இவனை ஆக்கினனோ?" என்றாள்.

சொல்லிஅகம் தளர்வுற்றுச் சோர்வடைந்தாள் மன்னன்
சோதிமலர்; "பூங்கொடியே ! சுவையாரும் கரும்பு
வில்லிஅகம் துளைத்தானோ ? வியப்பிதுஎன் ?" என்று
விரைந்தன்பு மேனகையே விளித்தவளைத் "தீயின்
கொல்லிஅகத் தேளறும்பைக் கொள்வதுவு முண்டோ ?
கோல்பிடித்த குலம்விளைத்த கொம்பான நீயும்
நல்லியலே ! கம்பனுடை நற்புதல்வன் தன்னை
நாடுவதும் நன்றாமோ ? நலிவன்றோ ? அந்தோ ! (8)

மின்னவளே ! வையகத்தின் மீதரசு செய்யும்
மீன்கொடியார் மாமதுரை மேவுகின்ற வீர
மன்னவனின் செல்வனையே மணம்புணர வுள்ளாய் !
மதித்துநமைப் பாடியுயிர் மலர்ந்திங்கு அண்டும்
அன்னவனை நீயெண்ணி அயர்கின்றா யென்று
அரசர்அறிந் தால்ஐயோ ! ஆவேசம் பொங்கிச்
சொன்னவரைக் கொன்றுஅழித்து சொர்க்கநிலை ஈயச்
சொல்லிடுவான் ஓ! விதியின் சோதனையோ இன்னே

மறந்திடுவாய் !" என்றெழுந்து மலர்க்கரத்தால் போற்றி
மன்றாடி வேண்டினளே ! மேனகையும் ஆங்குத்
திறந்திடுவாய்த் தடுமாறத் திகைத்துயிர்த்து நின்றாள் !
தீவளரும் நெஞ்சுடைய திருமகளோ, "தோழி !
'இறந்திடுவாய் !' என்றென்னை இந்நிலையில் விட்டு
இரக்கமின்றிச் செல்குதியோ ? ஈதுஎன்னே ! ஆவி
கறந்திடுவாய் ! வா ! சாவே ! காதலொடு வாழ்வோ ?
காலனொடு வாழ்வோ ? யான் கண்டறிய வேண்டும் !

உண்டாக்கிக் கவியமிழ்தை ஊட்டுகின்ற இன்ப
உல்லாச நற்கவிஞன் உயர்கரத்தில் என்னைச்
செண்டாக்கி என்னுயிரைச் சேவடிக்கீ ழாக்கிச்
செய்கின்ற நல்லன்பு சேர்த்தெடுத்த வாழ்வைக்
கண்டாக்கிப் பூந்தென்றல் காற்ருக்கி வாழும்
கலையாக்கி நிலையாக்கிக் கற்பகத்தில் மொய்க்கும்
வண்டாக்கி நீர்மையுற வளமாக்கி இந்த
வையமதில் சீர்திகழ வைத்துயர்வேன் கண்டாய்!"

நீண்டெழுந்து வைரமுற்ற நெடுங்காதல் வேக
நிலையறிந்து மேனகையே நெஞ்சுருகிச் சொன்னுள்:
"ஆண்டெழுந்த வேந்தர்குல மான தமிழ் நீந்தும்
அழகுஅனமே! நோயறியா அகம்குலையவேண்டாம்!
மாண்டெழுந்த நின்னறிவு மாட்சிமைக்குத் தக்க
மணவாளன் அம்பிகா பதிஅறிவேன்! அந்தோ!
ஈண்டெழுந்த நின்காதல் இனிதென்ற போதும்
இன்னலிலே சீர்குலைந்து ஈனமுற்றுப் போமே! (12)

நிலையாக வாழ்வமைத்து நீங்களுந்தான் கூடி
நீக்கமற எந்நாளும் நின்ருளிரும் காதல்
மலையாகத் தேதவழ்ந்து மகிழ்ந்திருக்க ஆளும்
மன்னவனின் கோல்விடுமோ? மனத்தகத்தே அச்சம்
அலையாகத் தோன்றியெனை ஆழ்த்துகிற(து) அந்தோ!
ஆரணங்கே! விண்ணகத்தின் அம்புலியின் கூடும்
கலையாக உன்னுரிமைக் காதலின்று சேரக்
கண்டாலும் பின்மறைந்து கட்டோடு போமே!" (13)

பலவாறு வருந்துயரப் பாடனைத்தும் காட்டிப்
பதறியன்பு மேனகையும் பகுத்துரைத்து வந்தாள்!
"நிலவாழ்வு ஈண்டிருந்து நிலையுற்று என்றும்
நிற்பதுவோ? செந்தமிழில் நீர்மையுறப் பாடும்

குலவாழ்வுப் பாவலனைக் கூடிவிட்ட நெஞ்சம்
குடதிசையின் நீர்க்கடலாய்க் கொந்தளிக்க, நீஎன்
நலவாழ்வை நாடாது நாடிவந்து ஏதோ
நலிவுரைகள் வீசுகின்றாய்! நட்புடைய நங்காய்! (14)

பெருகிவரும் காதலெனைப் பியத்தொழிக்கு முன்னே
பேணுவையோ ?" என்றலறிப் பெருமலையி னின்று
உருகிவரும் நீரருவி உவமையதும் தாழ
உளங்குமுறி விம்மிவிம்மி உருக்குலைய கண்ணில்
கருகிவரும் நீர்வடித்துக் கதறியழு தாள்! வல்
கல்லுடைய நெஞ்சமது கண்டாலும் சற்றுப்
பருகிவரும் கருணையெனும் பண்பமிழ்தை என்றால்
பாதமுறு பாங்கியும்தான் பார்த்திருத்த லுண்டோ ?

" ஆடாத உன்னுளிரும் அகச்சுடரைக் காதல்
அடும்சூறு வளிபிறந்து ஆட்டியது! நேர்ந்து
கூடாத காதலென்று கூறியுன்றன் ஆவி
குன்றஇனி யான்விட்டுக் குறைமொழியே னுள்ளம்
வாடாதே! அருங்காதல் வாய்ந்திடுவாய்! ஓங்கி
வயங்குமுயர் வாழ்வுறுவாய்! வையமதில் யாரும்
தேடாத நல்லின்பத் திருவுற்று நீயும்
தேன்குடத்துவண்டாவாய் தேர்!" என்று சொன்னாள்.

வேங்கையிலங் கும்கொடியான் வெற்றிகுலோத் துங்கன்
வேண்டிமனம் முந்தோட வேட்கைமிக நாடி
ஆங்குஅயில்வேல் கண்ணிஅம ராவதியைக் காண
ஆர்ந்தடைந்தான்! வெங்காதல் ஆற்றாத கீதப்
பூங்குயில்தன் பூங்கரத்தால் பொங்கிவரும் வெய்ய
பூசலுறு புன்கண்ணீர் புதைக்கலுற்றாள்! அச்சோ!
ஓங்கியெழு நீரலையோ(டு) ஓசைகடல் தன்னை
ஒருசிறிய மலர்க்கரந்தான் ஒளித்திடலு மாமோ? (17)

கண்ணிரண்டால் தன்மகளின் கலையாரும் சோதிக்
கவின்முகந்தான் அழுதழுது கவலையினைத் தேக்கி
விண்ணிருண்ட தேபோன்று விளங்குவதைக் கண்டு
வெய்துயிர்த்து வாடியே விரைந்தோடிச் சென்று
தன்னிரண்டு வன்கரத்தால் தழுவியவள் துன்பின்
தரமறிய வேவிளித்துத் தாதியினை நோக்கிப்
''பண்ணிருந்த என்குலத்துப் பாவைக்கு யாதோ ?
பகர்!''என்றத் தீந்தமிழ்ப் பாரவனும் கேட்டான். (18)

''கவியமரர் கம்பருடைக் காவியத்தை மேவிக்
காதலினால் பகலிரவும் கண்துயிலா தேந்திப்
புவியமரும் சீர்விளைத்த புரவலனே ! நின்றன்
புதல்விஅதில் ஆழ்ந்துமயல் பூக்கலுற்று நாடிச்
செவியமிழ்தை உண்டமையால் செம்மலர்போல் மேனிச்
செவ்வியிழந் தேவெய்ய சுரமுற்றாள் !'' என்று
பவியமதோ(டு) அவளுரைத்தாள் ! பாராளும் மன்னன்
பைந்தமிழ்பால் பெண்ணுற்ற பற்றதனைக் கண்டான்.

''காருடைய விண்முகில்போல் கவிதைமழை பெய்யும்
கவியரசர் புரந்தளித்த காவியந்தான் தொட்டார்
யாருடைய நெஞ்சைத்தான் அள்ளாது ? பற்றி
அடிமைகொளா(து)? என்னுயிரே! அன்புமகளே நற்
சீருடைய அப்பெருநூல் சிருட்டித்த கம்பர்
சீர்பெரிது ! பேர்பெரிது ! சிறுமண்ணை யாளும்
தாருடைய வேந்தரெலாம் தலைவணங்கும் இன்பத்
தமிழிசைக்கும் பாவாணர் தரம்பெரிது பெரிதே! (20)

கல்வியொளி பொங்குசுடர் கவிகம்பர் தன்னைக்
கண்டெடுத்த இந்நாடு, கலைக்கோயி லென்று
சொல்வியக்க நறும்புகழ்த்தேன் சொட்டபுவி மீதே
சோபிதமுற் றேயோங்கித் திகழ்கின்ற தன்றோ ?

நல்வினையோ ? நற்றவமோ ? நற்றமிழ்தேர் கம்ப
நாடரையே பெற்றுயரும் நற்கருமம் கொண்டோம்
அல்விலக்கும் காவியத்தில் ஆழ்ந்துறையும் நின்றன்
அறிவினிது வாழ்ந்துயர்க ! அருந்தமிழும் வாழ்க !

மீன்தனக்கு, நீர்நிலையை மீண்டேகி மண்ணை
மேவியக்கால் வாழ்வுண்டோ ? மேதினியைச் சூழும்
கோன்தனக்குத் தன்னிலத்தின் கோடதனை விட்டால்
கொண்டுரைக்கும் நற்சிறப்பு கூடுவது மேது ?
வான்தனக்கு அழகுதரும் வண்ணமதி யன்னாய்!
வண்டமிழால் நல்லமிழ்தால் வளர்கின்ற தீஞ்சொல்,
தேன்தனக்கு வீழ்ச்சிதரும் தீங்கவிவா ணர்க்குத்
தேர்கின்ற புகழ்எங்கும் சேர்கின்ற தன்றோ ! (22)

என்றுன்நன் னீருடைய ஏர்நாட்டு வேந்து !
ஏக்கமுறு நெஞ்சுடைய எழிலரசி தானும்
" மன்று, ஆன்ற நற்றமிழின் மணிப்புலவர் தம்மால்
மாட்சியுற்று ஓங்கியது! மார்தட்டி நின்று
அன்(று)ஆன்ற நூல்காத்த அம்பிகா பதியின்
அறிவெளிதோ ? நீராழி அனையதென(து) ஐய !
கொன்றுனன்(று) ஒட்டருடைக் கோள்கெட்ட வாதக்
கோரத்தை" என்றாளே கோமகளுந் தானே. (23)

" ஆமறிவாய் ! கண்மணியே ! அம்பிகா பதிதான்
அருந்தமிழ்க்கு வாய்ந்தபெரும் ஆக்கம் ! உயர் கம்பர்
தாமறிவார்! சொல்லுயர்ந்த தமிழ்ப்புவிக்குத் தன்சேய்
தனிச்சுடராய் நின்றொளிரும் தாவுபுகழ் கொண்டு
ஏமறிவான் என்பதனை ! ஏற்றினுக்கு அற்ப
எலியதுவோ வாய்த்திடும் ? என்னன்பே ! கண்டு
நாமறிவோம் ! கம்பரைப்போல் நானிலத்தில் சென்று
நற்றமிழ்க்குப் பெருவாழ்வு நல்கிபுகழ் சேர்வான்.(24)

இன்னென்று நீயறிவாய்! இனியதமிழ்ப் பாவால்
இயற்றுகின்றன் கோவையது இளங்காளே !" என்று
தன்னென்றும் நெஞ்சுவகைத் தரமெல்லாம் மன்னன்
தகைசால உரைத்தகன்றன்! தார்வேந்தன் பெற்ற
பொன்னென்று பெற்றுவிட்ட பொங்கிவரும் காதற்
போது, அந்த வெம்மையினல் பொலிவுற்று வாசம்
மன்னென்றி இதழ்விரித்து மலர்ந்ததுவே! அந்த
மங்கையே நிலைகுலைய மயங்கியுளம் கெட்டாள். (25)

" என்றனுயிர் மேனகையே! என்னருமைத் தோழீ!
எந்தையுரை நோக்கினையோ? என்காதல் தன்னைச்
சென்றவர்பால் யான்பணிந்து செப்புங்கால் நாடிச்
செயல்முடிப்பார்! ஐயமில்லை! செந்தமிழை நாளும்
நின்றமையப் பாடுகின்ற நெடுந்தகையை மேவ
நீவிரைந்து செய்தருள்வாய்! நீள்விழியே! நெஞ்சை
வென்றவரைக் கண்டணைத்து வேகின்ற காதல்
வெம்மையினைப் போக்கவழி வேண்டுமடி அந்தோ!

என்னுவி சோர்கிறதே! ஏதுசெய்வேன்? காதல்
எறிகடலில் என்னிதயம் இயக்குநரில் லாத
பொன்நாவாய் போன்றுழன்று போக்கறியா தேங்கிப்
போய்மூழ்கி மாய்கிறதே! பொங்குதமி ழாளும்
மன்னு! ஓ! நல்லறிவு மலையே! ஓ! மின்னும்
மணியே! ஓ! ஐம்புலனும் மயங்கிஇன்று கொண்ட
தன்னுடல் நீத்தெழுந்து தாக்குகின்ற காதல்
தாவுபுயல் வாய்ப்பட்டுத் தவிப்பதனைக் காணுய்! (27)

என்செய்யக் கடவேனே? ஏந்திழையே! ஐயோ!"
என்றயர்ந்து மூச்செறிந்தாள் ஊதுலையாய்! வண்டு
பண்செய்யுங் கோதைஎழில் பாவைநிலை கண்டு
பாங்கிமனந் தளர்வுற்று ஏங்கினளே! "சொக்கப்

பொன்செய்ய மேனியளே ! பொங்காதே ! தேகம்
பொசுக்குதுயர்தீர்!இன்னே போய்அவன் தன் நின்று
மின்செய்யும் தோள் அடைய, மெல்லியலே ! செய்வேன் !
மிகுங்காதல் கைகூட மேவிவழி செய்வேன் ! (28)

திடங்குறையா தே ! உளமே தேற்று'' என்று சொன்னாள்!
தேவிமகிழ்ந்(து) " ஏகினள(து) ஆவியதி லேறும்
விடங்குறைய நன்மருந்தை விருந்தாம மிழ்தை
விரைந்துகொணர் வாய்செல்க விரைந்தினிதுசெல்க
மடங்குறையா நற்குணத்து மாமகளே ! செல் ! செல் !
மயங்காதே!'' என்றவளை மண்ணுள்வோன் பெற்ற
நடங்குறையாத் தோகைமயில் நல்லியலாள் இன்ப
நலங்கொணரச்செலுத்தினளே நாட்டமொடுதானே!

வெண்பா

கோத்த மணிபுரளும் கொங்கை இளங்குபிலும்,
கூத்தனும், யாவும் கொதிப்படைய—பூத்த
அருங்காதல் தீயும், அழுக்காற்றுத் தீயும்
ஒருங்காற்றிக் கொண்டார் உளத்து. (30)

3. அடைக்கலக் காதை

“செம்பியன் பெற்ற செழுந்தேனே! உன்காதல்
நம்பியைக் கண்டணுக நானோர் வழியுரைப்பேன்!
கன்னித் தமிழ்நிலத்தின் கண்போல் திகழுமுயர்
பொன்னி நடைபயிலும் பொற்கரையி லோங்குகின்ற
வண்டாடி யாடி வயங்கு மிசைபொழிந்து
கொண்டாடிப் பாடிக் கொழிக்கும் நறவருந்திக்
காதலால் நீங்காது கட்டுண் டயர்வுற்றுப்
போதலா லேயிருண்டு போகின்ற வண்ணமலர்ச்
சோலை இடத்துகவிச் சோதி வருவதுண்டு
வேலை நிகர்விழியாய்! வேள்அம்பி காபதியே!
ஆங்கு அடைந்துன் அருங்கா தலையிசைப்பாய்!
மாங்குயிலே!” என்றுரைத்தாள் மேனகையே! கன்னல்
அமரா வதியும் அகமகிழ்ந்தாள்! “மேவித்
தமரா யுனையடைந்தேன்! தப்பினேன்! இல்லையேல்
ஆவிக்கு உற்ற அரணின்றி யேமடிந்(து)இப்
பாவி அழிந்திருப்பேன்! பாய்ந்துவரும் காதல்
புலிக்குப் பலியாகிப் போயிருப்பேன்! என்றன்
நலிக்கு மருந்தளித்தாய்! நங்காய்!ஓர் கைம்மாறு
உண்டோ அடி!உன் உதவிக்கு? நாளையே
பண்டோய் இளங்கவியைப் பார்த்து மனங்குளிர்வேன்!
நேச முறுசகியே! நேரிலே சென்றென்னை
ஆசைக் கலைஞனுக்கு அர்ப்பணிப்பேன்! காதல்
அடையவே பெற்று அனங்கனையும் அன்னோன்
படையதுவும் கண்டு பழிவாங்கி வென்றிடுவேன்!
மேவா மலர்களையும், மென்தென்றல் காற்றினையும்,
மாவா னிடைநேர் மதியினையும், தான்மகிழ்ந்து

நண்பாடி ஏற்பேன்! நல்லுறக்கங் காணாத
கண்பா டுறுவேன்! களிப்பேன்"என் றோடிப்போய்
பாங்கி யவளைப் பரிவோ டணைத்துயிர்த்தாள்!
" ஓங்கி விசும்பிருக்கும் ஒண்கதிரே! நீமறைந்து
நாளை விரைந்தெழுந்து நண்ணுவாய்!" என்றந்த
பாளைச் சிரிப்புடைய பைங்கொடியும் சொல்லிப்
பணிந்திட்டாள் சோதிப் பகலவனை! வானை
அணிந்திட்ட வெண்மதியும் ஆங்குச் சுடர்நெருப்பை
அள்ளித் தெளித்த(து) அவனியுடை யோன்கொடியும்
துள்ளித் தளர்ந்து துடித்தழுதாள்! ஆலையிலே
பட்ட கரும்பேபோல் பாவை இருவிழியும்
வட்ட குளிர்நிலவு வன்பொறியில் சிக்குண்டு
ஆறாய்க்கண் நீர்ஒழுக்கி, "ஐயகோ! பொன்னுடலை
நீறாய்க் கழிக்கத்தான் நீள்மதியே! வந்தனையோ?
விண்ணகத்தில் நின்ற விரியிருள் அத்தனையும்
என்னகத்தே சேர்க்க எழுந்திங்கு வந்தனையோ?
காதல் அனலில் கருகுகின்ற என்றனுக்குச்
சாதல் அருளத்தான் சார்ந்திங்கு வந்தனையோ?
காலன் உரைகேட்டுக் கன்னிஎன் சிற்றுயிரின்
மூலம் அறுக்கத்தான் முன்னெழுந்து வந்தனையோ?
செல்லாய்! சுடர்மதியே! செம்மை நெறியகற்றும்
பொல்லா விளக்கே! பொதிபோல்என் ஆருயிர்க்கே
சேர்ந்தாடு கின்றாயே! செத்தேன்! மனக்குலைவு
கூர்ந்தாடு கின்றேன்! குளிர்மதி யென்றுன்னை
ஏனோ புவிமாந்தர் ஏத்துகின்றார்? உன்வலிக்கு
யானோ பெரும்இலக்கு? அந்தோ! அழுங்குகின்றேன்!
நிந்தை நிலையறியா நீதி நிறைகாக்கும்
எந்தை எனதுயிரின் ஏற்றம் கெடுக்கின்ற

வான எரிமதியின் வன்செயலைப் புன்தொழிலை
ஈன மதைக்கடிய ஈண்டு நினைந்திலனே!

மன்னா! வருக! மதியின் கொடுஞ்செயலால்
என்னாவி வெந்தழிந்து ஏகித் தொலைகிறதே!

வேகின்றேன்! வேகின்றேன்! வெந்துயான் வேறுலகம்
போகின்றேன்! போகின்றேன்! பொங்குசுடர் தீயாலே

நோகின்றேன்! நோகின்றேன்! நொந்து அடியவளும்
சாகின்றேன்! சாகின்றேன்! சாக்கா(டு) எனக்கமிழ்து

அன்றோ? சகியே! அனலெறியும் வெய்யமதி
கொன்றோ வதைத்தோ கொளுத்தியெனைத் தீர்த்துவிடும்!

ஆசைக் கவியை அடைந்துயான் நாளைபோய்ப்
பேச, உளத்தைப் பெயர்த்தவன்பால் தான்காட்ட,

காதல் மொழியக், கருத்துரைக்க, இன்பரசம்
ஈதல் புரிய, இதங்கூர, மேவிமகிழ்(வு)

எய்தக், களிக்க, எழிலமுதால் தான்புனைந்து
செய்த திருமேனி சேர்ந்துயிர்தான் சார,

இளமைப் பெருவிருந்தை ஈண்டி மகிழும்
வளமை நிறைவோடு வாய்ந்துபெற, என்றனக்கு
உண்டோ வினைப்பயன்தான்? உய்யு முயர்நிலையைக்
கண்டோங்கும் நல்ல கதியுண்டோ? அன்றி

மரணத்திற்(கு) என்றன் மலியுமிவ் வைந்து
கரணங் களையுந்தான் கட்டோடு ஈயக்

கடவேனோ? தோழீ! கலங்குகின்றேன்!" என்று
விடவேல்நேர் கண்ணாள் விம்மி அழுதாள்!

கதறினாள்! சோர்ந்துயிர்த்தாள்! கண்ணில் அருவி
உதறினாள்! ஏங்கினாள்! உள்ளம் உடைவுற்றாள்!

தீயுண்ட பட்சியைப்போல் திக்கெல்லாம் தானோடி
பேயுண்ட பெண்போலப் பேதை திரியலுற்றாள்!

தோழிக் கெதுவுமே தோன்றவில்லை! "ஆரணங்கே!
ஆழிக் கடல்போல் அமைதியின்றி நீதான்
அலையாதே! வாடி அகங்கெட்டு வீணில்
குலையாதே! இந்தக் குவலயத் தில்காதல்
கொண்டார் அவருள் கொடுமையுரு மல்வெற்றி
கண்டார் வெகுசிலரே! காமன் படையைக்
கடந்தார் மிகச்சிலரே! காதல் மலைமேல்
நடந்தார் எவர்தான் நலியாமல் போய்விட்டார்?
துன்பங் கொடுக்குமித் துட்டநிலா நாளைக்கே
இன்பத் திருவாய் இலங்காதோ? காதல்
புசிக்குங்கால் எந்நாளும் பூரிப்பே! வேறாய்
வசிக்குங்கால் யாவும் வருத்தப் பெருஞ்சுமையே
ஆகும்! தமிழின் அகப்பொருளில் இவ்வாறு
நோகும் வனிதையரை நோக்கி அறிந்ததுண்டு!
இன்றுன்னை நல்ல இலக்கியமாய்க் காண்கின்றேன்!
அன்றுன்னைப் பார்! பார்! அணங்கே! இசைக்குயிலே!
வானோடும் வெண்மதியை வாழ்த்தியே 'மேனகையே!
ஏனோடி இந்நிலவு என்றும் இருப்பதில்லை!'
என்றென்னைக் கேட்பாய்! அதற்குயான் 'ஏன் அம்மா!
கொன்றுன்னைப் போடும் கொடியமதி தன்னைப்போய்
நாடுகின்றாய்' என்று நகைப்பேன்! சரி! வா! வா!
நீடுகின்ற துன்ப நிலையொழிக்க வேகால்
அதர்வழியை மூடிவிட்டு அம்புலியோ டூடி
மதர்விழியாய்! கண்துயில்வோம்! வா! வா! மகிழ்வதனைக்
காலைப் பருதி கருதிக் கொணர்ந்திடுவான்
சோலை இடத்(து)" என்று சொன்னாள்! அமரா
வதியும் படுக்கையெனும் வன்முள்ளில் சேர்ந்தாள்!
மதியும் மறைந்ததே மற்று.

பொன்ஞெளியை விண்பரப்பிப் பொங்கும் பலவகையாய்த்
தன்ஞெளியின் வண்ணத் தரமெல்லாம் காட்டி
அமுதாய சோதி அழகெல்லாம் என்றும்
தமதாய தென்று தருக்கோடு விண்ணகத்தே
நாட்டி, விழிமுகிழ்த்த நானிலத்தார் தம்முளத்தை
மீட்டி, மலரினங்கள் மின்ஞெளிரக் கண்விழித்து
சிங்கார மாகச் சிரிக்கவைத்துக், கற்றறிந்தார்
அங்(கு) ஆரச் சோர்ந்து அகமுகங்கள் எல்லாமே
மங்கித் தளர்ந்து மறைகின்ற புல்லரைப்போல்
பொங்கி விசும்பிருந்த பொன்நிலவும் மீனினமும்
போய்அகல வந்தான் பொழுதுக் கதிபதி
யாய் அகல ஆளும் அருணன்! உயிரினங்கள்
யாவும் இயக்கும் அருளின் பொருளன்றே?
தாவும் மகரம் தவழ்கின்ற காவிரியும்
வெள்ளி உருகிவந்து வெண்மணலில் செல்வதுபோல்
அள்ளிப் பருக அமுதளிக்கும் வள்ளலைப்போல்
ஊர்நடுவே நின்ற உயர்கனி நன்மரம்போல்
கார்நடுவே நின்ற கதிரொளியின் வெள்ளம்போல்
பாய்ந்து நிலவிப் பரவியதே! பூத்தொளிரும்
தோய்ந்த நறுமலர்த் தோகைவிரித் தாடும்
மயில்போல நிற்கும் மலர்ச்சோலை யொன்று
அயலேயாங் குண்டு! அதிலே அமுதநீர்ப்
பொய்கை அதுவுண்டு! பொங்கி இசைவிருந்து
செய்கை விழைந்தாடிச் செல்லுகின்ற வண்டினங்கள்
கண்துயிலும் வண்ணக் கமல மலருண்டு!
மண்துயிலு மோங்கும் மரத்தின் மிசையிருந்து

பாடும் குயிலுண்டு! பட்சிகள் தம்மினத்தை
நாடுமுயர் காட்சி நலமுண்டு! பூங்கொம்பை
முல்லைக் கொடிசென்று முத்தமிட்டுத் தான்படரும்
எல்லையிலா இன்ப எழுச்சியாங் குண்டு!

அழகுப் பெருந்தெய்வம் ஆங்கிருந்து ஆட்சிப்
பழகுவதை யாவருமே பார்க்கலாம்! நின்றோங்கும்
ஆல மரமொன்று ஆற்றைப் பணிவதனைப்
போல நெருங்கிப் பொலிந்தெழுந்து நின்ற(து)அதன்
தண்ணார் நிழலின்கீழ்த் தான்இருந்து செந்தமிழின்
பண்ணார் கவிஅம்பி காபதி வீற்றுக்
கவிபுனைவான்! நல்லின்பக் காட்சி மகிழ்வான்!
புவிபுனைவான் கீர்த்தி புலவன் இளங்காளை
அன்றங்கு வந்தான்! அமர்ந்திட்டான்! 'ஆ! ஆ! ஆ!'
என்றங்கு தோய்ந்த எழிலை வியந்திட்டான்!

கற்பனையின் வாசல் கதவம் வழிதிறக்க
அற்புதமா மின்பம் அமையும் கவியமுது
பொங்கியது! கோவை புனைவதிலே போய்உளம்தான்
தங்கியது! நற்கவியும் தன்னை மறந்திட்டான்!
ஏடெடுத்தான்! நாடி எழுதினான்! செந்தமிழில்
ஈடெடுத்த லில்லா இன்பக் களிதுள்ள
காதல் நெறிதெளியக் காட்டும் அகத்துறையில்
நாதமுறப் பாடி நயந்திருந்தான்! அப்போது
விண்ணெதிரே வாழும் விரிசுடர் மாமதியே
கண்ணெதிரே வந்ததுபோல் காட்சி யதுவொன்றைக்

கண்டான்! வியந்தான்! களிகூர்ந்து வாய்மலர்ந்தான்:
"தண்டா மரையின் தலைமகளோ? வான்மகளோ?
நெஞ்செழுந்த கற்பனையே நேரில் வடிவெடுத்து
வஞ்சியென என்முன்னே வந்திங்கு நின்றதுவோ?

கன்னி உருக்கொண்டு காட்சி நலங்கொணர்ந்து
பொன்னி விழிமுன் பொருந்த அடைந்தனளோ ?
கன்னல் அமுதோ ? கலைச்சுடரோ ? நாறுகின்ற
வன்ன மலர்விரித்த வஞ்சிக் கொடியோ ?
அழகுஅமுதா லான அரும்சித் திரமோ ?
பழகுஅமுதாம் செந்தமிழ்ப் பாகின் பெருந்திரளோ ?
காமன் விடுத்த கணையோ ? உயிர்கவர
ஏமன் புரிந்த எழில்சூதோ ? அன்றியென்றன்
ஆவிக்கு வந்துவிட்ட ஆபத்தோ ? பேரெழிலார்
தேவி இவள்யார் ? தெருட்டாது வந்துற்றாள் !

வேறு

மாவின் கொழுந்தளிர் ஈன்றுபொற்
கோங்கிடை வந்தரும்பி
மேவும் கமலம் மலர்ந்(து)அல்லி
வாய்விம்மு தேன்பொழிந்து
தாவும் சிறைவரி வண்டினம்
கொண்டு தழைஅவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண்
டேகண் களிகொண்டதே !

திருவோ ? வரையுறை தெய்வங்கொ
லோ ? தெண் திரையமுதின்
உருவோ ? வளர்கொல்லி ஓவிய
மோ ?உயர் வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக
ளோ ?அன்றி மானிடமோ ?
தருவோடு வல்லி தழுவும்தண்
சாரலில் தாழ்குழலே ! *

மாத ரினங்காணு மாமணிபோல் மின்னொளிரும்
சீத மதிவதனச் சித்திரமே ! நீ யாரோ ?

---

* அம்பிகாபதிக் கோவை—2, 3.

கண்செய்த நற்றவத்தால் காண மலர்ந்தெழுந்த
பண்செய்த செந்தேன் பனிமலரே ! யார்? மொழிவாய்

உள்ளத்தில் பொங்கும் உணர்வைத் தவழ்காதல்
வெள்ளத்தைக் காட்டும் விரிகடலே! யாரோநீ ?

கண்படையால் வெட்டிக் கதிகலங்க என்நெஞ்சில்
புண்படைத்த வெற்றிப் புதுப்பகையே ! யாரோ ?ஓ!

நோயும் கொடுத்துவிட்டு, நோய்மருந்து மாகியிங்கு
தோயும் நகைவிரித்த தோகைமயி லே!யார் ? யார் ?

யார் ?யார் ? அறியவுரை ! ஆரணங்கே ! ஏதுனது
ஊர் ?ஊர்? எனக்கு உரை "யென்(று) அருங்கவியும்

கேட்டானுய்த் தன்னுறுதி கெட்டவுயிர் தான்சுமக்க
மாட்டானுய்ச் சோர்ந்து மதிமயங்கி நின்றிருந்தான்

அன்ன மதுபோல் அமரா வதிக்கொடியும்
மின்னல் நகைதவழ மேவி அவன்பால்

அடைந்து வணங்கி அவனுள்ளம் தூளாய்
உடைந்து பொடியாய் உதிரப் பலபலவாய்

வண்ணமெலாம் காட்டி வரிநெடுங்கண் வாள்காட்டி
எண்ணமெலாம் காட்டி எழில்காட்டித் தானுற்ற

காதல் பிணிகாட்டிக் கண்வழியே தன்னுணர்வு
நாத மெலாங்காட்டி நங்கையவள் தன்கூர்

விழியால் அவனழகு வீக்கத்தை யெல்லாம்
கொழியா விருந்திட்டாள் ! கொவ்வை அதரம்

துடித்தாள் ! அவனழுகுத் தோற்ற மதுவைக்
குடித்தாள் ! இருவர்தம் கூர்விழிகள் தாமும்போய்க்

கூடிக் கலந்து குறைபோகப் பேரின்பம்
நாடிக் குலவி நயந்து மகிழ்பூத்து
நேசம் மிகப்பூண்டு நேர்ந்து மயங்கின!சேர்
வாச மலர்க்கோதை வாய்மலரா(து) ஆதவன்முன்

நின்ற குமுதம்போல், நீடுகின்ற நாண்சுமந்து
ஒன்று முரையா திருந்தாள் ! அருங்கவிதான்
ஏடும் வரையும் எழுத்தாணி யும்எறிந்து
நாடு மெழில்சோதி நங்கை யவள்பாலே
சேர்ந்திட்டான் தேன்பழுத்த செந்தா மரைமுகத்தைக்
கூர்ந்திட்டான் ! "நாணம் குறுக்கிட்டு வேலியது
போட்டாலே நாழிகைதான் போகாதோ வீணய் !என்
பாட்டாலே சொல்லிப் பகரரிய பேரமுதே !
ஆயிழையே நீதான் அகற்றெ" ன்ருன் ! அவ்வுரையால்
தீயிலே சேரத் திரிந்துருகும் மென்மெழுகாய்க்
கொண்ட பெருநாணம் கோல்விடுத் தேகியதே.
" கெண்டை விழிமாதே ! கேடொழிய வாய்மலர்ந்து
நாறும் மொழித்தேன் நயந்து அருளாயோ?
கூறு இனிது" என்று கூறினன்! மாதரசி,
"பாவால் அமுதூட்டிப் பாரகத்தைப் பாரிக்கும்
நாவா லுலகாளும் நாயகனே! உன்பால்
அடைக்கலமாய் உற்ற அபலே!" எனவே
கொடைக்களவு காணுத கொற்றவன் பொற்கொடியும்
சொன்னுள் ! விழிநீர் சொரிய அடிபணிந்தாள்
"மன்னு ! எனேயே மறுக்காது ஏற்றருள்க"
என்று இறைஞ்சி எதிர்நின்ருள் ! அன்னவனும்
கன்றும் திருவதனக் கண்மலர்கள் ஏற்றுநின்ற
பொங்கும் விழிநீரைப் பொன்னுடை யால்போக்கித்
" தெங்கிள நீரின் தெளிவே ! மதுக்குடமே !
செந்தா மரையமர செய்யதாள் நல்லன்னம்
வந்தார்ந் ததுபோன்று வண்ணமலர்ச் சோலேயிலே
நாடி எனேயடைந்தாய் ! நல்லமுதே ! ஏன்கவன்று
வாடிக் கலங்கி வருந்தி அழுங்குகின்ருய் ?

ஈசன் அருளன்றோ ? இன்னிசைப் பூங்குயிலே
நேசமுடன் கூட்டிநமை நேர்படுத்திச் சேர்த்ததுநற்
குற்றாலத் தீநீர் குளிரருவி தன்னகத்தே
உற்றார மூழ்கி உளங்குளிர ஒப்பாத
பேதை யுருமுண்டோ ? பேசும் பசுங்கிளியே !
பாதை யடைந்துவிட்டோம் ! பாடி வழிநடப்போம் !
அஞ்சாதே ! வா ! வா ! அமுதே" எனச்சென்று
விஞ்சாத காதல் விளைத்த சுடர்க்கொடியைத்
தேற்றி யணைத்திட்டான் ! "தேடிக் குளிர்தென்றல்
காற்றினிலே பாடிவந்த கார்க்குயிலே ! ஈடறியா
மூத்த அழகின் முடிபொருளே ! எக்குளத்தில்
பூத்தமலர் நீ ? சொல் ! புரியவெனக் கெல்லாம்
அறிய வுரைப்பாய்" என்(று) ஆகும் தமிழின்
நெறியுணர்ந்த அன்னவனும் நேச எழில்மணியைத்
தான்கேட்டான் ! வந்து தரம்பாடி வண்டினங்கள்
தேன்கேட்ட செக்கர் இதழுடைய தேவியுந்தான்
"பண்ணாளும் செந்தமிழின் பாவேந்தே ! இச்சோழ
மண்ணாளும் வேந்தன் மகள்யான் அமரா
வதிகாண்" எனமொழிந்தாள் ! வஞ்சிமொழி கேட்டுக்
கதிகாண மாட்டாக் கவிஞன் சுடர்கனிந்த
தீக்கொண்ட வெம்மை தெரியாது கைத்தொட்டு
தாக்குண்ட மென்சொல் தளர்க்குழவி யேபோன்று
மீண்டான் ! பெருகி மிகுங்காதற் பேருணர்வை
ஆண்டான் ! தயங்கா(து) அறைந்தான் அவள்பாலே :
"மன்னரினம் சூடும் மலரே ! விடநாகம்
தன்னரிய உச்சித் தலையில் திகழ்கின்ற
நாக மணிபோன்ற நங்காய் ! குருதிமணம்
போகும் சுடர்வேல் பொலியும் வளநாடன்

ஆருயிராய்க் காக்கும் அரிய பெருந்திருவாய்ச்
சீருயரும் நீஎங்கே? சீரார் தமிழில்
கவிபாடி வாழ்வியக்கும் கம்பன்சேய் எங்கே?
புவிபாடிப் போற்றும் புரவலன்தன் பொற்பாவாய்!
போரமரும் வெற்றிப் புகழ்வேந்தின் மின்சுடரே!
ஆரமுத முண்ணும் அமர நிலையிருக்க
கள்ளுண்ண ஏனோ கருதி யழிகின்றாய்?
உள்ளுண்ணும் தீய உணர்வை அகற்றிவிடு!
தீய விருப்புற்றாய்! தீமைப் பெருங்கடலில்
போய்அந்தோ! வீழப் புகுகின்றாய்! உன்நினைவைப்
போக்கு! நலம்திகழாப் பொல்லாத காதலினை
நீக்கு! எனையே நினையாதே! போ! போ! போ!
காப்போன்தன் மாமயிலே! காதல் சுடர்காட்டித்
தீப்போன்று வந்தாய்! திருவும் பெருவாழ்வும்
பேரும் புகழும் பெருமிதமும் தான்பொடியாய்த்
தீரும் அறிவாய் திரும்பிப்போ! போ! என்
வயிர மனத்தையுன்றன் வாள்நெடுங்கண் வீச்சால்
செயிரால் பிளக்காதே! செல்!செல் மறந்து"என்றான்!
மங்கை திகைப்புற்று மாளாத் துயரடைந்து
பொங்கித் தவித்துரைகள் போக்கினாள்: "எங்கோனே!
ஆசை எருவிட்டு அகத்தே பெருங்காதல்
பாசமெனும் அந்தப் பயிரை வளர்த்துவிட்ட
ஏழைக் கிரங்கி அருளாயோ? உன்இதயப்
பேழைக்குள் நின்றொளிரும் பேரன்புச் செல்வமெலாம்
தாராயோ? நல்வாழ்வு தாராயோ? காதல்தேன்
தாராயோ? ஏனோ தயக்கம்? நிலமாளும்
மன்னனுக்கு வாய்த்த மகள்என் றிருந்தால்ஏன்
பொன்னெனக்குக் காதல் புரிய உரிமை

கிடையாதா? காதல் கிளர்ச்சிபோல் வாழத்
தடையாதும் செய்ய தரும நெறியுண்டோ?
மன்னவன்யார்? வாழ்கின்ற மக்கள் குலத்தாரின்
நன்னலத்தைக் காத்தற்கு நாட்டார் நியமித்த
ஆள்தானே? பாவேந்தே! அன்னவனும் தான்கொண்ட
வாள்தானே சீறி வரவும் முறையுண்டோ?
நீயும், தமிழ்த்தென்றல் நீந்திப் பரந்துலவிப்
பாயும் திசையெல்லாம் பாவாலே வென்றாளும்
கொற்றவன் கம்பன் குலத்துக் கொழுஞ்சுடராய்
உற்றவனாக உயர்ந்திருக்க, எந்தை
நமது பெருங்காதல் நாட்டத்தை அந்த
அமுதைச் செவியுண்டு ஆத்திரமுங் கொள்வானோ?
கோவேந்தன் தன்குலத்துக் கொம்பும் தமிழ்கண்ட
பாவேந்தன் தன்மகனும் பாரில் இணைந்துயர்ந்து
வாழ்ந்தால் எவரே வரவேற்க மாட்டார்கள்?
தாழ்ந்தால்தான் என்ன? தமிழ்க்கடலே! காதல்
கரும்பின் சுவைகாண்போம்! கண்டு திளைப்போம்!
பெரும்பித்தப் பேருலகம் பேணாது விட்டுவிட்டால்
காதற் பெருவானில் காணுகின்ற சோதியாய்
ஏதமின்றி வாழுதற்கு ஏகுவோம்! மன்னன்
கழுவேற்றினாலுமன்றி காலன்போல் சீறிப்
புழுவேற்றுத் தின்னவென்றன் பூத உடலத்தைப்
பட்டிக் கடாபோன்று பாரா(து) அருளின்றி
வெட்டிக் குவிக்க வெறிகொண் டெழுந்தாலும்,
பொல்லா விலங்குகட்குப் போகும் இரையாக
நல்லா ளெனைக்கடிந்து நல்க விழைந்தாலும்,
உச்சிமலை நின்று உருட்டியென் ஆருயிரை
நச்சிக் குடித்துவக்க நாடிச் சினந்தாலும்

கொண்டாடிப் போற்றிநின்ற கோதை யெனைவாளால்
துண்டாடித் தீர்க்கத் துணிந்து நினைந்தாலும்,
கன்னி யெனக்குக் கடுகளவும் அச்சமில்லை!
என்னிடத்தில் இன்று எழுந்துள்ள காதல்
கொடுக்கும் துயரக் கொடுமையினும், வேந்தன்
விடுக்கும்அத் தண்டமெலாம் வேதனை சான்றனவோ?
காளையே! நீநற் கருணையுட னேபொன்னார்
தாளைத் துணைகொடுத்தால் தப்பி யுயிர்வாழ்வேன்!
'பிச்சை யுனக்கில்லை! பேதாய்! அகல்' என்று
இச்சைக் குறுதி இலாத வுரைவிடுத்துக்
கைவிட்டுப் போகக் கருதினால் என்னுயிரும்
மெய்விட்டு வானுலகம் மேவக் கருதிவிடும்!
உன்னோடு காதல் உறவின்பம் கண்டுவந்த
பின்னோடி ஆவி பிரிந்து விடைபெற்று
நீங்கட்டும்! இவ்வையம் நீங்காப் பெரும்பழியைத்
தாங்கட்டும்! தாங்கித் தளரட்டும்! ஐயா! நீ
கைகூடாக் காதலினால் கன்னிமறைந் தாள்என்ற
பொய்கூடாது உய்ய புகலிடம் காட்டாயோ?
காட்டாயோ? என்றனுக்குக் காட்டாயோ? காதலமு(து)
ஊட்டாயோ?" என்றுஅந்தோ! உற்ற துயர்வடிவாய்
நின்று அலறி, நிலையசையாக் காதற்பேய்
தின்றுவக்க வேபிறந்த தீராத் துயர
அணங்கு துடித்து அவனடியில் வீழ்ந்து
வணங்கிபெருங் காதல் வரங்கேட்டாள்! கம்பன்சேய்
பார்த்தான்! விழிநிறைந்து பாய்ந்தோடுங் கண்ணீரை
வார்த்தான்! வினைபிளக்க வைரமுற்ற நெஞ்சம்
தளர்ந்தான் பெருங்காதல் தாக்கிமிகத் தூண்டக்
கிளர்ந்தான் அழிந்த கிளியைத் தடந்தோளில்

சேர்த்தான் அணைத்தான் செலுத்தினான் மேலும்போய்
ஈர்த்தான் உரைத்தான் : " இசைக்குயிலே ! காதல்
கனியே ! சுடர்மணியே ! கட்டமுதே ! அச்சப்
பனியேயுன் காதற் பகல்தோன்ற தான்உருகி
நீங்கியே சென்றதடி ! நீங்கா நெடுங்காதல்
வாங்கியே நெஞ்சம் வருந்தி யலையுதடி !
காவி மலர்விழித்த கன்னங் கருங்குயிலே !
ஆவியிலே நேர்ந்து அரும்பிய அக்காதல்
பூத்து விரிந்து பொலிவுற்று மேவுதடி !
காத்து மனம்வருந்துங் காரணம் ஏதும்
இனிமேல் நமக்கில்லை ; இல்லை ! மயிலே !
நனிமேவி இவ்வகண்ட நானிலத்தில் நாமினிய
சீரான காதற் சிறப்பை நிலைநாட்ட
ஈரான நந்தம் இனியநல் ஆவியினை
ஒன்றாக அர்ப்பணிப்போம் ! ஓராச் சமுதாயம்
நன்றாக உண்டு நயக்கட்டும்! குன்றாக
ஆடாது நிற்போம் அழிவோம் ! இனித்தயக்கம்
கூடாது நாழிகையும் கூடாது ! கூடிநின்று
சாதற்கு முன்னே, சமுதாயம் வந்துநமை
மோதற்கு முன்னே, முறைகாக்கும் கோவேந்தன்
கோப விலங்குநமைக் கொல்ல வருமுன்னே,
ஆபத்தெல் லாம்நம்மை ஆட்கொள்ளு முன்னே
மணிவிளக்கே ! வண்ண மலர்க்காவே ! காதல்
அணிவிளக்கே ! இன்ப அருவி இமிழிசையே !
காதற் கனிரசத்தைக் கற்கண்டைப் பேரமிழ்தைச்
சீத இளநீரைச் சீவன் நுகர்மதுவை
ஆரப் பருகியே ஆத்ம நலம்பெறுவோம் !
தீரக் கலந்து திளைத்து மனங்குளிர்வோம் !

சீல நெறிமறந்து சீர்வரம்பைத் தான்துறந்து
காலன் மடித்தலத்தில் கண்ணற்ற பேதையைப்போல்
வீழ்கின்றேன் ! உன்றன் விழிக்கஞ்சி யேகேடு
சூழ்கின்றேன் ! கூற்றுச் சுழிபற்றி ஆருயிரைத்
திட்டமிட்டுத் தின்னத் திரிந்து ஒலிக்குதுபார் !
பட்டமிட்ட மன்னன் பயந்த மலர்க்கொடியே!
வேலுற்ற உன்றனுடை வெவ்விழியோ அன்றியந்த
மாலுற்ற மன்னன் மதமோ எனதுயிரைக்
கொள்ளை கொளுமன்றோ ? கோனும் சினந்தெழுந்து
உள்ளம்போல் வந்து உயிரைக் கவருமுன்னர்
காதற் கரும்பைக் கடித்துச் சுவையமுதை
மாதர்க் குலமணியே ! மாந்திக் கொடுங்காலன்
உண்ணக் கலங்கா உறுதியினை, வன்மையினைத்
திண்ண நிலையைத் திடத்தை யடைந்திடுவோம்
தொல்லைப் பிறவி தொடுத்துவிட்ட மாந்தரெலாம்
' இல்லை 'யெனப் பின்நொடியில் ஏகி மறைகின்றார் !
சாவின் அரசின்கீழ் சார்ந்துநின்ற எவ்வெவரும்
தாவின்றி கூடித் தவழ்ந்தே இனிது
சமமுற்று நண்பாடிச் சஞ்சரிக் கின்றார் !
கமமுற்று நிற்கும்நங் காதல் கனவேபோல்
நின்று விநாடியில் நீங்கித் தொலைந்தாலும்
நன்று ! வருக ! நலிவஞ்சிப் பின்னோடல்
ஏது ? இனிவா ! வா !" என்றோடிச் சென்றணைத்தான் !
மாதும் உயிர்த்தாள் மகிழ்ந்து.

வெண்பா

வில்லம்பு போன்ற விழியாள் மனக்கொடியை
நல்லம்பி காபதிபால் நாட்டினளே!—சொல்லம்பும்
மன்னவனின் சீற்ற மலையும் இடையுளதைப்
பொன்னவளும் ஓராது போய்.

4. இன்புறு காதை

(வேறு)

மாலை வளர்மதியம் மல்கும் ஒளியான
பாலை விசும்பென்னும் பாத்திரத்தி லேசுரக்க
சோலைக் குமுதமலர் சோர்வகலத் தானருந்திக்
கோல நறுமலர்ச்சிக் கொண்டு மிளிர்ந்ததுவே! 1

விண்ணுலவும் பட்சி விலங்கினங்கள் ஏனையவை
மண்ணுலவி மேவுகின்ற மாந்தர் எவரெவரும்
கண்ணுறங்க மாவேந்தன் கன்னி இமைப்பின்றி
எண்ணுலவும் நெஞ்சோ(டு) இருந்து மயங்கினளே! 2

காத்திருந்தாள் மாளிகையில்! காதலுடை யான்வரவு
பார்த்திருந்தாள்! காதற் பவழ நினைவுளத்தில்
கோர்த்திருந்தாள்! நல்லழகைக் கோதை வடிவகத்தே
சேர்த்திருந்தாள்! காதல் செயற்குமோர் எல்லையுண்டோ?

"காவல் கடக்கக் கலங்கித் திரும்பினனோ?
ஏவல் அரசன் எறிவேலுக் கஞ்சினனோ?
ஆவல் தணிக்கவே ஆதரவு தான்காட்ட
மேவலின்றி போயந்த மேலோன் மறந்தனனோ? 4

யாதோ? அறிகிலேன்! அன்பர்க்கு ஏதேனும்
தீதோ? அறிகிலேன்! தீங்கவிக்கு வந்துற்ற(து)
ஏதோ? அறிகிலேன்! என்காதல் பூத்தொளிராப்
போதோ? அறிகிலேன்! போய்மாண் டொழிவேனோ?" 5

என்று பலவெண்ணி ஏறு வருந்தடத்தை
நின்று இமையா நெடுங்கண்ணால் சூழ்ந்திருந்தாள்!
கொன்று இருளைக் கொழுஞ்சோதி நேர்ந்ததுபோல்
மன்று புகழும் மதிவாணன் வந்தடைந்தான். 6

நெஞ்சங் குளிர்ந்தாள் ! நெகிழ்அன்பு மேனகையை
வஞ்சிக் கொடியழைத்தாள் ! வந்தாள் அவள்கொடிய
நஞ்ச விழியாள்தன் நாயகனைத் தான்கண்டாள் !
பஞ்சணையைச் சென்று பரப்பி மலரிட்டாள் ! 7

தேனார் குழலி தெரிவிக்க, மேனகைபின்
வானார் நெடுஞ்சுவரில் வாய்ந்தநூ லேணியொன்றைத்
தானார விட்டாள் ! தமிழ்க்கவியும் மேலேறிப்
போனார் இரைபற்றப் போகுமோர் பல்லியொத்தே ! 8

ஏரி பெரிதே எனினும் சிறுமதகு
நீரின் அடலை நிறுத்தி விடுமன்றோ ?
வேரி மடந்தைக்கும் வெற்றிக் கவிமணிக்கும்
மாரி பொழியவிட்டு மங்கை யொதுங்கிவிட்டாள் ! 9

"ஆவி விலைகொடுத்து ஆரணங்கே ! உன்னுறவை
மேவி யடைந்துவிட்டேன் ! மேதினியில் நம்வாழ்வு,
தாவி விசும்பகத்தே தங்கி விநாடியிலே
ஓவியமாய் நில்லா(து) ஒழியும்மின் னல்போலே ! 10

பொங்கி வழிந்தோடிப் போகின்ற காதலுணர்(வு)
இங்கின்று தேங்கும் இதம்பெற்று விட்டதன்றோ ?
மங்கித் தளர்ந்த மனஞ்சென்று இன்பத்தில்
முங்கி மகிழ்வோம் ! வா ! முத்தமிழே ! செந்தேனே ! 11

நல்லமுதே ! வா !" என்றான் ! நங்கை மொழியொன்றும்
சொல்லமுடி யாதுயிர்த்தாள் ! சொத்தை மனமுற்றாள் !
வெல்லமுடி யாவுணர்வால் வெந்தழிந்து அன்னவனின்
கல்லகத்து மார்பிலே கன்னியவள் போய்ச்சாய்ந்தாள்! 12

" நம்மை வினையின்று நாடி இணைத்துவிட்ட(து)
இம்மையிலே வாய்ந்துள்ள இன்பம் நிலைபெறுமோ ?

செம்மை நெறியுணர்ந்த செந்தமிழ்ப் பாவணனே !
உம்மை யடைந்தேன்!உயர்வடைந்தேன்! சீரடைந்தேன்!

இன்ப மடைந்தேன் ''என்று ஈகைப் புகழ்வாய்ந்த
மன்பதையைக் காத்தருளும் மன்னன் குலக்கொழுந்து
அன்பன்பால் சொன்னுள் ; அவனும் உயர்பொழுதைத்
தின்பதங்கள் விட்டுத் திருமகளை நோக்கினன். 14

அன்னத்துப் பேரழகு ஆழியிலே தான்மயங்கித்
தென்னர் தமிழின் திறம்புகலும் நற்கவியின்
தன்னிரண்டு கண்ணும் தளர்வென்றும் கண்டறியா
நன்னெஞ்சும் போய்மூழ்கி நாடித் திளைத்தனவே ! 15

இந்தளித்த நெற்றி இசைக்குயிலும் பாவுரைத்துத்
தந்தளித்த பண்புத் தமிழ்க்கவியும், ஓடோடிக்
கொந்தளித்துப் போய்ப்புரளும் கொள்கைப் புலன்கட்கு
வந்தளித்த பேரின்ப வாழ்வு நயந்தனரே ! 16

உள்ளத்தை யுண்டு உவந்திருந்த பேருணர்வு
வெள்ளத்தின் பேய்ச்சீற்ற வேகம் தணிந்தடங்க
தெள்ளு தமிழைத் தெளிந்த இளங்கவியும்,
கள்ளொழுகும் பூங்கோதைக் காரிகையும் கூடினரே ! 17

நட்டு மனத்தகத்தே நல்லாட்சி தான்புரியும்
கட்டுக் கடங்காத காதலுக்கு அவ்விருவர்
மட்டும் அமிழ்தும் மதுவும் சுவைக்கரும்பும்
இட்டுக் கொடுத்து இசைபெருகச் செய்துவிட்டார்! 18

போதைப் பெருஞ்சுகத்தில் போய்உலகு தான்மறந்த
பேதை யவட்கொன்றும் பேசத் திறமில்லை !
மேதைக் கவிஞன்தன் மேலான கற்பனையும்
ஓதத் தயங்கி ஒதுங்கி மயங்கியதே ! 19

"வான மதியிறங்கி வந்துவிளை யாடலுற்ருல்
யானடையு மின்பம் அளவுக் கடங்கிடுமோ ?
கானக் கருங்குயிலே ! காவலன்தன் மாமணியே !
ஏனலிடை பூக்கும் எழில்முல்லைப் பூச்சுடரே ! 20

நாவுரைத்த செந்தமிழே ! நந்தவனப் பூங்கொடியே !
பாவுரைத்த செம்பொருளே ! பால்நிறத்த விண்மதியே !
தேவுரைத்த பூமகளே ! தேன்துளிக்கும் இன்மொழியே !
ஆ ! வுரைத்து இச்சுகத்தை யாதென் றுவந்திடுவேன் ?

பூந்தண் நறும்பொழிலே ! பூத்தொளிரும் கற்பகமே !
காந்தச் சுடர்விழியே ! கன்னித் தமிழ்வளமே !
வேந்தன் குலக்கொழுந்தே ! வெற்றி முரசொலியே !
ஏந்திழையே ! இச்சுகத்தை ஏதென் றுவந்திடுவேன்? 22

காவியத்தின் செம்பொருளே! காதற் சுடரொளியே !
மேவியத்தேன் மெல்லிதழே! மெய்யன்பு மாமலையே !
ஓவியத்தின் பேரழகே! ஒண்டமிழின் நன்னெறியே !
ஆவியுண்ட இச்சுகத்தை யாதென் றுவந்திடுவேன் ? 23

கற்பனையில் வீழாத கானகத்துப் பொன்மானே !
பொற்பளந்த மாமகளே ! போதனைய மென்குழலே !
விற்பழிக்கும் வெல்விழியே ! விந்தைசெயும் பேரமிழ்தே!
அற்புதமே ! இச்சுகத்தை யாதென் றுவந்திடுவேன்? 24

கன்னல் கனிரசமே ! காதற் பெருங்கடலே!
மின்னும் இசைவிளக்கே ! மிக்கமண மாருதமே !
வன்ன மலர்ப்பொழிலே ! வந்தொளிரும் வெண்மதியே !
என்னுயிரே ! இச்சுகத்தை ஏதென் றுவந்திடுவேன்? 25

கானந் தரும்குயிலே ! கற்ற பெருங்கலையே !
வானந் தருமழையே ! வாழ்வின் அரும்பயனே !

தானந் தருசுகமே! தண்ணார் மலர்வனமே !
யானந்தோ! இச்சுகத்தை யாதென் றுவந்திடுவேன் ? 26

வேறு

†கருகிய பைங்கயல் செங்கய லாயன்ன கண்மலர்கள்
செருகிய பைங்குழல் வஞ்சிமென் கிஞ்சுகச் செங்கனிவாய்
பருகி முயங்கி மயங்கிஇவ் வாறு படுமெழுகில் [வதே!
உருகிய அன்பைஎன் னே! இங்ஙன் நான்இன் றுரைசெய்

என்மொழியால் யாதுரைப்பேன் ?" என்று மழைபோல
இன்மொழியைப் பெய்தான்! இறைவன் திருமகளும்
பொன்மொழியி லேமூழ்கிப் போனாள்! இதழ்மலர்ந்து
தன்மொழியுங் கூறும் தரமற்றுப் போனாளே ! 27

மன்னன் மகளும் மனங்கொண்ட மாமகிழ்வால்
என்ன மொழிவதென்ற எண்ணம் பெறமாட்டா(து)
அன்னவனின் பொங்கும் அழகுத் திருமுகத்தில்
தன்னமுதக் கன்னம் தனைச்சேர்த்(து) உயிர்த்தனளே !

"இன்றே பெருநாள்! இசைநாள்! இனிமன்னன்
கொன்றே வதைத்துக் கொளுத்த வருமெனினும்
நன்றே! பிறந்த நலத்தையாம் இன்றடைந்தோம்!
மன்றேறிச் சீர்பெற்ற மாத்தமிழ்ப் பாவேந்தே! 29

பாட்டுக் கதிபன் பயந்த கவிமணியே!
நாட்டுக் கதிபன் நமையிணைத்துக் காதலராய்க்
கூட்டுவித்து உள்ளம் குளிர வகையளித்தால்
ஏட்டுலகில் காதல் எரியாய் ஒளிவிடுவோம்! 30

---

† அம்பிகாபதிக் கோவை—6.

யாது வினைச்செயலோ? ஐயகோ யானறியேன்!
தீது வருமோ? திருவருமோ?" என்றுருகி
மாது கவன்றுள்! மலர்க்கண் சுரந்துகண்ணீர்
மோதுற்று வாடியந்த மோகினி விம்மினளே! 31

'வாழி' என்று காதலரை வாழ்த்திடற்கு வந்ததுபோல்
கோழியொன்று கூவிக் குரல்காட்டிப் பேசியது
ஆழியொத்த காதல் அடித்தலத்தை விட்டகன்று
ஊழி யுலகின் உணர்வதனைப் பெற்றனரே! 32

ஆவி பிரிய அகங்கூடா தோர்போல
மேவிப் பிரிய மனமில்லை யென்றுலும்
தாவி யெழுந்தெதிரே தர்க்கும் பகல்அஞ்சி
நோவிருக்கும் நெஞ்சோ(டு) உருகிப் பிரிந்தனரே! 33

நீள்கின்ற கற்பனையின் நீர்மை அழகுஅமுதால்
ஆள்கின்ற சாதி அணங்கைத்தன் ஆருயிரை
வாள்என்ற கண்ணுல் வதைக்கும் வனிதையினை
நாள்நின்ற செஞ்சொல்லால் நல்லோ வியம்செய்தான்.

பூத்த நறுமலரும் பொங்கும் நிலவமுதும்
ஏத்தற் கரிய எழில்பொழிலும் பூங்காவும்
காத்த அருள்மடந்தைக் காவிரிப் பேராறும்
ஈர்த்தபெருங் காதல் இசைவிளக்கைத் தூண்டினவே. 35

கண்டினிது காதற் கரும்பைக் கனிவோடு
உண்டினிது நெஞ்சிரண்டும் ஊன்றியுயர் பேரின்பம்
கொண்டினிது நாடோறும் கூடி இணைத்தவினை
விண்டினிது காதல் விளக்கம் புரிந்தனரே. 36

பாடும் கவிஞன் பரிந்துவந்து வாராது
நீடும் நிசிப்பொழுதில் நேரிழையா ளைக்கண்டு

தேடும் அமுதுண்டு தேன்அதரக் கள்ளுண்டு
நாடும் கவிதழைய நல்லுரத்தைப் பெற்ருனே ! 37

வாராக்கால் நெஞ்சம் வருந்தியும், சந்திப்பு
நேராக்கால் கன்றி நெகிழ்வுற்றும், காதலவன்
பாராக்கால் எண்ணிப் பரிவுற்றும் பூங்கொடியாள்
தீராக்கா தல்நோயால் தீய்ந்து கருகினளே ! 38

நந்தமிழர் பேசி நயக்கும் அகப்பொருளின்
அந்தமிலா இன்ப அமைப்பை நெறிமுறையைத்
தந்தருளும் கோவைத் தனிநூலைக் கம்பன்சேய்
செந்தமிழால் பாடிச் செயலால் அணிபுரிந்தான். 39

வெண்பா

ஆவிக்கு ஆகும் அழிவை அறிந்திருந்தும்
மேவிப் பெருங்காதல் மேலோங்க—சாவின்
மடித்தலத்தைச் சேர்ந்தார் மடிவறியா இன்பின்
அடித்தலத்தைச் சேர்ந்தார் அவர். 40

5. விருந்திடு காதை

"செம்பியன் நாட்டில் இன்று
செந்தமிழ்க் கவிலோ கத்தை
அம்பிகா பதியும் அன்னோன்
அண்ணலும் ஆள்கின் றார்கள்
தம்பித்து நாம்பே ழைக்குள்
தளர்கின்ற நாகம் போல
வெம்பிட லாலே நன்மை
விளைவது ஏது முண்டோ? 1

நேற்றுதான் பிறந்தான்! ஆழ்ந்த
நெடுந்தமிழ் கடந்தோன் போலச்
சாற்றுகின் றான்! நம் சீரைச்
சரிவர மதிப்ப தில்லை
வேற்றுவோர் நாட்டான் நூலை
வெறுந்தமிழ்ப் பெயர்ப்பை எல்லாம்
போற்றுகின் றார்கள்! பொல்லாப்
பொய்யினைப் புகழ்கின் றாரே! 2

நம்மையும் மண்ட பத்தில்
நல்லலங் கார மான
பொம்மையாய் ஆக்கி விட்டார்
பொறுத்தது போதும்! போதும்!
இம்மையில் வாய்க்கும் சீர்த்தி
இங்கினி நமக்கு ஏது?
செம்மைசால் தமிழின் பேரால்
செல்லுவோம் வேறு நாடே. 3

தந்தையும் மைந்தன் தானும்
தனியாட்சி செயட்டும்! இங்கே

நிந்தையில் நாமெல் லாரும்
நீந்திஏன் வாழ வேண்டும் ?
சந்தையில் நுழைவோம் நந்தம்
சரக்குநன் றன்றோ ?'' என்று
சிந்தையில் எரியும் தீய
சினம்பொங்க ஒட்டன் சொன்னான். 4

" ஆம் ''என்றார் கூத்தன் தன்நல்
அன்பர்கள் ! ''கம்பன் பிள்ளை
'ஊம்' என்றால் மன்னன் போற்றி
உயர்த்தியே புகழு கின்றான் !
நாம்எல்லாம் தேனே சொட்ட
நறுந்தமிழ் பாடி னாலும்
'ஏம்'என்று பேசி வேந்தன்
ஏற்பது மில்லை ! கண்டீர் ! 5

இன்பவாழ்வு அகரம் கூட
இன்னதென்று அறியான் சொல்லை
அன்புவாய்ந் தமையால் மன்னன்
' அருந்தமிழ்க் கோவை ' என்றான்
மன்பதை காக்க வந்த
மன்னனுக் கிதுவோ சால்பு ?
துன்பவாழ்வு ஏனோ இங்கு ?
துணிந்தது நன்று''என் றோதிப் 6

புலவரில் ஒருவன் ஆர்த்தான் !
" புலவரில் ஏறு போன்ற
வலவரைக் கூத்த னாரை
வயவேந்தன் மறந்தே போனான்
நிலவரை முழுதும் சீர்த்தி
நிறைத்துவைத் திருக்கும் இன்னார்

தலைவராய் வந்தா லன்றே
　　தமிழ்க்கன்னி இன்பம் கொள்வாள் !" 7

இவ்விதம் சொன்னான் மற்றோன்!
　　" இதுசரி " " இனிது " " ஆமாம் ;
அவ்விதம் ஆக வேண்டும் "
　　என்றனர் பிறரெல் லோரும்
எவ்விதம் கம்ப னாரும்
　　அம்பிகா பதியும் வீழ்ச்சி
கவ்விடச் செய்வ தென்ற
　　கருத்தினில் மூழ்கி னாரே ! 8

பசித்தவோர் புலிக்கு ஆட்டுப்
　　பட்டியே எதிர்வந் தாற்போல்
விசித்திர செய்தி யோடு
　　விரைந்துவந்(து) உள்ளோர் நாடிப்
புசித்திட ஒருவன் தந்தான்
　　" புலவர்காள் ! வாரீர் ! கேளீர் !
நசித்தநும் சிந்தைக் கெல்லாம்
　　நல்விருந் துண்டு கேளீர் ! 9

ஒட்டரே ! கீழ சாதி
　　ஒச்சனின் பிள்ளை ஏதோ
மட்டதே என்று மன்னன்
　　மகிழ்வுற கோவை சொல்லி
விட்டதின் மர்மம் தன்னை
　　விவரமாய்ச் சொல்வேன் ! கேளீர் !
துட்டனின் புன்மை யான
　　துணிவினை விரிப்பேன் கேளீர் ! 10

பாவேந்தன் என்னும் கம்பன்
　　பாலகன் சோழ நாட்டுக்

கோவேந்த னுயிராய்ப் போற்றும்
குலக்கொடி தன்பால்; தோன்றும்
சாவேந்தி காத லுற்றுச்
சஞ்சரிக் கின்ருன் ! நெஞ்சில்
நோவேந்தும் நினக்குச் சொன்னேன்
நும்மனம் போலச் செய்க ! 11

அரண்மனை ஆட்கள் சில்லோர்
அரசன்பால் கூற அஞ்சி
முரண்மனத் தோடு ஏங்கி
மொழியாது தயங்கு கின்ருர் !
வரன்முறை யற்ற அந்த
வஞ்சனுக்(கு) ஆ!ஆ! அந்தப்
புரம்மனம் நடுக்க மின்றி
புகஎன்ன துணிச்சல் ?'' என்ருன். 12

" பறக்கின்ற பட்டம் போலப்
பார்த்திபன் நெஞ்சக் காற்றில்
சிறக்கின்ருன் இளைய காளை !
சிதைக்கின்றேன் ! அன்னோன் வீச்சை
மறக்கின்றே னில்லேன் ! என்னை
மதியாது அவம தித்தான் !
திறக்கின்றேன் மன்ன னுக்கித்
திருக்காட்சி தன்னை யானே! 13

அப்பனும் மகனும் தாங்கா
அவமானக் கடலில் மூழ்கி
இப்புவி யதனில் சேர்த்த
இசையெல்லாம் மாய்ப்பேன் ! என்பால்
தப்பிதம் செய்தார் ! என்றன்
தனிப்பெரும் புகழை வையம்

ஒப்பிடச் செய்வேன்! உம்பால்
ஓதிவைக் கின்றேன்! நண்பீர்! 14

நெஞ்சத்தில் கொள்வீர்! யானே
நேரிலே மன்னன் பால்போய்
வஞ்சத்தைக்—கம்பன் பிள்ளை
வயவேந்தன் குலத்தில் பெய்த
நஞ்சத்தைத்—தொட்டுக் காட்டி
நாகத்தைப் பிடிக்கச் சொல்வேன்!
கிஞ்சித்தும் ஐயம் வேண்டா!
கீர்த்திநம் பால தாகும்! 15

மீசைவந் திடாத பிள்ளை
மென்காதல் நெறியில் வாய்க்கும்
நேசமெல் லாம்எவ் வாறு
நெடிதினிது உரைத்தான் என்று
யோசனை செய்தது உண்டென்
உளம்ஐயம் கண்ட துண்டு!
ஆ!சமாச் சார மென்ன ?
அப்படி யா ?ஆ !" என்று 16

கூத்தனும் சினந்தான்! நெஞ்சில்
குடிகொண்ட வஞ்சம் தூண்ட
வார்த்தைகள் வாரிப் பெய்தான்!
வண்டினம் கீதம் பாடும்
பூத்திகழ் சோலை சூழ்ந்த
புரவலன் கோயில் நாடி
மாத்தமிழ் புலவன் சென்றான்!
மன்னனை வாழ்த்தி நின்றான்: 17

"குலம்பெற்ற புகழைக் காக்கும்
குலோத்துங்க சோழ மன்னா!

புலம்பெற்ற தமிழில் வல்ல
புலவர்கள் பலரைப் பெற்று
நலம்பெற்று மிளிரு கின்ற
நற்றமிழ் மணியே! மங்கை
நிலம்பெற்று நின்பால் கூடி
நீடூழி வாழ்க! வாழ்க! 18

மாசிலா நின்றன் கீர்த்தி
மங்காது வாழ்க! இந்தக்
காசினி யெங்கும் தாவிக்
கடும்புலிக் கொடிமே லோங்க!
வீசிடும் பகைமைக் காற்று
விலகுக! புன்மை செய்யக்
கூசிடும் தமிழர் நாட்டில்
குளிர்செங்கோல் நிலவி வாழ்க! 19

நீதிநின் ஞெளிர்க! வாய்மை
நிலவுக!'' என்று கூத்தன்
ஓதிநின் றிருந்தான் மன்னன்
உளம்மகிழ்ந்து இருக்கை தந்து
ஆதிநின் றுயர்ந்த அன்னோன்
அருமையும் புகழும் பேசி
''சேதிநின் பால்ஏது உண்டோ?
செந்தமிழ்க் கடலே!'' என்றான். 20

''மன்னவ! நின்கு டிக்கு
மாசொன்று நேர்ந்த(து)! ஐயோ!
என்னவென் றுரைப்பேன்? நாவே
எழவில்லை! நெஞ்சத் தாலே
உன்னவும் கூடா ஒன்று
உற்றதே! நெடிது ஆண்ட

முன்னவர் புகழுக் கெல்லாம்
 மூண்டதே கேடு" என்றான். 21

"எடுத்தியம் பிடுவீர்! யாது
 எனக்குற்ற கேடோ? வந்து
அடுத்துஎம் முன்னோர் சீர்க்கு
 ஆபத்து யாரோ செய்தார்?
தொடுத்தியம் புவதில் வல்லோய்!
 தொல்குடி தன்னை மாசு
படுத்திய தீயர் யாரோ?
 பகருவீர்!" என்றான் மன்னன். 22

"நாட்டினை ஆளத் தானே,
 நலிபிணம் வேகும் வெய்ய
காட்டினை ஆளத் தானே,
 கம்பனார் கவிதா மேதை,
ஏட்டினை யாளும் அந்த
 ஏறுதன் மைந்தன் நின்றன்.
கூட்டினில் ஆளும் பச்சைக்
 கிள்ளையைக் கவர்ந்து விட்டான். 23

உண்டவீட் டிற்குப் பாவி
 இரண்டகம் நினைய லாமோ?
கொண்டநாட் டதிப னுக்குக்
 கொடுமையும் இயற்ற லாமோ?
அண்டமே ஒப்பு மோ? அவ்
 அறமகள் மகிழு வாளோ?
மண்டலம் ஆளும் வேந்தன்
 மகளன்றோ? மறந்தான்!" என்றான். 24

'ஆ!'வென்றான் மன்னன்! கண்கள்
 அனலினைக் கக்கிற்(று)! உள்ளம்

'ஓ'வென்று சீறு கின்ற
ஒலியலை கடலா யிற்று!
"சாவு"என்றான் "அவனுக்கு! அந்தச்
சழக்கனை வெட்டி வீழ்த்தப்
போ"வென்றான் நெஞ்சில் சீற்றப்
பொதிகொண்ட வேந்த ரேறே! 25

"எவரையோ அருள்க!" என்று
எரிவேற்கை வீரன் வேண்டி
நவரத்ன முடியோன் தன்னை
நடுக்கமொ டுசாவி நின்றான்!
விவரமாய் உரைத்துக் கூத்தன்
"விரைக"வென் றான்அப் போது
கவர்தமிழ் வெண்பா வல்ல
கவிபுக ழேந்தி வந்தார்! 26

"மன்னர்பால் காணு கின்றேன்
மாறுபா டேதோ? துன்பம்
என்னவோ? அறிந்து காண
என்னுளம் விருப்ப முற்ற(து)!
இன்னரும் தமிழில் மிக்கோய்!
இயம்புதி" என்றார்! கூத்தன்
வன்னய நாவால் யாவும்
வகைபடத் தொகுத்துச் சொன்னான்! 27

மாறிடும் தன்மை யில்லா
மணிக்கவி புகழை ஏந்தி
சீறிடும் மன்னன் கக்கும்
சினத்தினை அணைக்கும் வண்ணம்
ஆறிடும் மொழிகள் பெய்து
அறமுறை நெறிகள் காட்டிக்

கூறிடத் தொடங்கு கின்றார்:
"கூத்தரே! மக்கட் கோவே! 28

வனத்தினில் திரிந்து சென்று
வாழ்வினைக் கடத்து கின்ற
இனத்தினி லன்றோ பொல்லா
இச்சினம் காண்ப தாகும்?
சினத்தினில் புகுந்து விட்டால்
சிந்தனை தகர்ந்து போகும்!
மனத்தினில் பொங்கும் சீற்றம்
மாற்றலே ஆற்ற லன்றோ? 29

நீதியைக் காப்ப தற்கே
நிலத்தினில் தோற்றம் கண்ட
ஆதிநல் லிசைமைச் சோழ
அருங்குடி தந்த மன்ன!
சேதியைக் கேட்ட போதே
செம்மையை நீத்து தண்டம்
ஓதிடல் தீமை யன்றோ?
ஓர்ந்திட வேண்டு கின்றேன்! 30

ஆவுக்குத் தன்நல் மைந்தன்
ஆவியை அர்ப்ப ணித்த
கோவுக்குப் பின்னர் வந்த
கொற்றவ! சினத்தில் நீந்தும்
நாவுக்கு வந்த தெல்லாம்
நவிலுதல் அரசர்க் காமோ?
மேவிக்கண் கண்ட பின்னே
மிகுசெயல் துணிய வேண்டும்! 31

ஆய்ந்திடல் வேண்டும்! மெய்யை
அறிந்திடல் வேண்டும்! இன்று

காய்ந்திடும் சினம்நி னக்குக்
　　களங்கத்தை விளைத்தல் கூடும்!
சாய்ந்திடும் கோன்மை கூட!
　　சரிந்திடும் நிலங்க ளெல்லாம்!
மாய்ந்திடும் குலமே! கம்பன்
　　மகனவன் நினைவில் கொள்வீர்! 32

தண்டமிழ் புவனம் முற்றும்
　　தனித்தமிழ் ஆட்சி செய்யும்
மண்டல கவிவேந் தன்தன்
　　மகனை நீ ஆரா யாது
தண்டனைக் கொடுத்தால் இந்தத்
　　தமிழ்ப்புவி உன்னைத் தூற்றும்!
பண்டளிர் பெருமை சான்ற
　　பார்த்திப! அறிக மெய்யே!" 33

எனப்புக ழேந்தி நீதி
　　எடுத்துரை செய்தார்! மன்னன்
சினப்புகை யடங்கி, "என்றன்
　　செந்தமிழ்ச் செல்வப் பேறே!
வனப்புறு அழகுச் செல்வ
　　வஞ்சிக்கும் அன்னே னுக்கும்
மனப்பிணைப்(பு) உள்ளதைக் காண
　　மார்க்கத்தை அருள்க நீரே! 34

ஐயனே!" என்றான் சோழ
　　அரசனும்! நீங்கா ஏட்டுக்
கையனும் மொழிந்தான்: "நாட்டுக்
　　காவல! விருந்து ஒன்று
செய்யவும்! கம்பன் பெற்ற
　　செம்மலை அழைக்க! நின்றன்

தையலின் கையால் யார்க்கும்
தருக்பின் ஒழுக்கம் தன்னைக், 35

கண்டுதேர் வோம்" என்று இன்பக்
கவிமணி முடித்தார் ! பாடும்
வண்டுதேர் மாலை மார்பன்
வகுத்தஅம் முறையை ஏற்றான் !
உண்டுதேர் தன்னி லேறி
உயர்புக ழேந்தி பின்னர்
மண்டுதேன் கவிதைக் கம்பர்
மனையெண்ணி விரைந்து சென்றார். 36

தீங்கெதுவும் வாரா வண்ணம்
தீந்தமிழ்க் கவிவேந் தன்தன்
பாங்கெழில் மைந்தன் தன்னைப்
பாதுகாத் திருக்கச் செய்யும்
ஏங்கெழு நெஞ்சத் தோடு
எழில்புக ழேந்தி யோடித்
தேங்குயில் கம்பன் பாலே
திகைத்திடக் கேட்டு நின்றார். 37

" அம்பிகா பதிதான் எங்கே?
அன்னவன் எங்கே? எங்கே?
தம்பிதான் நுமக்குப் பின்னர்
தரணியில் உயர்வா னென்று
நம்பிநான் மகிழ்ந்தி ருந்தேன் !
நலிவன்றோ வந்தது? ஐயோ !
உம்பிள்ளை விட்டில் போல
உறுதுயர் சேர்ந்து விட்டான் ! 38

சேவைக்குத், தாய்மை யான
செந்தமிழ் மொழிமிக் கோங்கும்

தேவைக்குப் பிள்ளை பெற்ற
        தீந்தமிழ் வேந்தே! மைந்தன்
கோவைக்குப் பிறப்பு தந்த
        குலக்கொடி, மன்னன் பெற்ற
பாவையே ஆவாள்! ஐயோ!
        பைந்தமிழ்க் கதிரே! கேளீர்! 39

பார்த்திபன் அறிந்து விட்டான்!
        பதைக்கின்றான்! சினத்தை நெஞ்சில்
போர்த்திடு கின்றான்! உள்ளே
        பொங்குகின் றான்! 'கொல் வேன்'என்று
ஆர்த்திடு கின்றான்! சொல்லி
        அம்பிகா பதியின் காதல்
தூர்த்திடச் செய்தால், தீமை
        தொலைந்திடக் கூடு மன்றோ?" 40

நிகழ்ச்சியை எல்லாம் அந்த
        நெடுந்தமிழ்ப் புலவர் சொன்னார்!
இகழ்ச்சியே காணாக் கம்பர்
        இதயத்தில் இடியே பெற்றார்!
மகிழ்ச்சியெல் லாம்தூள் தூளாய்
        மண்ணாய(து) "ஐய கோ! ஓ!
புகழ்ச்சியின் வடிவ மாம்என்
        புதல்வனா இன்ன லுற்றான்? 41

கண்ணிலாக் காத லாலே
        கம்பன்சேய் மடிந்தா னென்று
மண்ணிலே பெயரைத் தாங்கி
        மடிவனோ? அன்றி நெஞ்சம்
எண்ணிய காதல் கூடி
        எழில்பெற மலர்ச்சி யுற்ற

புண்ணிய நிலையில் என்றன்
புதல்வனைக் காணு வேனோ? 42

சோழநாட் டரச னுக்குச்
சொல்லிய குலத்தின் மேன்மை
வாழவோ அன்றி தன்பெண்
வாழவோ, நெஞ்ச மெண்ணும்?
கீழவ ரென்று சொல்லிக்
கிளிக்கு இன்னல் செய்யு வானோ?
ஆழவே நெறிகள் சொல்வோம்
ஆபத்து நேருங் காலே! 43

நெஞ்சங்க ளிரண்டும் கூடி
நெடுங்காதல் வளர்த்த பின்னர்
நஞ்சங்க மெல்லாம் சேர்ந்து
நட்டதைக் கொல்வ தென்றால்
வஞ்சம்!கல் நெஞ்சர் என்ற
வசையன்றோ நமக்குச் சேரும்?
கஞ்சங்க லங்கா வட்டக்
கவின்மதி முகத்தாள் என்ன? 44

அறியாத சிறுமி யா? நல்
அறிவொழுக் கெல்லாம் வாய்ந்த
நெறியான மங்கை யன்றோ?
நேரிழை யாள்தன் காதல்
மறியாது! திண்மை கொள்ளும்!
மங்காது! சோதி கொட்டும்!
எறியாது மன்னன் நெஞ்சம்
என்சொல்லை ஏற்றுக் கொள்ளும்! 45

நளமன்னன் வாழ்வைப் பாடி
நானிலம் பெய்த சீரில்

குளமன்ன மாக நீந்தும்
குளிர்தமிழ்ப் பெரும ! மன்னன்
உளமென்ன கல்லோ ? அன்றி
உருகாத இரும்போ ? காதல்
வளமெண்ணி தன்ஓர் பெண்ணின்
வாழ்வினைக் கெடுப்ப துண்டோ ?" 46

'நன்மையே விளையு' மென்ற
நம்பிக்கை யோடு கம்பர்
தன்மைந்த னுயர்வை எண்ணித்
தருக்கொடு மொழிந்தார்! தேர்ந்த
பொன்மயத் தமிழின் செஞ்சொல்
புலவனுர், "கம்ப நாட !
உண்மையே! எனினும் மன்னன்
உளநிலை காண்பார் யாரோ ? 47

தான்வந்த குலத்தி னுக்குத்
தளர்ச்சிவந் துற்றது என்று
கோன்வந்து எண்ணி விட்டால்
கொடுமையே சூழு மன்றோ ?
தேன்வந்த மொழியாள் வாழ்வைத்
தேர்வேந்தன் கருதி னல்தான்
கான்வந்த மலர்கள் வீச
கடிமணம் நிகழ்வ தாகும்! 48

கற்றவ ரெனினும், கூத்தர்
கற்றதால் விளையும் தன்மை
பெற்றவ ரல்லர் ! நெஞ்சப்
பேழைக்குள் கருணைச் செந்தேன்
அற்றவர் ! தமிழ்த்தாய் நாண
அழுக்காற்றை உளத்தில் பூணுய்

உற்றவர் ! அவரால் தீமை
உமக்குண்டு உணர்க நீரே ! 49

போந்திடும் போக்கைக் கண்டு
பொருளினை ஆராய் தற்கு
வாய்ந்திடும் விருந்து ஒன்று
வயவேந்தன் புலவர்க் கெல்லாம்
ஈந்திட உள்ளான் ! மன்னன்
இசைக்குயில் விருந்து செய்வாள் !
ஆய்ந்திட அறிவு மைந்தன்
அம்பிகா பதிக்குச் சொல்வீர் ! 50

ஆராய வழிவி டாது
அவனை நீ ரொழுகச் செய்வீர் !
சேராயம் தன்னில், மன்னன்,
செந்தமிழ்க் கூத்தர், மற்றோர்
கூராய விழிக ளெல்லாம்
கூற்றென்றே உணர வேண்டும் !
சீராயும் பிள்ளைக்கு என்ன
செப்புவ துண்டு வேறே ?" 51

செப்பினர் நெடிது ! கம்பர்
செப்பிய தெல்லாம் ஏற்று
ஒப்பினர் ! பின்னர் நீங்கி
ஒண்புக ழேந்தி சோர்ந்து
கப்பிய சிரசி னோடும்
கருதிய சிந்தை யோடும்
அப்பிய துயரி னோடும்
அகன்றனர் தளர்ச்சி யுற்றே ! 52

தேர்வள வேந்தர் தாமும்
தெவ்வரை வீழ்த்தும் வெற்றிப்

போர்வள வீரர் தாமும்
பொருந்திய எவரும் உய்ய
ஆர்வளக் கரங்கள் நாடி
அமுதினை ஊட்டும்? வண்ண
ஏர்வளக் கரங்க ளன்றோ?
எக்கரம் அதற்கு ஈடாம்? 53

என்னவர் தமிழி னத்தார்
ஏர்க்கர வேந்த ரான
அன்னவர் சீரைப்—பண்பை—
அரும்பெரும் உழைப்பை—அந்தப்
பொன்னவர் தொழும்பைக் கூடி
போற்றிடு கின்றார்! இந்தத்
தென்னவர் நாக ரீகத்
தெளிவென்னே! அருமை என்னே! 54

பொங்கலந் திருநாள், அன்னோர்
பொய்கடந் துழைக்கும் அந்த
மங்கலச் சீரை வாழ்த்தும்
மணிப்பெரும் பொன்னா ளன்றோ?
கொங்கலர் மாலை வேந்தன்
குளிர்வள நாட்டா ரேற்றிச்
செங்கலப் பானை பொங்கிச்
சேவகம் போற்றி நின்றார்! 55

அன்றுதான் நாடாள் கின்ற
அரசனும் விருந்து செய்தான்,
ஒன்றுதான் சொன்னான்: "இன்ப
ஒளிசெய்யும் புலவீர்! கூடி
நன்றுதான் எனக்கு நீவிர்
நற்றமிழ் விருந்து செய்தீர்!

இன்றுநான் உமக்கெல் லோர்க்கும்
இன்சுவை விருந்து செய்வேன் ! 56

கிரி, மாறி சீற்றம் கொண்டு
கிளம்பியே வருதல் போலும்
கரி, மாறி மதமுற்றேடும்
கண்ணகல் புவிவேந் தன்தன்
எரிமாறி மாறி வீசும்
இணைவிழி மடந்தை இன்று
பரிமாறி மகிழ்வாள் ! நீவிர்
பதைப்பின்றி அருந்து வீரே ! 57

கலைவிரித் திந்நாட் டோங்கும்
கவித்தில கங்காள் !" என்ருன் !
தலைவிரித் தாடும் ஊழோ
தான்முறு வலித்து நின்ற(து) !
இலைவிரித் தார்கள் ! வந்து
இன்தமிழ்ப் புலவ ரெல்லாம்
அலைவிரித் தாற்போல் சேர்ந்து
அமர்ந்தனர் வேந்த ேேட ! 58

மதயானை வென்றி கொள்ளும்
மன்னவன், பணியாள் பாலே
இதையாங்கு சொன்ஞன் : " ஓடி
இன்னேசென் றினிது என்றன்
சிதையாத அழகுச் செல்வச்
சிற்பத்தை,—எனது பெண்ணை—
இதயானந் தத்தேன் தன்னை
இட்டுநீ வருக !" என்ருன். 59

கம்பஞர் தவத்தால் பெற்ற
காளையும், கட்டு மீறிக்

கொம்பனாள் பாலே வீழ்ந்து
கொண்டவக் காத லென்னும்
வம்பினால் தீமை யேதும்
வாராவா(று) ஒழுகச் சொன்ன
தம்பிதா வாக்கை நோக்கித்
தணற்புலன் அணைத்து வைத்தான். 60

வையகம் முழுதும் நோக்க
வானகம், சோதி மின்னல்
செய்வதைப் போல மன்னன்
செல்வியும் தோன்றித் தன்மென்
கையக வன்மை யான
கவின்மையைக் காட்டிக்கொண் டாங்(கு)
உய்பவர் நெஞ்ச மெல்லாம்
உணர்வுற நடந்து வந்தாள் ! 61

அருங்கலம் கரத்தி லேந்தி
அழகெலாம் வாரிக் கொண்டு
பெருங்கயற் கண் இமைத்துப்
பேணிய நாணம் வைத்துக்
கருங்கட லலையே போலும்
காரிருள் கூந்தற் கூற்றம்
மருங்கடைந் தமுது பெய்தாள்
மதிமுகம் ஒளிரத் தானே ! 62

மதிவரத் திரும்பிப் பாரா
மலர்க்குமு தம்தான் உண்டோ ?
விதிவர அதன்பால் சென்று
வீழாத உயிர்கள் ஏதோ ?
எதிர்வரும் அழகுச் செந்தீ
எரித்திடத் தாங்கா னாகை

நிதிவரும் தமிழின் செல்வன்
நிலாமுகம் திரும்பிப் பார்த்தான்! 63

பார்த்தகண் இமையா னாகப்
பார்த்தனன்! பார்த்தான்! பார்த்துத்
தீர்த்தகன்(று) ஒழியா னாகத்
திரும்பவும் பார்த்தான்! பார்த்தான்!
சீர்த்தகண் ணிரண்டும் இன்பச்
சீதமே கனியப் பார்த்தான்!
கூர்த்தசெந் தமிழின் பேறு
கொற்றவன் கொடியைப் பார்த்தான்! 64

தன்னையே மறந்து போனான்!
தண்வளர் திருமு கத்துப்
பொன்னையே—காத லின்பப்
பொருப்பையே—உளத்தி லேற்றி
நன்னயத் தமிழின் செம்மல்
நாடிநெக் குருகி நின்றான்!
கன்னற்செங் கரும்பி னாற்றில்
கருத்தெலாம் மூழ்கி நின்றான்! 65

சுற்றிய ஆபத் தான
சூழலை மறந்தான்! காதல்
பெற்றிய தொன்றே கண்டான்!
பேரழ(கு) எரிப்ப திண்மை
வற்றிய(து)! அவனும் மோக
வாரிதி மிதந்து சென்றான்!
யெற்றிய காத லென்னும்
.......பாசத்திற் கட்டுண் டானே! 66

பருகினான் அழகுத் தேனைப்!
படர்சுடு காத லாலே

கருகினன் ! மூச்செ றிந்தான் !
　　கருதிய சிந்தை யெல்லாம்
உருகினன் ! கொந்த ளித்து
　　உணர்ச்சிகள் பொங்கப் பொங்கப்
பெருகினன் ! நெஞ்சுக் குள்ளே
　　பிதற்றினன் காதல் பண்ணே ! 67

கரத்தினில் வட்டில் பாரம் !
　　கருத்தினில் காதல் பாரம் !
சிரத்தினில் கூந்த லூடே
　　சிரிக்கின்ற பூக்கள் பாரம் !
தரத்தினில் மேல தான
　　தண்எழில் பாரம் ! தாங்கி
வரத்தன்னுள் தாங்கா னாக
　　வஞ்சியைப் பார்த்த யர்ந்தான். 68

எட்டிய அடியே நோவ,
　　எடுத்திடும் அடியே கன்ற
வட்டிலைச் சுமந்து வந்த
　　வனிதையைக் கண்டான் ! காணக்
கட்டிய செஞ்சொல் துள்ளும்
　　கவிதைதான் நெஞ்சில் பொங்கிக்
கொட்டிய(து) ! உணர்ச்சி வெள்ளம்
　　கொந்தளித் தோட்த் தானே ! 69

பூங்கொடி பால்இ ரங்கிப்
　　புலம் பினன் காளை :
　"இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க
　　வட்டில் சுமந்து மருங்கசைய......" என்று
தாங்கொணுக் காதல் உந்த
　　தண்டமிழ் வெண்பா ஒன்று

ஆங்கினி துவந்து நாடி
அடியெடுத் திட்டான்! மேலும்
தேங்கிடும் தீஞ்சொல் வீசித்
தேன்மழை பொழிய வந்தான்! 70

கொஞ்சிய அடிகள் கேட்டுக்
கொதித்தனன் மன்னன்! யாரும்
அஞ்சினர்! கம்ப நாடர்
அம்பிகா பதியின் மோகம்
விஞ்சிய காதல் கண்டு
விதிர்விதிர்த் தயர்ந்தார்! அச்சம்
நெஞ்சினில் கொண்டார்! ஆங்கு
நிகழ்த்துவ தறியா நின்றார்! 71

பிள்ளையை எவ்வா றேனும்
பிழைநிலை நின்று வாரி
அள்ளிடத் துடித்தார்! அன்னை
அருந்தமிழ்க் கரத்தை ஈந்தாள்!
கிள்ளைவாய்த் தேனாய்க் கம்பர்
'கிழங்கு' என் றோர்ஓசை கேட்டார்!
வெள்ளைவாழ் கல்விச் செல்வி
வெற்றியைக் கொடுத்தாள் போலும்! 72

கவித்தமிழ்க் கம்பர் தேறிக்
கனிந் திடச் சொன்னார்:

"இட்டடி நோவ எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய—கொட்டிக்
'கிழங்கோ கிழங்கு' என்று கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்" என்றார்!

செவித்தமிழ் கேட்ட பிள்ளை
செயல்நிலை நினைவு கொண்டான்!

அவித்தனன் உணர்வுத் தீயை!
ஆண்டனன் புலன்கள் தம்மைக்!
குவித்தனன் காதல் நெஞ்சைக்!
கூடினன் குழுவி னோடே! 73

"நாடகம் யாது? கம்ப
நாடரே! உரைப்பீர்! என்ன?
கூடக உயிர்பால் பற்று
குறைந்தது போலும்!" என்று
பாடகக் குடைசேர் வேந்தன்
பாய்ந்தனன்! கம்பர், "என்றன்
ஏடகத் தமிழில் மூழ்கும்
எழில்தமிழ் அரச ரேறே! 74

'கிழங்கு' என்று கூவி விற்கும்
கிழவியின் திருவாய் தன்னில்
வழங்கின்சொல் கேட்டீ ரோ? நின்
வையந்தான் அதற்கு ஈடோ?
பழங்கன்றி ஒளியும் பெற்றுப்
பக்குவ நிலையும் பெற்றுச்
சழங்குஅமிழ் துகுத்தாற் போலச்
சாற்றிய பதங்கேட் டீரோ? 75

பாலொடு தேனே சேர்ந்தால்
பருகுதற்கு இனிமை யன்றோ?
வேலொடு பல்போர் வென்ற
வேந்தனே!" என்று கம்பர்
கோலொடு ஒருசொல் விட்டார்!
கோளரி மன்னன் சீறி
"மாலொடு மொழிந்தீர்! சோழ
மன்னன்யான்! கூறுகின்றேன்! 76

தூயவெண் பால தோடு
துளிக்கின்ற செந்தேன் சேரல்
நேயமிஃ தறிவேன்! ஈண்டு
நெடுந்தமிழ் ஓச்ச(!) வந்தோய்!
பாயகல் கடலின் உப்பு
படரலை கடைநீர் வந்து
தோயமு தப்பா லோடு
துவைதல்தான் ஆமோ? சால்போ? 77

நன்மையோ? பண்பு தானோ?
நலிவுக்கு வித்தே யன்றோ?
புன்மை! ஓ! சொல்வீர்! ஆழ்ந்த
புலவரீர்!" என்றான்! கம்பர்
" தன்மையோர்ந் தறிந்த பின்னே
தரம்படப் பிரித்த லாகும்!
வன்மைசால் புவியின் மன்னா!
வளர்கவி மன்னன் சொன்னேன்! 78

ஆயிரம் நாடு தம்மை
அருங்கடல் பரப்பைக் குன்றைப்
போயிருந் தாளு கின்ற
புலிமன்னர் தாமும் செய்யாத்
தாயினும் சால்பு மிக்கத்
தமிழ்வளர் புலவர் பேணும்
நாயக னே! நீ வாழ்க!
நற்புகழ் வாழ்க! வாழ்க!" 79

கனித்தமிழ்க் கம்பர் இங்ஙன்
கழறினார்! பின்னர் ஆங்கு
நனித்தனல் கொண்ட சொற்போர்
நகர்ந்தது! உண்டார்! பின்னர்

தனித்தனிச் சுவைகள் கூட்டித்
தாம்பூலம் கொண்டார்! எல்லாம்
இனித்தநல் விருந்தின் சீரை
இசைத்தினி துவந்து நின்றார்! 80

தண்டமிழ்ப் புலவர் யாரும்
தார்மன்னன் தன்னை வாழ்த்திக்
கொண்டநல் விடையே நல்கக்
கோரினர்! கொடுத்தான் வேந்தன்!
“மண்டலப் புகழ்சால் கம்பர்
மைந்தனே! நீஇருக்க!
விண்டலம் தொட்ட நூல்கள்
வீங்குநல் நிலையம் செல்க! 81

உந்தனைப் பெற்ற கம்பர்
உயர்தமிழ் மணக்கு மந்தச்
சுந்தர காண்டம் தன்னின்
சுகம்பெற விரும்பு கின்றேன்!
தந்திடு கொணர்ந்து நூலைத்!
தண்டமிழ் அமிழ்தை! நீபோய்
வந்திடு விரைவில்! நேரம்
வளர்த்திட வேண்டாம்” என்றான். 82

மற்றவர் எவரும் சென்றார்!
மன்னனோ(டு) ஒட்டன் மட்டும்
சுற்றிய நிழல்போல் நின்றான்:
“சூழ்கவிப் புலமை வாளால்
பற்றிய அரவைக் கொன்று
பாலனைக் காத்தான் கம்பன்!
உற்றினி நோக்க வேண்டும்!
உறுவினை யறிய வேண்டும்! 83

அஞ்சாத பேதை தன்னை—
அம்பிகா பதியைப்—பொல்லா
நஞ்சாய வடிவத் தோனை—
நன்றியில் லாத நாயை—
மஞ்சாடு நாட! மேலும்
மண்ணிலே விட்டு வைத்தால்
பஞ்சாக நினது சீர்த்தி
பறந்தோடும்! ஐய மில்லை! 84

பேருக்குப் பங்கம்! பெற்ற
பெருமைக்குப் பங்கம்! நாறும்
தாருக்குப் பங்கம்! ஓங்கும்
தமருக்குப் பங்கம்! ஆளும்
ஊருக்குப் பங்கம்! மன்னர்
உலகுக்கே பங்க மன்றோ?
யாருக்குப் பங்க மில்லை?
யானைநூ(று) ஒழிக்கும் மன்ன! 85

தாழநேர்ந் திழியும் கெட்ட
தருணமே வந்தது! அன்ப!
சோழனே கேளாய்! ஒன்று
செப்புவேன்! தீய நஞ்சை
வாழநீ இனியும் விட்டால்
வான்புகழ் இடிந்து வீழ்ந்து
ஆழவே புதைந்து போகும்!
அருங்குலம் ஆவி யன்றோ? 86

கங்கைபே ராறும் அன்னைக்
காவிரி யாறும் காதல்
மங்கைய ராகக் கொண்டு
மண்ணிலே புகழை ஈன்று

துங்கமாய்ச் செங்கோல் பற்றித்
தூயநற் குலத்தைக் காத்த
புங்கவர் வழியில் வந்த
புரவல! சிந்திப் பாயே! 87

ஓச்சனுய்ப் பிறந்த கம்பன்
ஒருபிள்ளை தானும் இங்ஙன்
நீச்சனுய் மாறி இன்று
நின்புகழ் மாய்க்க வந்தான்!
தீச்சின மன்ன! நின்றன்
திருவினைக் களவு செய்தோன்
மூச்சினே டின்னும் உள்ளான்?
முடிவினைக் கண்டா னில்லை! 88

உண்பது உன்றன் உப்பு!
உடுப்பது உன்றன் ஆடை!
நண்பது அவன்பால் கொண்டாய்!
நலிவின்று கொட்டிச் சேர்த்தான்
எண்பது கோடி சன்மம்
எடுப்பினும் உய்யு வானே!
தண்படு செந்தேன் வார்க்கும்
தார்புரண் டாடு மார்ப!" 89

கூத்தனும் பலவும் கூறிக்
குலோத்துங்கன் சீற்ற நெஞ்சில்
சேர்த்தனன் மேலும் தீமை!
செய்தனன் நினைத்த எண்ணம்!
ஆர்த்தனன்! கம்பன் நற்சேய்
அவ்விடம் வருதல் தன்னைப்
பார்த்தனன்! முகத்தில் நேச
பாவமே வைத்து நின்ருன்! 90

ஏட்டினை மன்னன் பாலே
    ஏறுதான் அளித்தான் ! அன்பு
காட்டினன் போல ஒட்டன்
    காட்சியே முகத்தில் வைத்துத்
" தீட்டினர் நுந்தை இன்பத்
    திருவளர் நன்னூல் ! பிள்ளாய் !
நாட்டிய நுங்கள் சீரே
    நன்றுநின்(று) என்றும் வாழ்க ! 91

மாயாது வாழ்க !" என்றான்.
    மணித்தமிழ்க் கம்பர் பெற்ற
சேயான செம்மல் சீறிச்
    செப்பினன் : " கூத்த னரே !
தீயான தெழுந்து வையம்
    தீரலாம் ! எந்தை சீர்த்தி
தேயாது ! அறிக ! மெய்க்குத்
    தேய்வுதா னுண்டோ ? சொல்லாய் ! 92

வையகம் இருக்கு மட்டும்,
    வானக மியங்கு மட்டும்,
துய்யநற் றமிழர் வாழ்வு
    தூர்ந்துபோ காத மட்டும்,
செய்யவின் கவிதை உண்ணும்
    செயல்மறை யாத மட்டும்
கையகத் தமிழ்க்கோ கம்பன்
    காவிய ஆட்சி போமோ ? 93

கலையுள நெஞ்ச மெல்லாம்
    கம்பனுக்(கு) ஆட்சி பீடம் !
நிலையுள தான வாழ்வு
    நிச்சயம் அவனுக் குண்டு !

மலையுலா வந்து வீசி
மகிழ்விக்கும் இன்பத் தென்றல்!
அலையுளே பிறப்பு கொண்ட
அருந்தமிழ் அமிழ்தம்! கண்டாய்! 94

விடையருள் செய்க! மன்ன!
விண்ணப்பம் செய்தேன்!" என்றான்.
"கடையருள் சேரா நல்ல
கம்பரின் சேயே! ஞானம்
அடையநற் றமிழே பாடும்
அறிஞரின் சிறுவ! செல்க!
நடையளந் துய்க!" என்று
நன்மணி முடியோன் சொன்னான். 95

'செல்'லெனச் சென்றான் செம்மல்!
செங்கதிர் அறியாக் கானத்(து)
அல்லெனக் கருத்த நெஞ்ச
அருந்தமிழ் ஒட்டன் பாலே—
கல்லென உருகா வல்ல
கருத்தினன் பாலே—மன்னன்
சொல்லலுற் றான்:"இப் பேதை
சோர்வின்றி வீசு கின்றான்! 96

அழிதற்கு நேரும் காலம்
அண்மையே! சேய்மை யன்று!"
விழிதனில் நெருப்பு சீற
விரிசின மொழிகள் பெய்தான்!
பழிதனில் பங்கு கொண்டு
பார்த்திபன் பாலே வந்து
மொழிந்தனன் ஒருவன்: "மன்ன!
மொழிவது மெய்மை யாகும். 97

கலையதில் வலவ ரான
கம்பரின் செல்வன், நன்னூல்

நிலையதில் தேவி தன்பால்
நீடுரை செய்தான் ! துன்ப
அலையதில் வீழ்ந்தோன் போல
அலறினன் ! துடித்தான் ! பொன்செய்
சிலையதை யொத்த மாதோ
சிதைவிலாக் காத லுற்று, 98

'இறப்பினும் அச்சமில்லை !
இருவரும் இறப்போம் ! ஐயோ !
மறப்பெனும் பேச்சு வேண்டாம்
மகிழுவோம் வாழு மட்டும் !
நிறைப்பெரும் தமிழில் வல்லோய் !
நீநிலா அழகு வெள்ளம்
திறப்புறும் போது இன்று
திகழ்மலர்ச் சோலை சேர்க ! 99

வருக !நீ வாராக் கால்என்
வாழ்வுக்குத் தாழ்வே !' என்றாள்.
அருகடைந் தணைத்து அன்னான்
' அவசியம் வருவேன் !' என்றான் ;
பெருகநீ ரோடு கண்ணில்
பிரிந்தனர் " என்றான் ! வேந்தன்,
"கருகிநீங் கிடும்அக் காலம்
கண்டது ! செல்க !" என்றான். 100

வெண்பா

பருந்திட்டு ஊர் தீவினையை மாற்றிடவும் வல்லார்?
விருந்திட்டான் மன்னன் ! விழிகூர்—பருந்திட்ட
வட்டம்போல் நோக்கி வளைத்தான் ! இளங்கவியைத்
திட்டம்போல் செய்தான் திரு.

6. கவிபாடு காதை

பரவியநல் லொளிசுரந்து பாரைக் காத்துப்
பாலித்து அணிபுரிந்த பகலின் வேந்தன்
இரவியவன் கதிர்சுருக்கி இழிந்து சென்று
இருங்கடல்வாய் மேற்றிசையின் இடையே போனான்
திரவியமெல் லாம்சென்று திருட்டு ஈந்தார்
திகைப்புற்ற உள்ளம்போல் திகழ்ந்த(து) இந்த
வரைவிளங்கு வையமெல்லாம் வாரிக் கொண்ட
வல்லிருள் தான் ! எவ்வெவரும் வருத்த முற்றார்! 1

பசித்தவர்க்கு அன்னமிடப் பரிந்து செல்லும்
பண்புடைய வள்ளலைப்போல் பால்போற் சோதி
பொசித்தெவர்க்கும் தண்ணமுதம் பொழிந்து வானில்
பொங்கிஎழுந் தோடிநிலா பொலிந்து நிற்க
விசித்திரமே! பேரழகு விருந்தே! ஆ! ஆ!
விண்ணெங்கும் பசும்பொன்னே விளைந்த காட்சி!
புசித்திடற்கு ஐந்தாய புலன்க ளெல்லாம்
புரியாது ஏங்கின !இப் புதுமை என்னே ! 2

விண்ணகத்தே ஒளிநிலவு விளைந்து பூத்து
விரிந்தெங்கும் நன்மணத்தை வீசும் காட்சி
கண்ணகத்தே—உளமெல்லாம் களித்து ஆடக்—
கம்பன்சேய்—இளங்கவிதைக் கலைஞன்—கண்டான்!
எண்ணகத்தே நீங்காத எழிலை நெஞ்சில்
எண்ணினான்! தனைமறந்தான் ! எழுந்தான் ! நாடி
வண்ணத்தேன் சொரிமலரின் வசமாய்ச் சேர
வதிகின்ற மாளிகைக்கு வண்டாய்ச் சென்றான். 3

வான்பொழியும் மாமழையின் வளத்தை வேண்டி
வாடுகின்ற பயிர்போல வாடி வாடித்

தேன்பொழியும் தன்காதல் தேவை எண்ணித்
திருமகளும் தவமிருந்தாள்! தேடி வந்து
கான்பொழியும் தென்காற்றும் காய வந்த
கவின்மதியும் நின்றலைக்க கண்ணீர் வெள்ளம்
தான்பொழியும் கயற்கண்கள் தடவி நெஞ்சம்
தாங்காத வருத்தமெலாம் தாங்கி நின்ருள்! 4

ஓடோடிக் கவிஞனவன் வந்தான் ஓதும்
உயர்காதல் அவனுடைய உள்ளம் தன்னில்
நீடோடி வேருன்றி நிலைத்த தாலே!
நீங்காது எந்நாளும் நினைவில் நின்று
கூடோடு வாழுகின்ற கொளுத்தும் காதல்
கொல்லியின்சூட் டிற்கெவர்தான் குலையா தாரே?
ஊடோடும் மையல்நோய் உறவு பெற்ருல்
உளங்குமுறித் துடியாதார் உலகி லுண்டோ? 5

மாடத்திற் பேரழகு மாது நின்ருள்!
மாக்கவிஞன் வந்தின்ப மதுவை ஈயக்—
கூடத்—தன் பால்வருவான் குறையாக் காதல்
கொண்டுவரு வானென்ற கொள்கை யோடே!
வாடத்தன் உள்ளமெலாம் வருந்த வந்த
வல்நோய்க்கு மாமருந்தாய் வாய்ந்து காதல்
ஓடத்தி லேற்றிசெலும் ஒருவன் தன்னை
உளமெண்ணி வரவெண்ணி உவந்து நின்ருள்! 6

ஏறுபோல் கவிஞனவன் எதிரில் வந்தான்!
எழிற்கடலைத் தன்விழியால் அளந்தான்! நெஞ்சில்
ஆறுபோல் பேருணர்ச்சி அறுக்க அன்னோன்
ஆற்ருது துடிதுடித்தான்! அகங்கு லைந்தான்!
நீறுபோல் தன்வாழ்வு நீங்கிப் போமோ?
நிலைத்திடுமோ? எனஎண்ணி நீடு நைந்தான்!

சாறுபோ காதசுவைச் செங்க ரும்பைச்
சட்டென்று கடித்துண்ணச் சாம்பி நின்றான்! 7

பெண்ணுருவாய் மாடத்தே பேசி நிற்கும்
பேரழகின் சீரையெலாம் பெருமை யெல்லாம்
தன்னுரையால் இன்மொழியால் தமிழால் பாடத்
தலைப்பட்டான் இளங்கவிஞன்! தண்மை சார
விண்ணுலகும் மண்ணுலகும் விளங்கி நின்ற
விரிநிலவும் அவனுக்கு விளைவு கூட்டிப்
பண்ணுதவும் நல்லுரமாய்ப் பரவி வந்து
பாலித்து நின்ற(து)அவன் பருகி யேற்றான்! 8

வள்ளலைச்சென்(று) அருந்தமிழால் வாழ்த்திப் பாடும்
வறியவன்போல் கவிச்செம்மல் வாழ்த்த லுற்றான்!
உள்ளலைக்கும் காதலுக்கு உணவு ஈந்து
உறுபசியைத் தீர்த்தொழிக்க உரைத்து நின்றான்!
கள்ளலைக்கும் சுருள்கூந்தல் கன்னி தன்னைக்
காவியத்தை ஓவியத்தைக் காத லென்னும்
வெள்ளலையில் தன்னைப்போய் வீழ்த்தி விட்ட
வெற்றியினைத் தன்கவியால் விதந்து நின்றான்: 9

"உள்ளமுவந் தேமயங்கி உணர்வு பொங்க
ஊற்றெடுத்த பேரழகு உருவே! காதல்
தெள்ளமுதே! தீம்பாலே! தெங்கே! இன்பத்
தேன்மழையே! ஆவியிலே தேடி ஏற்றுக்
கொள்ளவந்த பூத்தமலர்க் கொம்பே! மின்னும்
கொழுஞ்சுடரே! நல்லிசையே! கோதாய்! நெஞ்சம்
துள்ளவுன்றன் பேரழகுத் துடுக்கா லென்னைத்
துயர்படுத்த வந்தாயே! துணைதான் யாரோ? 10

சிரிக்கின்றாய்! என்னாவி சிதைக்கின் றாயே!
சீறிவந்து என்னுளத்தைச் சினந்து பற்றி

எரிக்கின்ருய்! ஐயகோ! என்செய் வேனே?
எழிலையெலாம் பலபலவாய் எதிரில் காட்டி
விரிக்கின்ருய்! பொறுமையினை விலக்கு கின்ருய்!
விண்மதியின் எழிற்செருக்கை விரட்டி விட்டுத்
தரிக்கின்ருய்! நீபோதும்! தண்டிக் காதே!
தாங்குவதும் ஆமோ?செந் தமிழே! அன்பே! 11

காவியமே! பிழிந்தெடுத்த கருப்பஞ் சாறே!
காதலெனும் அமுதாலே கணித்துச் செய்த
ஓவியமே! என்னுயிர்பால் ஓடி வந்து
ஒற்ருன இன்பரச ஒழுக்கே! என்றன்
ஆவியின்மேல் குறிவைத்து அழிக்க வந்த
அழியாத நெடும்பகையே! ஐயோ! நீதான்
ஏவியென்பால் உன்எழிலை எதிரில் விட்டாய்!
என்செய்வேன்? என்ருலே எதிர்த்த லாமோ? 12

குன்ருத பேரழகுக் குன்றே! தேய்ந்து
குறையாத பெருஞ்செல்வக் குவையே! என்னை
வென்ருடி மகிழ்ந்துவக்கும் வேந்தன் பெற்ற
வெற்றிநிலை வான்கொடியே! வெள்ளை வாணி
நின்ருடும் பங்கயமே! நிதியே! நெஞ்சில்
நிகழ்கின்ற கவித்துவமே! நெடிய வானில்
சென்ருடும் தண்மதியே! அழகுச் செக்கில்
செலுத்தியெனைப் பிழியாதே! செத்து மாய்வேன்!

விழியாலே என்நெஞ்சை வெல்லு கின்ருய்!
விளைவாலே என்னுயிரை விரட்டு கின்ருய்!
மொழியாலே—நீபொழியும் மோகத் தேனல்—
மூடுகின்ருய்! பேரலைபோல் மோது கின்ருய்!
தொழிலாக என்னுயிர்மேல் தொடுத்து விட்டாய்
தொலையாத கடும்போர்நீ! தோகை கொண்ட

எழிலான மாமயிலே ! ஏத முற்றேன் !
ஏனென்னைக் கொல்லுகின்றாய்? ஏது செய்வேன்? 14

நகையென்னும் கோடரியால் நாயேன் தன்னை
நறுக்காதே ! என்னுயிரை நானே காக்கும்
வகையென்னே ? உய்கின்ற வழிதான் என்ன ?
வண்பசுவின் பால்எரிக்க, வானில் போகும்
புகையன்ன பூந்துகிலைப் புனைந்து என்முன்
புகழரிய பேரழகாய்ப் புகுந்து நின்றாய் !
முகையன்ன முத்துப்பல் முன்னால் காட்டி
முறுவலித்து என்னாவி முடிக்க வந்தாய் ! 15

பித்தனா யாக்கிவிட்டாய் ! பிதற்று கின்றேன் !
பீடழிந்து யாசிக்கும் பிச்ச னானேன் !
முத்தனையாய் ! காதலினை மூட்டு கின்ற
முத்தமிழே ! பேரமுதே ! முறையோ ? என்னை
எத்தனையோ விதவிதமாய் ஆட்டு கின்றாய் !
ஏந்திழையே ! மாங்குயிலே ! என்பால் அந்தோ !
இத்தனையும் தாங்குதற்கு ஆற்ற லுண்டோ ?
ஈடில்லாப் பெருநிதியே ! இன்பத் தேனே! 16

நில்லாத பேருலகில் நிலையாய் என்றும்
நிற்கின்ற பேரின்பம் நின்பால் கண்டேன் !
வெல்லாத கூரியகண் வேலால் என்னை
வென்றுவிட்ட பேரழகே ! வேந்தின் பொன்னே !
கல்லாத காவியத்தைக் கற்பிக் கின்ற
கற்பனையே ! எனையீர்த்த காந்தப் பூவே!
இல்லாத அதிசயத்தை இயற்றிக் காட்டி
இதயத்தை உண்ணுகின்றாய் ! இறந்தேன்! ஐயோ

மாமருந்தே ! மனத்தெழுந்த மயக்கம் தன்னை
மாய்த்திடு ! வா ! நின்னுறவால் மண்டி நிற்கும்

காமமுந்த என்நெஞ்சக் கரையே வீழ்ந்து
காலன்தன் ஆட்சியிலே கலப்பேன்! மாதே!
யாமருந்த வந்தடைந்த அமுதே! என்போல்
யார்புரிந்தார் நற்றவமே! அணங்கே! மிக்க
ஏமமிந்த வையகத்தே எனக்கே அன்றோ?
என்காதல் மின்எனினும் ஏற்பு கண்டாய்! 18

மன்றடைந்த மாருதமே! மங்காச் சோதி
மாமணியே! என்னகன்ற மனத்தே வந்து
நின்றடைந்த ஒங்குமொளி நிலவே! வந்தேன்!
நீணிலத்தில் நம்முடைய நீங்காக் காதல்
குன்றடைந்த தீபமன்றோ? குயிலே!" என்று
கூவிவிட்டு மாளிகையைக் குறுகி ஏறிச்
சென்றடைந்தான் இளங்காளைச் செம்மல்! கன்னி
செங்கரத்தால் அணைத்தன்பு செலுத்தி நின்றாள்! 19

மூச்சோட அணைத்திருவர் மூழ்கி நின்றார்!
'முறிந்திடுமோ எலும்பு'என்ன முயன்று சென்றார்!
பேச்சோட வில்லைஇரு பேர்க்கும்! இன்பப்
பெருக்கினிலே மதிமயக்கம் பெற்று நாடி
நீச்சோட லுற்றிருந்தார்! நினைவு இல்லை!
நிலைமறந்த மயக்கினிலே நினைவு முண்டோ?
நாச்சோர்ந்து கவியழகன் நண்ணு வானோ?
நாமலர்ந்து அன்னவனும் நவிலு கின்றான்: 20

(வெண்பா)

"உருகி யுடல்கருகி உள்ளீரல் பற்றி
எரிவ தவியா தஎன் செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே இட்ட நெருப்பு" *

* தனிப்பாடல் திரட்டு.

"நெஞ்சிலே அவளிட்ட நெருப்பு உன்றன்
நெடுவாழ்வைத் தொலைக்குதடா ! நீச்சா ! என்ன ?
அஞ்சலின்றி......! கொடும்பாவி ! அற்ப நாயே !
அரசனுக்குக் கேடுசெய்தால் ஆவ துண்டோ ?
வஞ்சகனே ! உன்னுடைய வாழ்வுக் கின்று
வந்ததடா முற்றுநிலை ! வாளுக் குண்ண
நஞ்சளித்து உன்னுயிரை நாசம் செய்ய
நான்அளிப்பேன் ! என்குடிக்கு நலிவு செய்தாய் ! 21

" கறைபடுத்தி னாய் !குலத்துக் கௌர வத்துக் [தாய் !
கவின்மையெலாம் வீழ்த்திவிட்டாய் ! களங்கம் செய்
உறைபடுத்தி என்னுயிரில் உன்னைக் காத்தேன் !
உனைமகளாய்ப் பெற்றேனே ! ஊழோ ? ஐயோ !
நிறைபடுத்தி வாழுகின்ற நீர்மை யெல்லாம்
நீங்கியதே ! யாரங்கே ? நீச்சன் தன்னைச்
சிறைபடுத்திக் கொண்டுசெல்க ! சீக்கி ரத்தில்
சிரம்பிரித்துப் பாவியினைச் சிதைப்போம் நாமே!" 22

பின்னாலே மறைந்திருந்து பித்தங் கொண்ட
பேச்செல்லாம் செவிமடுத்துப் பிறழ்த லுற்ற
மன்னாதி மன்னனவன் மருங்கு வந்தான் !
மதயானை போல்பிலிற்றி மருட்டி நின்றான் !
பொன்னாளோ இதையெல்லாம் பொறுத்துப் பின்னர்
"பொருந்தியஇவ் வுடலத்தைப் பிரித்த லாகும் !
என்னாவி அன்னவன்பால் இணைந்த பின்னர்
எவராலே என்செயலாம் ? எந்தை யாரே ! 23

நினையாது மனங்கொதித்து நிந்திக் காதீர் !
நிச்சயமென் காதலுக்கு நீக்க மில்லை !
எனையாதென் றேவெகுண்டு எறிய வேண்டாம் !
என்வாழ்வின் சுடரேற்ற எழுக !" என்று

புனையாத சித்திரமே புலம்பி நொந்தாள் !
புவியாளன் உளக்கல்லில் புகுமோ ? "நெஞ்சில்
தினையேனும் அச்சமின்றி தீய பாதை
திரும்பிவிட்டாய் ! குலப்புகழைத் தின்று விட்டாய் !

இவ்விடத்தை விட்டிவனை இழுத்துச் சென்று
இருட்சிறையில் காப்பிறுத்தி இடுவீர் ! இந்த
வெவ்விடத்தை மண்ணுலவ விட்டு வைத்தால்
வேதனைதான் வந்தடையும் ! விரைக !" என்றான்
அவ்விடத்தை விட்டவனை அகற்றிப் போனார் !
அடுஞ்சிறைக்கு இளங்கவியும் அணியா யானான் !
செவ்வியெலாம் கோவேந்தன் செல்வி பாலே
செப்பிநின்றான் ! அங்கொன்றும் செல்ல வில்லை ! 25

"என்மகளே ! என்பொருளே ! என்றன் வாழ்வே !
எழில்திருவே ! நீயன்றோ என்றன் ஆவி ?
பொன்மகளே ! அன்னவன்பால் பொருந்தி னாயே !
போற்றியநம் குலப்பெருமை போகு மன்றோ ?
மன்மகளே ! கம்பனுடை மகனும் தக்க
மணவாள னாயிடினும் மன்னன் ஆமோ ?
இன்மகளே ! அவன்நினைவை இன்னே உன்றன்
இதயத்தை விட்டகற்ற இசைக !" என்றான். 26

"வரையிட்டு நாடெல்லாம் வளைத்து ஆளும்
வயவேந்தே ! நன்றுமது வாய்மை ! பாலைப்
பிரையிட்டுத் தோய்ந்தபின்னர் பிரித்த லாமோ ?
பிச்சையிட்டு விட்டபொருள் பெறுத லாமோ ?
கரையிட்டு நெஞ்சமெலாம் காத லுக்குக்
காட்டிவிட்டேன் ! என்னுயிரைக் கவிஞ னுக்கு
இரையிட்டு விட்டுவிட்டேன் ! இழிந்து சென்று
இதயத்தை மீட்பதூஉம் இயல்வ தாமோ ? 27

முடிகொண்ட மன்னரினும் மூளும் காதல்
முத்தமிழை அழகொழுக முறையாய்ச் செய்து
அடிகொண்டு பாடிநமை ஆனந் திக்கும்
அன்னவரின் சீர்த்திமிக அரிய தன்றோ?
இடிகொண்டு என்காதல் இன்ப வாழ்வை
இடிக்காதீர்! நானுமக்கு இன்ப ளன்றோ?
மடிகொண்டு நீரெடுத்து மதித்துக் காத்த
மகளன்றோ? நானுமது மதலை யன்றோ? 28

அன்றியும்யான் உம்மையொன்று அறையு கின்றேன்!
அறமாமோ? நெறியாமோ? அமைய காதல்
ஒன்றியிரு உள்ளங்கள் ஒன்றாய்க் கூடி
ஒழுகியபின் அவைபிரிதல் ஒழுக்க மாமோ?
வென்றியுறும் தமிழ்வேந்தே! வேளே! உன்றன்
வேங்கைதமிழ் எங்கேனும் விரித்த துண்டோ?
நின்றிதனை என்றனுக்கு நேரில் கூறி
நிகழ்த்திடுவீர்! நுங்குலத்தில் நிகழ்ந்த துண்டோ?

சீரியநற் கற்பொழுக்கச் செம்மை நீங்காச்
செந்தமிழர்ப் பெருநெறியில் செழித்து வாழும்
காரிகையர் எங்கேனும் காத லுற்றுக்
கருத்தழிந்து பின்பிறழ்ந்த களங்க முண்டோ?
வேரியக்கி வளர்ந்தெழுந்து விருட்ச மாகி
வெறிமலர்தேன் பொங்கிவிட்ட வெற்றி வாழ்வை
நீரியக்கி அருள் சுரந்து நெறியைக் காத்து
நியமத்தை நாடிவந்து நிற்க வேண்டும்! 30

கண்ணார யான்வாழக் கண்டு நெஞ்சம்
களிநடனம் புரிந்துவக்கும் கருத்து உண்டேல்
பெண்ணாளென் இதம்குறித்த பேறு தன்னைப்—
பெரும் பரிசை—வாழ்வருளும் பெற்றி தன்னை—

மண்ணாளும் தோள்வலிய மன்னா! வந்து
மயங்காது எனக்கீக! மனங்கொள் ளாக்கால்
விண்ணாள எனக்கினிது விடைய ருள்க!
விளக்கியின்னும் பேசுவது வீணே!" என்றாள். 31

"பேயாடி வந்துளறிப் பிதற்ற வேண்டாம்!
பித்தாடித் திரிகின்ற பேதைப் பெண்ணே!
வாயாடி யாகிவிட்டாய்! வம்பு பேசி
வாதாடி என்னெதிரே வந்து விட்டாய்!
நீயாடித் திரிவதெலாம் நாளை மட்டும்!
நினைவாடி மாறியந்த நீச்ச னுன்பால்
ஈயாடிப் பலாச் சுளையில் இசைத்து வந்து
இருந்தாடிச் சூழ்வதுபோல் இணைந்து விட்டான்!

அன்னவனை நாளைக்கே அவையில் வைத்து
அனைவருக்கும் செய்தபழி அறிவித் துப்பின்
என்அவனைச் செய்கின்றேன் என்று பாராய்?
என்புகழின் மாடத்தை இடித்து விட்டான்!
மன்னவனின் குலத்தினுக்கு மாசு செய்தான்
மங்கையுமென் வான்புகழை மறந்து விட்டுச்
சின்னவன்பால் பொன்னான சிந்தை தன்னைச்
சேர்த்துவிட்டு நற்குலத்தைச் சிதைத்து விட்டாள்!

வினைப்பயனோ? ஏனோ இவ் விளைவு?" என்று
விசனித்துப் புலம்பிபல விரித்து நெஞ்சில்
நினைப்பவனாய்ப் போய்அகன்றான்! நிலவு மிந்த
நிகழ்ச்சியெலாம் தான்கண்டு நிலைகொள் ளாது
பனிப்புகையோ டேயுலவிப் பரவி யெங்கும்
படர்கின்ற முகிலிடையே பதுங்கிற்(று)! ஆகும்
முனைப்பயனை அனுபவித்து முடிக்கத் தானே
முறியடிக்கும் அவ்விதியும் மூண்டு சேரும்! 34

ஆதித்தன் வந்துற்றான் அடுத்த நாளில் !
அவைக்களமும் கூடிற்று ! அரிய ஞானம்
போதித்த புலவர்களும், பொங்கி வந்து
பொதுமக்கள் கூட்டமதும் பொருந்தி னார்கள் !
சாதித்த பேரறிவு சக்தி பெற்ற
சால்புநிறை அமைச்சர்களும் சார்ந்து நின்றார் !
பேதித்த மன்னவனும் பெருமை காக்க
பேரவைக்கு இல்லிருந்து பெயர்ந்து வந்தான் ! 35

கரங்களிலே விலங்கிட்டுக் காலை தன்னைக்—
கம்பன்சேய் தன்னை—மறக் காவ லர்கள்
தரங்கழிய அழைத்தங்கு தந்தார் ! நின்ற
தமிழவையே அதுகண்டு தழுத ழுத்து
"உரங்கொண்ட இவனுக்கு உற்ற தென்ன ?
உணர்ந்திலமே !" என்றிரங்கி உரைத்து நின்றார் !
சிரங்கவிழ்ந்து நிற்கின்ற சீரா ளன்பால்
சீதமுற யாருமருள் சிந்தை தந்தார் ! 36

"என்பாலே நேசமுற்று எந்த நாளும்
என்குலத்துப் பெருமையினை ஏற்றுக் காக்கும்
அன்பார்ந்த குடிமக்காள் ! அரச மன்றை
அணிசெய்யும் மாமணிகாள் ! அனைவ ருந்தான்
இன்பார வாழியவே ! இனிது வாழி !
ஈண்டெனது அழைப்பிற்கு இணங்கி யேஎன்
தன்பாலே வந்தடைந்தீர் ! தமிழர் நாட்டுத்
தலைவன்பால் கொண்டவன்புத் தன்மை நன்றே ! 37

நஞ்சிலே துவைத்தெழுதி நாட்டிச் செய்த
நல்லோவி யத்தைப்போல்—நமது அன்பு
நெஞ்சிலே விட்டகன்று நீங்கு மாறு
நிலைகெட்டு மாறிவிட்ட நீச்ச னை—

செஞ்சுவைநற் றமிழ்க்கம்பன் சேயைப்—பாரீர்!
செந்தமிழின் நெறியுணராச் செயலைச் செய்த
கொஞ்சுதமிழ்க் கவியரசன் கொடுத்த செல்வக்
குமரனென்றன் குலங்கெடுத்த கூற்ற ஞனுன்! 38

கூற்றவனு யாகிவிட்டான்! குலங்கெடுத்துக்
குலைத்தவனு யாகிவிட்டான்! கொற்றம் எண்ணு
மாற்றவனு யாகிவிட்டான்! மாட்சி தன்னை
மறந்தவனு யாகிவிட்டான்! மனதை விட்டு
வேற்றவனு யாகிவிட்டான்! வெற்றி வேற்கு
விருந்தவனு யாகிவிட்டான்! வினையின் பாலே
தோற்றவனு யாகிவிட்டான்! தொல்லை தந்த
தொழிலவனு யாகிவிட்டான் தோன்றல்! அந்தோ!

செல்வத்தைக் களவுசெய்தான்! செயத்த காத
செய்துவிட்டான்! இப்பாவி செய்து விட்டான்!
வெல்வதற்கு அஞ்சாத வேந்த னுக்கே
வெடிவைத்துப் பெருங்கேடு விளைத்து விட்டான்!
கல்விநலம் பெற்றிருந்தும் கயவ ஞனுன்!
கவிபாடிப் பெற்றபயன் களவு தானே?
வல்வினையோ? என்னுயிரை வருத்த வந்த
வாதனையோ? ஏதென்று வகுத்துச் சொல்வேன்? 40

தாளுக்கு அணியாகத் தரணி வேந்தர்
தலைசாய்க்கும் என்புகழைத் தாக்கு மிந்தத்
தேளுக்கு—அதன்துடுக்குத் தெரிந்தும்—இன்னும்
திரிந்திருக்கும் வாழ்வதனைத் தேரத் தந்தேன்!
கோளுக்குத் தீமையன்ரே? கொடுமை யன்ரே?
கொடியவனைப் பசியுற்றுக் கொதித்து வாடும்
வாளுக்கு நல்விருந்தாய் வழங்கு கின்றேன்!
வளநாடு மேலோங்கி வாழத் தானே! 41

மன்னனுக்கு வந்ததுயர் மக்க ளுக்கு
  மனைதோறும் வந்துவிட்ட மயக்கம் செய்யும்
இன்னலன்றோ ? நலம்புரியும் இறைவன் கொண்ட
  இதந்துடித்தால் உங்களுக்கு இன்ப முண்டோ ?
அன்னவனைத் தண்டித்தால் அரச நீதி
  அறம்பிறவும் காத்தவனாய் ஆவேன் !" என்றான்
சொன்னவன்தன் சொற்குஉரை சொல்வான் போலச்
  சோதரனைத் தீர்க்கஒட்டன் சொல்ல வந்தான் : 42

" வாயாரச் சொல்லுதற்கும் வருமோ ? நம்மை
  வாழ்விக்கும் இறைவனுக்கு வாய்ந்த இன்னல்
நோயாலே நெஞ்சமெலாம் நொந்து போனான் !
  நோற்றதவத் தால்பெற்ற நங்கை தன்னைத்
தாயாராய் மடித்தலத்தில் தவழ விட்டுத்
  தன்னுயிர்போல் குலோத்துங்கன் தாங்கிக் காத்தான்
வேயாரும் தோள்அழகு வஞ்சி தன்னை
  வேளாளன் போலோம்பி விரும்பிக் காத்தான் ! 43

ஆடாத ஆரணங்கின் அறிவு தன்னை
  அதோநிற்கும் கவியரசின் அருமைப் பிள்ளை
பாடாத பாட்டெல்லாம் பாடிக் காட்டிப்
  பண்ணாத சூழ்ச்சியெலாம் பண்ணி நாட்டிக்
கூடாத ஒழுக்கநிலை குறித்து மீட்டிக்
  குலப்பெருமை புகழ்க்கெல்லாம் குறைவு காட்டித்
தேடாத பெரும்பழியைத் தேடி யீட்டித்
  தேர்வேந்த னுக்குப்பெரும் தீமை செய்தான் ! 44

காத்தினிது மாமழைபோல் கருணை செய்துக்
  கண்ணிமைபோல் நமக்கமைந்த காவ லற்கு—
ஈத்தினிது உவக்கின்ற இறைவ னுக்கு—
  இரவலநன் மாமணிக்கு—இசைவா ணற்குப்—

பூத்தினிது அவனாலே பொலிவு பெற்ற
புலவரிலே ஒருவனன்றோ புன்மை செய்தான்?
பார்த்தினியும் திரிகின்றோம்? பாடும் வன்மை
படைத்திருந்து என்னபயன் பண்பு இன்றேல்? 45

பெய்வானைப் போலஅருட் பெருக்கத் தோடு
பேச்சாலும் செயலாலும் பேணி நன்று
செய்வானை மனம்வருந்த செய்யு வானைச்
செய்யவளும் மாறாது செறிவ துண்டோ?
நைவானைப் பாருங்கள்! நாடாள் வோன்தான்
நலிவதனைப் பாருங்கள்! நலிவு செய்தோன்
உய்வானா? நற்றமிழால் உயரு வானா?
உலகினிலே வாழ்வதற்கும் உரிமை யுண்டோ? 46

ஆட்சியினை வஞ்சகமாய் அடைந்து இந்த
அவனியெலாம் தமிழ்போல ஆளத் தான்இச்
சூழ்ச்சியினைச் செய்தானா? சூது கொண்ட
சுயநலமோ? கம்பன்சேய் சூழ்ந்த இந்த
மாட்சியிலாச் செயலுக்கும் மன்னிப் புண்டோ?
மாநிலமெல் லாம்சோழ மன்ன வன்றன்
தாட்சிறப்பை நன்கறிந்து தாழ, ஏனோ
தருதலைபோல் இவன்மட்டும் தருக்கி நின்றான்? 47

நம்மையெலர்ம் காக்கின்ற நாதன் அன்றோ?
நன்றியின்றி அன்னவன்பால் நடக்க லாமா?
இம்மையெலாம் நல்வாழ்வு இன்பங் காட்டி
இனிதுநமைப் பேணுகின்ற இறைவ னன்றோ?
செம்மையெலாம் சிதைக்கின்ற செயலைச்சென்று
செய்கின்ற நீச்சனுக்குச்—செப்பு வீரே!
உம்மையெலாம் கேட்கின்றேன்!—உரிய தண்டம்
உன்னியிங்கு மன்னவன்பால் உரைசெய் வீரே! 48

நீதிக்கே சார்பாக நிற்பீர் ! என்றும்
நில்லாத உலகினிலே நியம மாகச்
சாதிக்க உள்ளதென்ன ? சாரும் அந்தச்
சால்பன்றோ ? தவறாத சத்ய மன்றோ ?
பாதிக்கும் நமக்கினிய பண்ணார் வேந்தன்
பழியுண்டு நெஞ்சொடிந்து பதற லாமா ?
போதிக்க வேறுண்டோ ? பொருந்த வேண்டாம்
பொய்மையினை!" என்றுசொற் பொழிவு செய்தான்!

உள்ளார்கள் செய்வதொன்றும் உணரா தாராய்
உளங்கலங்கிப் பேச்சொன்றும் உரையா ரானார் !
வெள்ளாழி வாய்ப்பட்டு வெளியில் மீளும்
விதமறியா நாவாயாய் விதிர்த்தார் ! எல்லாம்
தள்ளாடும் நிலையகற்ற தமிழில் வெண்பாத்
தனங்கொடுத்த புகழேந்தி தவிப்பா ருக்குத்
தெள்ளாரும் முறைமையினைத் தெரியக் காட்டித்
தீந்தமிழால் ஓதிநன்று தெளிய வைத்தார். 50

"கொற்றவனே ! என்இனிய கூத்த னாரே !
கோதறியாக் காவியத்தைக் கொடுத்து வாழ்வு
பெற்றவனே ! கவியரசே ! பெரிய நாட்டுப்
பெருங்குடியே ! இவ்விடத்தில் பேசும் தன்மை
அற்றவனே யானெனினும் அமய மென்னை
அழைப்பதனால்—ஒட்டரைப்போல் ஆழ்ந்த கல்வி
கற்றவனே அலஎனினும்—கண்ட நீதிக்
கலங்கரை நல் விளக்கத்தைக் காட்ட வந்தேன் ! 51

நடந்ததுதான் இன்னதென்று நவிலக் கேட்கும்
நல்லாசை இருக்குமென்று நம்பு கின்றேன் !
தடந்ததும்பும் தெண்ணீரில் தழையும் சோதித்
தாமரைவாழ் திருமகள்போல் தன்மை வாய்ந்த

மடந்தைதனக் கும்கம்பன் மகன்த னக்கும்
மனத்தகத்தே ஊற்றெடுத்த மாருக் காதல்
இடந்தந்த(து) இன்றிங்கு இருக்கும் இன்னல்
இருளுக்கன் ரோ ?கதையை இயம்பு கிறேன். 52

ஏடெல்லாம் கற்றறிவு எழிலைப் பெற்று
எழும்புலவர் திருக்கூட்ட இருப்பில், நேரும்
ஈடில்லாக் காவியத்தை இசைத்துக் கம்பன்
இன்றமிழோ(டு) அழகமுதை இணைத்தா னன்ரோ?
கோடெல்லாம் கூறியஅக் கூட்டம் தன்னைக்
குறித்துஅம்பி காபதியே குலைத்து அன்று
நாடெல்லாம் போற்றநின்ருன்! நம்பி இன்று
நாய்போல விலங்குண்டு நலிகின் ருனே! 53

அன்றவனும் தாங்கியகூர் அறிவால்—வாய்ந்த
அருங்கவிதைப் பாடுகின்ற ஆற்ற லாலே—
நின்றவனும் கற்றகல்வி நீர்மை யாலே—
நீண்டெழுந்த கற்பனையின் நிறைவு தன்ஞல்-
சென்றவனும் தேடிபெற்ற செல்வ மான
செந்தமிழால்—நல்லொழுக்கச் செம்மை யாலே-
நன்றவனைப் போற்றிவந்தோம்! நாடி நாடி
நல்வாழ்த்துக் கூறிவந்தோம் நாமெல் லாமே! 54

அன்னவனும் பேரறிவும் அழகும் சான்ற
ஆண்டகையாய்த் தோன்றிவிட்டான்! அயனும்ஏனே
இன்னவனைப் பரிவோடு இளமை நல்கி
இயல்பெல்லாம் நன்கமைத்து இயற்றித் தந்தான்!
மன்னவனும் தன்குலத்து மணியாய்ப் பெற்று
மரபென்னும் நீண்டுயர்ந்த மதிலுள் காக்கும்
பொன்னவளும் அவ்வழகுப் பொருப்பைக் கண்டு
புலனெல்லாம் மாறிமனம் பொங்கி விட்டாள்! 55

வண்ணமுறு மாமலரை வண்டு நாடி
வந்தடைந்து சேராதோ? வான மேகம்
திண்ணமுறு மாமலைமேல் திரண்டு சென்று
திரியாதோ? இளவேனில் திகழக் கண்டால்
பண்ணமைய மாங்குயில்தான் பாடா தோ? நற்
பச்சைமயில் கார்கண்டு ஆடா தோ? ஓ!
எண்ணமுறு இளங்கவியின் எழிலைக் கண்டு
ஏந்திழையும் மாறியது இயற்கை யன்றோ? 56

வினைப்பயனை மாற்றித்தான் விடவு மாமோ?
வேந்தென்றும் கவியென்றும் வேறு பாடு
தனைப்படுத்தி யோஅடையும்? தாக்க எண்ணித்
தாவிவினை எழுந்துவிட்டால் தரமு மேது?
நினைப்பதற்கே அஞ்சுகிறேன்! நிடத நாட்டு
நெடுவேந்து நளன்வினையால் நேர்ந்த துன்பு!
முனைப்பயனை மாற்றிஅதை முறிய டிக்க
முடியாது! முடியாது! முடியா தன்றோ? 57

இறைபெற்ற எழிற்கொழுந்தும் இதய மெல்லாம்
இளங்கவிபால்—கம்பன் தன் இளவல் பாலே—
நிறைபெற்ற காவியத்தை நிருமா ணித்த
நெடுந்தகையோன் பெற்றதமிழ் நம்பிபாலே—
குறைபெற்று மன்னனின்று 'குலமே அந்தோ!
குலைந்தது!' எனச் சீற்றமுறக் கொடுத்து விட்டாள்!
துறைபெற்ற கவியரசும் துயருற் றேங்கித்
துடித்தயர அக்குமரி தொடுத்து விட்டாள்! 58

ஆற்றருகே அழகான சோலை! ஓர் நாள்!
ஆங்குஅம்பி காபதிதான் அமர்ந்தி ருந்தான்!
காற்றருகே வந்தியக்கிக் கருத்தில் மோத
கவிபாடிக் களித்திருந்தான்! காத லென்னும்

ஊற்றருகே நெஞ்சகத்தின் ஊடே பெற்று
உணர்விழந்து எழிற்சுடரும் உயிரை வாங்கும்
கூற்றருகே பெற்றவள்போல் குலைந்து அஞ்சிக்
குறித்தவன்பால் வந்துளத்தைக் கூறி நின்றாள்! 59

'கூடாத காதல்இது! கொற்றவன்தன்
குலக்கொடியே! இதுபுகழ்க்குக் குறைவன்றோசொல்
தேடாத இறைபெற்ற திருவாய் நீயும்
திகழ்ந்தொளிர ஏனிந்த தீமை? என்றும்
வாடாத நறுமலரே! வணங்கி உன்னை
வயவேந்தர் தான்விழையும் வாய்ப்பிருக்க
நாடாதே நீஎன்னை! நடவாய் மீண்டு!
நாயின்மேல் ஏனுனக்கு நாட்டம்?' என்றான்! 60

ஆனாலும் மன்னவன்தன் அருமை மங்கை
'ஆதரிக்க வேண்டுமிந்த அபலை தன்னைப்
போனாலும் இவ்வுலகைப் போக விட்டுப்
போய்த்தொலைவோம்! இப்போது பொருந்துவோமே
கோனாரும் குலங்கொண்ட கொம்பென்றால்என்?
கூடிடுவோம்! அன்றிஉயிர் கொடுப்பேன்!' என்று
தேனான இதழ்மலர்ந்து தெரிவித் தங்குத்
தெகிக்கின்ற காதல்நோய் திறத்தைச் சொன்னாள்!

'மறந்துவிடு' என்றுரைத்தான் 'மாட்டேன்! பாத
மலர்க்கீழே ஆவிவிட்டு மாய்வேன்!' என்றாள்
'கறந்துவிடுங் கவியாலே காலம் போக்கும்
கவிபெற்ற பிள்ளையன்றோ? காதல் தன்னைத்
திறந்துவிடு! போகட்டும் திரும்பி!' என்றான்!
'தீந்தமிழர் செந்நெறியின் திறமோ? என்னை
இறந்துவிடு என்றினிது இயம்பு!' என்றாள்
இவனுரையால் அவள்காதல் இறங்க வில்லை! 62

இன்னவனும் களிதுள்ளும் இளைய னன்றோ ?
இயற்கையினை வெல்லுவதும் இயல்வ தாமோ ?
கன்னலவள் நிலைகண்டான் ! கரைந்தான் நெஞ்சம் !
கருணையெனும் பண்பாலே காத லுற்றான் !
அன்னமவள் தன்அழகு ஆற்றில் வீழ்ந்தான் !
அனைத்தையுமே பைங்கிளிக்கு அர்ப்ப ணித்தான் !
என்னவனும் செய்திடுவான் ? எழிலில் தாவி
எரியுண்டு மாய்ந்திடவும் எழுந்து விட்டான் ! 63

ஏற்றமுறும் செந்தமிழின் ஏறும் ஆங்கு
எழுந்துள்ள காதலினை எள்ளி வேந்து
சீற்றமுறு மென்றறிவான் ! சிந்தை முற்றும்
சிறைப்படுத்திக் காமநெறி சிறக்க வைக்கும்
நாற்றமுறும் பூங்குழலி—நங்கைக் காக
நல்லாவி அர்ப்பணிக்க நம்பி யெண்ணிக்
கூற்றமுறும் இக்கொடிய கூடாக் காதல்
கூடிவிட்டான் ! பெண்வாழ்வைக் குறித்த தாலே! 64

யானுரைத்த இத்தனையும் மெய்யே ! ஆனால்
அவதூறு ஏன்ஒட்டர் அடுக்கிச் சொன்னார் ?
கானுரைத்த—தீந்தமிழால் கானம் பாடும்—
கவிக்குயிலோ இவ்வாறு களங்கம் செய்தார் ?
மானுரைத்த கூர்விழியாள் மதித்து மெய்யை
மற்றுரைக்க !" எனக்கேட்டார் ! மல்குங் கொம்புத்
தேனுரைத்த வாய்இதழைத் திரும டந்தை
திறந்துரைத்தாள்: "பொய்யறியாத் திருநாட் டாரே!

சான்றதமிழ்ப் புகழேந்தி சாற்றும் யாவும்
சத்தியமே ! கூத்தருரை, சரிவு இங்குத்
தோன்றதரும் வஞ்சமொழி ! தீய! அன்புத்
தோன்றலினைக் காதலித்தேன் ! தோற்றி ருந்தால்

ஊன்றயெழிற் பாதத்தே உயிரை விட்டு
உலர்ந்திருப்பேன்!" என்றுரைத்து அருவி தன்னைப்
போன்றழுது கண்ணீரைப் பொழிந்தாள் ! கண்டு
பொதுமக்கள் மனமுருகிப் போய்விட் டாரே ! 66

மீண்டினிது புகழேந்தி எழுந்தார் : "மெச்ச
மெல்லியலாள் ஒப்பிவிட்ட மெய்ம்மை தன்னை
ஈண்டினிது யாவருமே இசைக்கக் கேட்டு
இயல்பதனை நன்கறிந்து இருப்பீர் ! பொய்ம்மை
ஆண்டினிய புலவருளே அரிமா போன்றார்
அவ்வம்பி காபதிமேல் அவதூறாக
நீண்டெதனுல் புனைந்திசைத்து நிகழ்த்தினாரோ ?
நெடுந்தமிழே(று) அன்னவர்க்கும் நேர்மை யாமோ?

கன்னிக்கும் அவ்வழகுக் கவிஞனுக்கும்
கருத்தகத்தே பூத்துவிட்ட காதல் தன்னை
மன்னிக்க வேண்டுகின்றேன் ! மன்னா ! நின்றன்
மகள்வாழ்வைப் போக்கிடவும் மனங்கொண் டாயோ!
துன்னியவக் காதலினைத் துடைப்ப தென்றால்
தூயவள்தன் வாழ்வினையே துறப்ப தன்றோ ?
உன்னியுணர் வாய் !இந்த உலக மெல்லாம்
உறவுற்றோர் குலமாகி உயர்வ தென்றோ ? 68

செந்தமிழர் இனமெல்லாம் சென்று நாடும்
செந்நெறியின் பாதையிலே செல்லு வாயே !
பந்தமுறுங் காதலிலே பழகி விட்ட
பண்புடையார் நல்வாழ்வைப் பறிக்க லாமா ?
அந்தமுறுப் பெரும்பழியை அடைய லாமா ?
அவதூற்றுச் சொற்கிலக்காய் ஆக லாமா ?
சந்தமுறுங் கவியரசின் சாபம் பெற்றுச்
சாவாத பேரிழிவைச் சார லாமா ? 69

தண்வளைத்த பூவாரம் தழையும் மார்ப !
 தாரணியில் மேலோங்கும் தமிழின் இன்பப்
பண்வளைத்து நற்கவிதைப் பயிரைச் செய்துப்
 பாலிக்கும் கவியரசின் பால னுக்குப்
பெண்வளைத்து நீகொடுத்தால் பெருமை யன்றோ ?
 பேதையரன் றோதூற்றிப் பேசு வார்கள் ?
மண்வளைத்து ஆளுகின்ற மன்னா ! நீயுன்
 மனம்வளைத்து என்னுரையை மதித்துப் பேணாய்! 70

நீயுந்தான் அறம்பிடித்து நிலங்க ளெல்லாம்
 நெடிதாளும் புவியரசன் ! நிமிர்ந்த கம்பன்,
பாயுந்தீங் கவியுலகப் பரப்பை யாளும்
 பைந்தமிழின் கவியரசன் ! பரிந்து நூலை
ஆயுந்தோன் றல்தனக்கு அவளை நீயும்
 ஆக்கிவிட்டால் உன்பெயரும் அழியா மேன்மை
தோயுந்தார் மன்னவனே ! தோற்றங் கொண்ட
 தோகைமயில் நற்கூத்துத் தொடுக்கச் செய்வாய்! 71

அன்றியொரு யோசனையான் அறிவிக் கின்றேன் !
 அதன்படிநீ செய்தருள்வாய் ! அன்ன வன்தான்
ஒன்றியொரு நூறுகவி ஒருபொ ருள்மேல்
 உரைத்துவிட்டால் நீவஞ்சி ஒருத்தி தன்னை
நன்றியொடு இவ்வழகு நயன வேட்கு—
 நம்பிக்கு—மணம்புரிந்து நல்க வேண்டும் !
இன்றியொழிந் தால்நீயுன் இதயம் போல
 இடர்தருக ! துயர்தருக! இவனுக்" கென்றார். 72

"நல்லவழி ! நூறுகவி நவின்றால் ஈக
 நங்கையினை !" என்றார்கள் நாட்டு மக்கள் !
" வல்லவனா யின்உனது வஞ்சி தன்னை
 வயவேந்தே ! மணஞ்செய்து வாழ்த்து!" என்று

சொல்லிவருத் தம்குலேக்கச் சோர்ந்தார் பிள்ளேச்
சோகத்தி லாழ்ந்த கவி—சொல்லின் சோதி!
கல்லினேப்போ லுருகாத கடியநெஞ்சக்
காவலனும் சற்றுருகிக் கரைந்து சொன்னுன்: 73

" நூறினிய தீங்கவிதை நுவன்று விட்டால்
நுசுப்பில்லா ஆரணங்கை நுமது சொல்போல்
பேறினிய என்னுசைப் பெட்ட கத்தைப்
பெற்றிடலாம்! கவிப்பொருளாய்ப் பேரின் பத்தை
ஏறினிய கவியாலே இயம்ப வேண்டும்!
என்மகளே அவைக்களத்தே எதிரில் வைப்பேன்!
கூறினிய கவியாலே குளிர வைத்தால்
கூட்டமுற மாமயிலேக் கொடுப்பேன் கண்டாய்! 74

அவ்வாறு நூறுகவி அறையா விட்டால்
அப்பொருளே ஆங்கினிது அமையா விட்டால்
எவ்வாறும் என்செயலே எவரும் வந்து
எதிர்நின்று தடுத்தாலும் இசைய மாட்டேன்
ஒவ்வாத வாதமெலாம் ஒன்று மென்னே
ஒடுக்காது! என்மனம்போல் ஒறுப்பேன்! கூரும்
வெவ்வாளால் பழிவாங்கி வெஞ்சி னத்தை
வேதனையை யான்முடிப்பேன்! வெறுத்து" என்ருன்.

"பாடுகின்றேன்! நூறென்ன? பரமன் மேலே
பல்லாயி ரங்கவிகள்! பரிந்து சென்று
வாடுகின்ற பூங்கொடிக்கு வளமை குன்ரு
வாழ்வளிக்க—இல்லறத்து வாய்ப்ப ளிக்க—
நாடுகின்றேன்! மண்வளேத்த நலமே பெற்ற
நாயகனே! நீபெற்ற நங்கை தன்னேக்
கூடுகின்றேன்! திண்ணமிது! கொண்ட நூறுங்
கூறுகின்றேன்! இப்பொழுதேகுறித்துக்கொள்வாய்!

மெய்க்காதல் கொண்டொளிரும் மேன்மை எல்லாம்
மேதினிக்குக் காட்டுகின்றேன்! மெருகு காட்டிப்
பொய்க்காலம் போக்குகின்ற புல்லர்க் கெல்லாம்
பொருந்தியநற் பாடத்தைப் புகட்டு கின்றேன்!
வைக்காத இடத்திலெனை வைத்து ஐயோ!
வைதவரை மறக்கவில்லை! வசைகள் நெஞ்சைத்
தைக்காது போகவில்லை! தமிழ்த்தாய் இன்னும்
தவிக்கவெனை வைப்பாளோ? தாயே வாழ்க! 77

கட்டுண்டேன்! அவமானக் கறையு முண்டேன்!
கருணையிலார் வெவ்வுரையால் கனிந்த நெஞ்சில்
வெட்டுண்டேன்! காவலனின் வெறுப்பு முண்டேன்!
வெய்தெரிக்கும் பெருந்துன்ப விளைவு முண்டேன்!
மட்டுண்டே வெறிபிடித்து மதியி ழந்து
மாறியவ ரைப்போன்ற மாற்றூர் பாலே
திட்டுண்டேன்! அன்னவரின் தீங்கு நெஞ்சத்
திடந்தன்னைப் போக்கவில்லை! திரிக்க வில்லை! 78

எந்தைபுக ழேந்தியைப்போல் எழுந்த அன்பு
எல்லார்க்கும் தமிழ்ப்புலவர்க்(கு) இருந்து விட்டால்
சிந்தைபுகழ் மாமணியாம் செந்த மிழ்க்குச்
சீரழிவோ அன்றியிசைச் சிதைவோ ஏது?
நிந்தை,புகழ் மாற்றூர்க்கு நிகழக் கண்டால்
நிலைகொள்ளா நெஞ்சுடையார் நீணி லத்தில்
விந்தைபுகழ் கொள்வாரோ? வினையில் வாகை
வெற்றியினைக் காண்பாரோ? வெறுமை காண்பார்!

இசையாரப் பாடுகின்றேன்" என்றான் காளை!
"இரு!நாளை இசைத்திடலாம்! இரவி தோன்றித்
திசையாரும் இருள்நீக்கித் திகழும் போது
தீங்கவிதைப் பாடிடலாம்! திங்கள், வானின்

மிசையாரும் காட்சியினை மெத்த ஒக்கும்
மிளிர்கின்ற வெண்குடையான் மிகுந்த அன்பு
நசையாரும் மாங்குயிலை—நங்கை தன்னை
நற்பரிசாய்ப் பெற்றிடலாம்! நடுக்க மில்லை! 80

அஞ்சாதே! தமிழ்த்தாயின் ஆசை மைந்த!
அழகொளிரும் கற்பனையின் ஆயு தத்தால்
நஞ்சான பகைமையெலாம் நாசம் செய்வாய்!
நறுந்தேனாய்த் தீங்கனியாய் நற்க ருப்பஞ்
செஞ்சாறாய்த் தித்திக்கும் செழும்பாட் டாலே
செய்யுவெழில் மாமயிலைச் சேர்வாய்! நாளை
மஞ்சாடும் திருநாடன் மலைத்துப் போக—
மனங்குளிர உன்கவிதை மழையைப் பெய்வாய்! 81

கொம்பரவள் உன்றனுக்கே கொள்வாய்" என்றார்
கோள்திரியாப் புகழேந்தி! கொவ்வை யொத்த
செம்பவள இதழ்க்கொடியும் செழித்து இன்பச்
செழுங்கூத்து ஆடிநின்றாள்! செறிந்த மக்கள்
கம்பரவர் பெற்றதமிழ்க் காளை ஆவி
காத்தசெயல் போற்றியுளம் களித்துச் சென்றார்!
பம்பரம்போல் சுற்றிசுற்றிப் பரிந்த கூத்தன்
பாவமொரு கட்டுண்ட பாம்பா யானான்! 82

அடுத்தநாள்! நாட்டுமக்கள் அவைக்க ளத்தில்
அசைவதற்கு மிடமின்றி அண்டி நின்றார்
தொடுத்திசைக்கும் பாமாலைத் தோற்றங் காண!
தோன்றலவன் கவிபாடும் தொழிலைக் காண!
விடுத்தயெழில் தேவியுந்தான் விரையார் மேனி
விளக்கமுற அலங்கார வினைகள் தீர்த்துக்
கொடுத்துதிருக் காட்சியினைக் கொற்ற வன்தன்
கொலுமன்றில் அழகொளியைக் கொட்டி வந்தாள்.

கனித்தமிழின் பேரரசர் கம்ப னூர்,தீங்
கவிபாடச் செல்லுகின்ற காளை யின்பால்
தனித்ததொரு நல்லஇடந் தன்னில் வைத்துத்
தன்னுயர்ந்த நல்லறிவுத் தகவைச் சொன்னூர் :
" அநித்தியமாம் இவ்வாழ்வில் அகில மீது
ஆக்கிவைத்த புகழன்றே அழியா தோங்கி
மனித்தரிடை யேநிற்கும் ? மகனே ! வீழ்ந்து
மாநிலத்தில் பிறவனைத்தும் மறையு மன்றே ? 84

அப்புகழை நீயின்று ஆக்கு வாயே !
அரியதொரு நல்வாய்ப்பு அடைந்தாய் ! நாடிச்
செப்புகவி தன்னாலே செகத்தின் மீதே—
செந்தமிழர் வரலாற்றுச் செருக்கின் மீதே—
ஒப்புமொரு மேலிடத்தை உரிமை யாக
உனக்களிக்கும் தமிழ்கூறும் உலகம் ! நீயும்
இப்புவியில் என்றென்றும் இனிது வாழ்வாய் !
இசைமையொடு நீநிலையாய் இருந்து வாழ்வாய் ! 85

பொன்னுடைய மாமணியைப் போற்றி யேற்றுப்
பொருந்தியதால் நன்னிலையே போக வந்த
உன்னுடைய சீர்கேட்டை உன்னுந் தோறும்,
உனக்குற்ற பெருந்துன்பை உணருந் தோறும்,
மன்னுடைய அவ்வேந்தின் மமதை கொண்ட
மனப்போக்கை யளவிட்டு மதிக்குந் தோறும்
என்னுடைய நெஞ்சந்தான் ஏனோ அஞ்சி
ஏங்கிமிக வாட்டமுற்ற(து)? எனது மைந்த ! 86

மதமுற்ற புலனைந்தும் மடக்கி நின்றன்
மதியாலே ஆட்சிசெய்து, மயக்கும் அந்தக்
கதமுற்ற பேரழகுக் கன்னி தன்னைக்
கருத்தாலே காணாது கடிந்து போக்கிச்

சதமுற்று எந்நாளும் சாகாச் செய்யுள்
சாற்றிடுவாய்! மாநிலமே சார்ந்து வாழ்த்தும்
விதமுற்று நல்வாழ்வு விளைவைக் காண
வெற்றியடைவாய்!அடைவாய் வேந்தன் பொன்னே!

எச்சரிக்கை யாய்இருப்பாய்!'' என்றார் கம்பர்!
எள்ளிமகன், "நன்கறிந்த எந்தாய்! இந்த
அச்சமுனக் கேன்தானோ? அறியேன்! கம்பன்
ஆசிபெற்ற சேய்பாலோ அச்சங் கொண்டாய்!
பச்சமுறும் பைங்கிளியைப் பாட்டால் வெல்வேன்!
பதறாதே! உன்விழியால் பார்!''என் றேதான்
துச்சமதாய்ப் பேசிநின்றான்! தொடர்ந்து நோக்கும்
தொல்வினையைக் காணாத தோன்றல்! அந்தோ! 88

காளையவன் வந்தமர்ந்தான் கவிதை பாட!
கற்றதமிழ் ஆயும்அவைக் களத்தில் பூத்த
பாளையெழில் நகைசெய்து பாவை யாளும்
பாவலனுக்கு எதிரிருந்தாள்! பதுமச் செல்வி
தாளையெண்ணி உயர்தனிச்செந் தமிழின் கம்பர்
தலைவணங்கி வீற்றிருந்தார்! தருணம் கண்ட
வேளையிலே கணக்காயர் விளையும் நூறும்
விரைந்தெண்ண மன்னவனும் விடுத்தி ருந்தான்!

கானூற இசையமுதைக் கவிழ்க்கும் இன்பக்
கவிக்குயிலின் தீங்கவிகள் கணிதம் செய்ய
தேனூறுஞ் சோலையிலே தேடி யாய்ந்து
தெரிந்தெடுத்துக் கொண்டுவந்த தெட்பஞ் சான்ற
பூநூறு வைத்திருந்தாள் பூவை! காதல்
புனிதத்தைக் காட்டவந்த புலவன் தன்பால்
"பாநூறும் பாடுக!நீ பாடிக் காட்டிப்
பரிசதனைப் பெறுக!'' என்று பணித்தான் வேந்து!

அறியாமைப் பேரிருளே அழித்து மங்கா
அறிவென்னும் சோதியினை ஆக்கிக் கல்வி
நெறியாவும் நெஞ்சகத்தே நிறுவித் தந்து
நியமத்தை வாழ்வினிலே நிகழ்த்தி வைக்கும்
குறியாகத் தாமரையில் குந்தி ஆட்சி
கொண்டிருக்குங் கலைமகளைக் குறித்துக் காப்பாய்
மறியாத அமிழ்தமொழி மணியும் பாட
மனங்கொண்டு வாய்திறந்தான்! மடைதி றந்தான்:

வெண்பா

" நின்ற கவியால் நினைக்குங்கால் ஓடிவந்து
தன்றளிர்க்கை யால்அணைக்கும் தாயன்றோ?—இன்று
அலைமகவாய்க் கூவி அழைக்கின்றேன்! தாயே!
கலைமகளே! நின்பதமே காப்பு." 92

இப்பாடல் காப்பாக இசைந்த தென்று
இறைபெற்ற அப்பேதை எண்ண வில்லை!
அப்பாடல் தன்னைப்போய் அவளும் ஒன்றென்(று)
அறியாது எண்ணிவிட்டாள்! ஆற்றல் ஊழும்
தப்பாது வெல்லுமன்றோ? தமிழும் கூட
தலைவணங்க ஆயிற்றே! தணியா ஊழை
ஒப்பாதார் சக்தியொன்றை ஒப்பா தாரே!
ஒன்றுண்டு வல்வினையே! ஒப்ப வேண்டும்! 93

மன்னுமவன் கவித்திறத்தால் மாலை யாக
மணிக்கவிகள் புனைந்துரைத்தான்:

கட்டளைக் கலித்துறை

" எண்ண முறவே எரிகதி ரோனும் எழுகடலும்
வண்ண மதியமும் வன்மலைக் கூட்டமும் வையமதும்
இன்ன பிறவும் இயற்றி வளர்த்து இயக்குகின்ற [டோ ?"
அண்ண லொருவன் அமைந்தில னேல்இவை ஆவதுண்

.... மழையைப் போலப்
பின்னுமவன் தீங்கவிகள் பிழைப டாது
பெருக்கிநின்றான்! அவையோர்கள் பேசி னார்கள்:
" இன்னுமிவன் சீர்வளர்க! இசைவ ளர்க!
இறைமகளுக் கேற்றவனும் இவனே! மாதர்
தின்னுமிவன் அழகோடு திறனுஞ் சேர்ந்து
திகழுவது அரியதொரு திருவே!" என்றார்! 95

போதையதைக் கொடுத்தறிவைப் புதைத்து மூடும்
பொல்லாத எழிலோடு பொருந்தி வாழும்
பேதையவள் எண்ணு(ம்)மலர் நூறும், பேழை
பெயர்ந்துபுறம் நீங்கியதைப் பெருகும் செந்தேன்
கோதைவிழி யாலுண்டாள்! குளிர்ந்தாள்! நெஞ்சங்
கொள்ளாத பூரிப்பால்—கொடிய ஊழால்—
" காதையது முடிந்ததுவே!—கவிதை நூறு!
காதலிலே வெற்றியினைக் கண்டேன்" என்றாள். 96

'நூறுகவி முடிந்தது'என நங்கை நல்லாள்
நுவலுவதைச் செவியாலே நுகர்ந்த அந்த
ஏறுகளித் தான்புலன்கள் எழுந்து மீண்டு
எக்காளம் போட்டனவே! எழிலே என்னும்
ஆறுகரை புரண்டோடக் கண்டான்! அற்ப
ஐம்புலனும் ஆட்சியினை அறுத்துக் கொண்டு
வேறுகருத் தேஎண்ணி வெகுள, செம்மல்
வெற்றியுறும் பேரழகை விளம்பி னானே: 97

கட்டளைக் கலித்துறை

"மாற்றி லுயர்பசும் பொன்மேனி யேறி மறக்களத்து
வேற்றனை யொத்த விழிச்சுடர் காட்டி வெகுண்டெழுந்து
ஆற்ற லடக்கி மடக்கி யொடுக்கியென் ஆருயிரைப்
போற்றிப் பறிக்க அழகென்னும் கூற்றம் புறப்பட்டதே!"

இறையவனின் பொற்பாவை இறுமாப் போடு
இடர்வருவ தறியாது இனிது பூத்தாள்!
நிறையமணம் வீசுகின்ற நீரார் மாலை
நெடியதமிழ்க் கவிக்கிடவே நினைந்தி ருந்தாள்!
மறையமயற் காதலதே மாய அல்லல்
மண்டியதை யறியாது மங்கை போனாள்!
சிறையறியா வெள்ளம்போல் சீறிப் பாய்ந்து
சிதைக்கவரும் தீவினையும் சிரித்த தாங்கே! 99

வெண்பா

கூற்ற மெழுந்து குறிவைத்து நின்றுவிட்டால்
ஆற்ற லதுவாலே ஆவதுண்டோ ?—நோற்ற
இளங்கவியை வஞ்சனையால் ஈர்த்ததே யாட்சி
விளங்கவந்த பொல்லா வினை. 100

7. பெருந்துயர்க் காதை

" நூறு கவிகள் நுவன்றானா? பேரின்பம்
கூறு பொருளாய்க் குறித்திசைத் தானா?
கணித்து மொழிக! கணக்கரே!" என்று
மணித்திகழும் சோதி மகுடத்தோன் கேட்க,
" கடைசியிலே சொன்ன கவியொடுநூ(று)" என்று
கொடைசிறந்த மாமாட்சிக் கொற்றவன் பால்சொன்னான்
மன்னன் உளத்தில் மறைந்தசினம் சீறிடவும்,
கன்னல் சுவைமொழியாள் காதற் கனிவிதயம்
ஏமாந்து ஏங்கிடவும், ஏற்றின் இனியதமிழ்ப்
பாமாந்தி ஆவி பரவசத்தில் போய்மறந்து
மூழ்கிக் கிடந்திருந்த முத்தமிழ் அன்பரெலாம்
பாழ்கிணற்றில் வீழ்ந்து பதைப்போரைப் போலுள்ளம்
நெக்கு மிகநெகிழ்ந்து நின்றிடவும், கம்பர்உளம்
திக்குமுக்க லாடித் திகைத்து உருகிடவும்,
பூந்தமிழ் வெண்பாப் புகழேந்தி நெஞ்சமிடி
ஏந்தலுற்று வாடியே ஏங்கி மயங்கிடவும்,
கூத்த னுளக்குகையில் கொண்டு வளர்த்துவந்த
மூத்த அழுக்காறு மொய்க்க இலக்கறிந்து
பாடிக் களித்துப் பரிந்தோடி யேகூத்து
ஆடித் திரிந்திடவும், அந்தக் கணக்காயன்
சேதி விடுத்தான்! செறிந்த அவையிடையே
ஆதி மகிழ்வு அழிந்தகன்று போயிற்றே!
மாறாம் நிலைகண்ட மன்னன் வெகுண்டெழுந்தான்
" நூறா மதிலே நுவன்றகவி தன்னகத்தே
பேரின்ப மில்லை! பெருங்காமப் பித்துடையான்
பாரின்ப மொன்றினையே பாடிஉவந் திட்டான்!

அவையோரே! என்றன் அமைச்சர்களே! நன்கு
இவையோர வல்ல இனியதமிழ்ப் பாவலர்காள்!

நெஞ்சங் குலைந்து நெடுந்துயரம் யானடைய
வஞ்சம் புரிந்தவனும் வாழ்வானோ? என்திருவைக்

கொள்ளை யதுபுரிந்து கொள்ள நினைந்திடுவோன்
சள்ளை யடையாமல் சார்ந்துலகில் வாழ்வானோ?

போற்று மறிவுப் புகழேந்தி யார்மொழிந்தார்!
ஏற்று இசைந்தேன் எதுவரினும் 'ஈசன்

அருள்போல ஆகட்டு'மென்று துணிந்தேன்!
இருள்போல வந்த இடரெல்லாம் இன்று

தொலைந்து மறைந்ததுகாண்! தோன்றலவன் காமம்
அலைந்து திரியவென்றன் ஆரணங்கோ? ஐயகோ!

ஈசன் எனது இருங்குலத்தைக் காத்துவிட்டான்!
ஆசை மயிலுற்ற ஆரா நெடுநோயும்

தீரட்டும்! இங்குற்ற தீயசக்திக் கேதீமை
நேரட்டும்! மாய்ந்து நெகிழட்டும்! அற்பநெறி

கொண்ட சிறுபுழுவைக்—கோதறியாத் தீந்தமிழே
விண்ட மனத்தில் விளக்கமுறு நச்சரவை—

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையினைப்—பாடிப் பெரும்புகழைச் சேர்த்துக்

குவித்த பெரியோன் குலத்தினுக்கும், வாழும்
புவித்தலைவன் வந்த புனித குலத்தினுக்கும்

நீங்காப் பழியை நிகழ்த்திவிட்ட பூரியனைத்—
தாங்கா இடும்பையினைத் தந்த மடமகனை—

அஞ்சுவது கண்டும்அதற்(கு) அஞ்சா அறிவிலியை—
நெஞ்சுக்குள் பண்பு நிறையில்லா வாழ்பிணத்தை—

நன்றியறி வில்லாத நாயினைச்—சின்னதொரு
குன்றி யளவும் குணமில்லாக் கட்டையினை—

வாளால் துணிப்பேன் ! வழிவழியே வந்தமுறைக்(கு)
ஆளான என்றனுக்கு அஃதே முடிவாகும் !
யாதே இடைநுழைந்து யாருரைத்து நின்றாலும்,
வாதே புரிந்திசைய வைக்கவந்து பேசிடினும்,
மன்னிப்பு இல்லை ! மனத்தகத்தே தீர்க்கமுற
உன்னிப்பு கல்கின்றேன் ! உற்றஎழில் தீந்தமிழால்
நாமுகந்த பாவிசைத்து நம்மையெலாம் ஏய்த்துவந்த
காமுகனை இந்தக் களங்கமிலாச் செந்தமிழர்
நாட்டிலே விட்டுவைத்தால் நானிலத்தில் வாழவைத்தால்
கூட்டிலே ஆவி குடிகொள்ள உய்யவைத்தால்
தீமை ! பெருந்தீமை ! தீராத் துயர்வருமே !
ஆமைபோல் நம்முன் அடக்கநிலை காட்டி
நடத்தையிலே தீயநெறி நச்சரவா யானான் !
கடத்திச்சென் றேகுங்கள் ! காவலர்காள் ! ஓய்ந்திருக்கும்
வாட்கு விருந்தாய் வழங்குங்கள் ! போர்க்களிற்றின்
தாட்கிடையே இன்னவனைத் தந்து நசுக்குங்கள் !
தீங்கு புரிந்தென் திருவைக் கவர்ந்தவனை
ஏங்குங் கடலுள் எறியுங்கள் ! பண்புலவாக்
கொச்சைவாழ் வேற்ற கொடியவனைக் கொண்டேகி
உச்சிமலை நின்று உருட்டியுயிர் வாங்குங்கள் !
தீராப் பசியுடைய தீய விலங்குகட்குச்
சேரா விருந்தாய்ச் செலுத்துங்கள் ! என்னாவி
கண்டு தவழும் கரைகாணாப் பேருவகைக்
கொண்டு மகிழ குறையெல்லாம் தான்விலகச்
செய்க இவற்றுள் செயலொன்று!" என்றரசன்
மெய்கனலே கொண்டெரிய மேவும் சினங்குமுற
ஆங்கு கொதித்தெழுந்து ஆர்த்தான் ! இளங்குமரி,
"தீங்கு மொழிகின்றீர் ! தீங்கவிகள் நூறும்

மொழிந்த பிறகேளன் மோகனத்தைப் பாடி
வழிந்தோடும் தன்னுணர்வு வாரிதியைக் காட்டினான்!
செப்புங் கவியால் செயமுற்றான்! தீங்கவியில்
தப்பொன்று மில்லைகாண்! தண்ணார் கவின்மலரால்
யானே கவிமுற்றும் எண்ணினேன்! வண்மைமிகுங்
கோனே! நறுந்தார் கொடுத்தருள்க!" என்றிறைஞ்சி
மங்கை பணிந்தாள்! மணியால் கவிமுழுதும்
தங்கையால் எண்ணியே தாழ்தொகையைச் சொன்ன
கணக்காயன் வாய்திறந்தான்: "காப்புரைத்த செய்யுள்
வணக்காகும்! எண்ணில் வருமோ? மடமகளே!
கம்பன் மகனும் கலைமகளைத் தான்விளித்துத்
தம்பணியில் வெற்றி தருமாறு வேண்டுகின்ற
அக்காப்புச் செய்யுள்—அமுத மொழியாளே!—
தொக்காது நூற்றுத் தொகையோடு! யான்மரபை
ஒட்டிக் கணித்தேன்! ஒழுக்க முறையுரைத்தேன்!
அட்டியில்லை! வேந்தன் அறந்தவழும் நெஞ்சம்போல்
செய்தருள்க!" என்றவனும் செப்பி உரைமுடித்தான்!
பொய்தவழும் தீய புலன்கொண்ட கூத்தனும்
சீறி எழுந்து சிலம்பினான்: "இச்சோழன்
மாறிப் புரளும் மதியற்ற வேந்தனன்று!
நீதிக்கே வாய்ந்த நிலைக்களனாய் நின்றறத்தைச்
சாதிக்க வேவென்று சாற்றுகின்ற கோல்பிடித்து
ஆளும் குலோத்துங்கன் ஆட்சி மகிமைக்கு,
வாளும், அவன்தொடர்ந்து வந்த பெருங்குலமும்,
நீங்காத வீர நிதிக்குவையும், மாசுவரின்
தாங்காத மானத் தகைமையதும் அல்லவோ
காரண மாகும்? களத்தகத்தே பன்னூறு
வாரணந் தேய்க்கும் வலியதோள் மன்னவனே!

யாப்பும், தமிழின் அருமரபுங் கண்டவனே!
காப்புக் கவிதை கணக்கில் வருவதுண்டோ?
பேதையரே யன்றி பிறர்அங்ஙன் கூறுவரோ?
மேதை யறிவாய்நீ மென்றமிழின் நூல்வழியே
எங்கேனும் காப்பை எழுந்தநூல் தன்னோடு
புங்கவனே! எண்ணிப் புரிகணிதம் செய்ததனைக்
கண்டிருக்கின் றாயோ?ஏன்? கம்பர்(!)—கவியரசர்(!)—
கொண்டிருக்கும் நீண்டு கொழுத்த அனுபவமே
சற்றுத் திரும்பிச் சமன்செய்து பார்க்கட்டும்!
பெற்று வளர்த்தெடுத்த பிள்ளைஎன் றேஅறத்தின்
கண்ணைத் துளைத்துக் கவிச்சக்ர வர்த்தியுமே,
'எண்ணித் தொகைசெய்க!' என்றும் உரைப்பாரோ?
மன்னவனே! கற்ற மதியவனே! தோல்வியுற்ற
இன்னவனைச் செய்க இதயம்போல்! வந்து
இடையே தடுக்க எவரோ வருவார்?
தடையில்லை! வெற்றிமிளிர் தார்மன்னா!" என்றான்.
மலர்ந்தவிழி மானின் மயற்கனவு முற்றும்
உலர்ந்துவிழ கூத்தன் உரைவிடுத்தான்! மாங்குயிலும்
'கூ'வென் றலறிக் குறைமொழிந்தாள்: "பேரரசே!
சாவென் றெனக்கொன்று சாற்ற நினைந்தனையோ?
பெற்ற மகளின் பெருவாழ்வை எண்ணாது
கற்றறிந்த எந்தாய்! கடியநெறி சேர்ந்தனையோ?
செந்தமிழர் நாட்டிடத்தே செல்வியா யுன்றனுக்கு
வந்துதித்தேன்! காதல் வளர்த்தேன் மனத்தகத்தே!
வாழ எனக்கு வகைசெய்ய உன்றனுக்கு
சோழர் குலவிளக்கே! சொல்லுகின்ற ஆசை
இருக்கவில்லை யென்னில்நீ ஈன்றெடுத்த பாசம்
பெருக்கவில்லை என்னிலுனைப் பேதையென்று வையகம்

பேசிப் பழிதூற்றும்! பேய்மனத்தார் தீநெறியின்
ஆசியிலே நீயும் அரசாளப் போகுதியோ?
தீயார் மொழிகேட்டுத் தீமை புரிகுதியோ?
தாயார்போல் என்பால் தனியன்பு செய்ததெலாம்
பொய்யோ? துயரம் பொறுப்பேனோ? தெய்வதமே!
ஐயோ! எனதன்பு அன்னை இருந்திருந்தால்
யான்கண்ட துன்பம் அதுபார்த் தமைவாளோ?
கான்கண்ட நீர்போல் கதறியழ மாட்டாளோ?
ஈவிரக்க மில்லார் இதயத்தைத் தான்உருக்கி
ஆவி கொடுத்தேனும் அன்னையென் காதலுக்கு
வாழ்வளிக்க முந்தோடி வாராளோ? இன்றெனக்குத்
தாழ்வளிக்க வேஉள்ளார் தந்தை! என் காதலுக்கு
ஆக்கமில்லை என்றால் அழிவேன்யான்! வாழுகின்ற
ஊக்கமில்லை காதல் உடைவுற்றுப் பின்புவியில்
நல்ல தமிழ்மங்கை நண்ணித் திரிவாளோ?
வல்லவென்றன் காதல் வனப்போடு மேதினியில்
மங்கையான் வாழ மணக்கோலம்! இல்லையெனில்
உங்கையால் அந்த உடைவாளால் என்னுயிரை—
ஆக்கியே நீயளித்த ஆவியினை—அன்பதனைப்
போக்கியே வீழ்த்திப் புரிவாய் பிணக்கோலம்!
எந்தையே! நீங்காது என்பால் அருள்சுரந்த
சிந்தையோ இன்றிங்குச் சீர்கெட்டுத் தீமை
புரிய நினைந்து புனிதங்கூர் என்றன்
உரியநற் காதல் உயர்வாழ்வைத் தீர்த்தொழிக்க
சீறியது? என்காதல் செம்மலினைக் கொன்றொழிக்கக்
கூறியது? நேர்மைகெட்ட கோரத்தைக் காட்டியது?
வாழி! தமிழ்நாடே! வந்து பொழிகின்ற
யாழில்லை யென்றால் இசைவந்து வாழ்ந்திடுமோ?

பூத்தமல ரில்லையென்றால் பொங்குமணம் வீசிடுமோ ?
வாய்த்தமழை இன்றேல் வளர்பயிரும் ஓங்கிடுமோ ?
ஆதரவு பூண்டு அகம்பற்றிக் கொண்டுவிட்ட
காதலனைப் போகவிட்டுக் காரிகையும் உய்வாளோ ?
காதலொடு வாழவழி காட்டுங்கள் ! இல்லையெனில்
சாதலொடு யானும்போய்ச் சார அனுப்புங்கள் !
காதல் ! உயிர்க்காதல் ! காதலுக்கு வாழ்விலதேல்
சாதல் அவனோடு ! சாற்றிடுக யாதென்று ?
மாற்றார் உரையில் மனம்பறி போகாதே !
கூற்றா ? நலவாழ்வா ? கூறு ! மன்னா ! காதல்
சுகங்கண்டு இன்பம் சுகித்துவிட்டேன் இந்த
இகங்கண்டு செல்லும் இறப்பு, இறைவன்
உனக்கும் எனக்கும் உலகத்து மாந்தர்
தனக்கும் பிறஉயிர்க்கும் தந்த பொதுவன்றோ ?
அஞ்சவில்லை ! காதலமு(து) ஆரக் குடித்துரத்தை
நெஞ்சகத்தில் பெற்றுவிட்டேன் ! நேசித் திறப்பேன் !
எதுவென் றுரைத்திடுவாய் ! என்காதல் வாழ்வா ?
மதுவென் றுணராத மாற்றார் மொழிகேட்டுச்
சீரான காதல் சிறப்பைப் புறக்கணித்து
ஈரான ஆவியுண்ணும் இச்சையா ? கூறிடுவாய் !
யாது ? விரைந்துரைப்பாய் !" என்று உணர்வலைய
மாது வினவிநின்றாள் ! மன்னன் இதயம்
உருகிடுமோ என்றஞ்சி ஊடே நுழைந்து
அருகிக்கூத் தன்வலையை அன்னவன்மேல் வீசினான் :
"சோழ மடமகளும் சோக மொழிபலவும்
தாழ வருமாறு தந்துரைத்தாள் வேழங்கள்
கோடி அமர்க்களத்தில் கொல்லுகின்ற மாமன்னன்
பேடியல்ல ! அஞ்சாப் பெருவீரன் ! தன்குலத்துக்

குன்றாத சீரைக் குடிநிலையை மாசுபடச்
சென்றேதம் வந்தடைய செம்பியனும் காண்பானோ ?
பைந்தமிழே ஆவியெனப் பாராட்டும் பாண்டியனின்
மைந்தனையே சென்று மணக்கோலங் கொள்ள
அமரா வதியுள்ளாள் ஆலவாய் மன்னன்
குமரோனோ(டு) இல்லறத்தைக் கூடி நடாத்துகின்ற
வாய்ப்பிருக்க ஏனிந்த வம்பு ! மனக்குகையில்
ஏய்ப்பிருக்கும் துட்டன் எழில்காட்டி மாயமாய்
மங்கை யுளத்தை மயக்கிவிட்டான் ! இன்னவனும்
தங்கைத் தமிழால் தளிர்போன்ற நெஞ்சகத்தில்
காதலெனும் பொல்லாக் கனலைப் பொறித்துவிட்டான்
வேதனைக்கு வித்தாய் விளங்குகின்றான் வஞ்ச
மனமுடையான் போதைதந்த மாயத்தான் ! கெட்ட
இனமுடையான் கொண்டு இறப்புக்கு நற்பரிசாய்
ஈயத்தான் வேண்டும் ! இவன்போன்ற தீயவர்கள்
மாயத்தான் வேண்டும் ! மணிமகுட மாமன்னன்
பெண்ணுரைத்தாள் காதல் பெயரால் அவனிறந்தால்
மண்ணுலகை விட்டு மறைந்துவிடு வேனென்று !
காதல் ! அதுஎன்ன ? காதலென்றால் யாதுபொருள் ?
காதல் இளமைக் கனிசேர் பருவத்தில்
உள்ள மதிலே உறுமோர் மயக்கன்றோ ?
வெள்ளம்போல் நெஞ்சில் விளையும் உணர்ச்சியெலாம்
ஆட்சி நிலைபெற்று ஆன்மாவை மூடுகின்ற
காட்சி நிலையன்றோ காதல் ? சினந்துஎழும்
காட்டாறு பொங்குநீர் காட்டிக் கரைபுரளும் !
மீட்டாத கீதமெலாம் மீட்டித் தவழும் !
அடுத்த வினாடியிலே அவ்வேகம் முற்றும்
விடுத்தே அடங்கிவிடும் ! வித்தகனே பேசுகின்ற

காதலும் அவ்வாறே கட்டுக் கடங்காது !
ஏத மறியாமல் ஏதேதோ செய்துலவும்!
பின்னர் உளங்கள் பிளவுற் றடங்கிவிடும் !
மன்னர் குலத்து மணியே ! வனிதையர்தம்
நெஞ்சத்தின் போக்கு நிலையில்லாத் தன்மையது
வஞ்சியரை மாற்றி வளைத்தல் எளிதேயாம் !
தங்கத்தை யொக்கும் தமிழை உயிர்போலச்
சங்கத்தில் வைத்துச் சலியாமல் காத்துவந்த
திங்கள் குலத்தோன் திருவால வாய்மருவும்
கொங்கலர் தார்தவழும் கோவேந்தன் மைந்தன்—
அறிவும் அழகும் அடடா ! அவன்பால்
செறிவுற்று ஓங்கிச் செழிக்கயான் கண்டேன்—
நாளை வரட்டும்பார் ! நங்கை அவன்வலிய
தோளை எழிலின் தொகையை விழியாலே
கண்டுவிட் டால்போதும் காதல் நெருப்பையுளம்
கொண்டுவிடும் ! இந்தக் கொடியவனைக் கைவிடுவாள் !
இன்னவன் வாழ்ந்தால் இடருண்டு நின்றனுக்கே !
மன்னவனே ! பொல்லா மதுபோன்ற காளையினைப்
பெண்ணெதிரே விட்டால் பெரிதும் மயங்குகின்ற
கண்ணெதிரே விட்டால் களங்கம் தொடருமன்றி
நீங்கித் தொலையாது ! நீதி யருள்க !"வென்றான்
ஏங்கித் துடித்து எழிலரசி, "ஐயா !
கவியே ! உமது கருத்துரையை மக்கள்
செவியேற்றுக் கேட்கும் செயல்கண்டு நாணுகிறேன் !
பண்டைத் தமிழருடைப் பண்பாட்டை—வாழ்முறையை—
விண்டு அயலார் வியக்கின்ற காதலினை—
ஆகு மினிய அகப்பொருளைத்—தேன்அமுதம்
பாகுஎன்று போற்றுதமிழ்ப் பாவலரோ இங்கு

அறிந்தறிந்து கூறி அவமதித்தார்! யானும்
செறிந்தறிவுக் கம்பருடைச் செம்மலினைக் காதல்
புரிந்தேன்! அந்தப் புலவன்பால் அன்பு
சொரிந்தேன்! இளமைச் சுகங்கண்டேன்! இந்தப்
புலவ ரெனக்குப் புதுவாழ்வு கொண்டு
உலவ வழிகள் உரைக்கின்றார்! சொல்லுங்கள்!
கற்பு நெறியாமோ? காதல் முறையாமோ?
இற்புகுந்து வாழுகின்ற இல்லற மும்ஆமோ?
தீந்தமிழர் கண்ட திருநிறைந்த வாழ்வாமோ?
மாந்தரினம் கண்ட மதியும் மதித்திடுமோ?"
என்று பலபலவும் ஏந்திழையும் கூறிநின்றாள்!
" நன்று இளமையிலே! நற்கூத்து ஆடிவிட்டாய்!
கன்னித் தமிழ்கண்ட காதல் நெறியென்ன?
தன்னில் நிலைமையிலே தாழ்ந்த ஒருவனைப்போய்
காதல் புரிகின்ற கண்கெட்ட தன்மையுண்டோ?
ஈதல் அரசன் இசைக்குயிலே! நீகேளாய்!
ஒத்த குலமதுவும் ஒத்த நிலையதுவும்
சித்தத்துக் காதல் சிறக்க அமைந்திடவே
வேண்டும்! பருவ விழைச்சல்ல காதலதே!
தூண்டும் உணர்ச்சித் துணைகொண்டு நீமயக்கம்
உற்றாய்! அரச உயர்குலத்து நல்அன்னம்
மற்றோசை செய்து மலிந்து திரிகின்ற
காகத்தைச் சென்றோடிக் காதல் புரிவதுண்டோ?
வேகத்தைக் காட்டி விளங்க உரைக்கின்றேன்
இவ்வம்பி காபதி ஈன குலமுடையோன்!
அவ்வம்பி காவினுடை ஆலயத்தி லேபூசை
செய்துவந்த தாழ்குலத்தோன்! செம்பியன் நெஞ்சுவந்து
பெய்துவந்த அன்பால் பிழைத்துவரும் ஒச்சனிவன்!

பாவாய்!" எனவே பலகூற வாய்பிளந்தான் !
" காவாய் உனது கடுநாவை!" எனக்கம்பர்
சீறி எழுந்தார் : " சிலம்பாதே ! வாய்ப்பறையை
மாறி ஒலிக்காதே ! மாண்புத் தமிழ்பயின்ற
கூத்தா ! தமிழர் குலத்தில் பிறப்பெடுத்த
மூத்தார்க்கெல் லாம்பழியை மூட்டாதே! நெஞ்சில்
அழுக்கா றுடையார்க்கு ஆக்கமு முண்டோ ?
பழுக்காது உன்னுடைய பாழான எண்ணங்கள் !
பண்ணோடு வாழுமென்றன் பாலகனை நீயொழித்து
மண்ணோடு போக்க மனங்கொண் டெழுந்துவிட்டாய் !
நீமட்டு மென்ன ? நிலையாக வாழ்வாயோ ?
பூமட்டந் தன்னில் புதுமலராய் நிற்பாயோ ?
வேந்த னுளத்தில் விடமேன் இடுகின்றாய் ?
பூந்தமிழ் அன்னைப் புதல்வனே ! நீயுன்
சிறுவனுக் கேனோ சிறுமை நினைந்தாய் !
பெறுவதென்ன? சொல்லாய்! பெருமையித னாலுண்டோ?
மன்னவனே ! உன்றன் மதியாலே சீர்தூக்கி
என்ன புரிவதென்று எண்ணிப்பார் ! எண்ணாது
என்மகனை மாய்த்தால் எனது குலவிளக்கைப்—
பொன்மகனை—மாய்த்தால் புரவலனே ! உன்குலமும்
வீழும் ! அறிவித்தேன் ! வீடு திரும்புகின்றேன் !
தாழும் நெறிசொல் தமிழ்க்கவியின் முன்னிலையில்
நிற்கவே கூசுகின்றேன் ! நீரார் கருணையினைக்
கற்கவே மாட்டாயோ? காவலனே செல்லுகின்றேன்
பூத்த அறிவுப் புகழேந்தி இங்குள்ளார் !
பார்த்திபனே ! உன்னுடைய பாழடைந்து போன
அறிவைத் திருத்தி அமைத்து உணர்த்தட்டும் !
நெறியை உனக்கு நிகழ்த்தி விளக்கட்டும் !

மன்னா! எனது மகனுக்கு உயிர்ப்பிச்சை
உன்னாடு வாழ—உயர்ந்து தமிழுலகம்
ஓங்கியே வாழ—உவந்தளிப்பாய்! இல்லையெனில்
நீங்கியே உன்னுடைய நீள்புகழும் வீழும்!
நினை"யென்று மன்னனுக்கு நீண்ட அறிக்கை
தனையளித்துக் கம்பர் தனதுமகன் நல்வாழ்வு
போகாது என்றிதயப் போதில் நினைவமைத்து
பாகான செந்தமிழால் பாடும் புகழேந்தி
காத்திடுவா ரென்று கருதி அவைக்களத்தை
நீத்துத் தனது நெடுமனைக்குச் சென்றார்!
சுவையோசை நற்கவிஞன் சொல்லிய வாக்கை
அவையோர்கள் கேட்டு அகங்குலைந்தார்! மன்னவனும்
உள்ளம் குழம்பினான்! உந்தும் அறிவழிந்தான்!
கள்ளருளும் பூங்கோதைக் காரிகையும் "எந்தாய்!
தயங்காதே! நல்வாழ்வைத் தா!"என் றழுது
நயங்காணும் நல்லுரையை நாடியே கேட்டாள்!
அறிவி னுறுதி அழியவிட்ட மன்னன்
செறிகுழலி தன்னைச் சினந்து "மடமகளே!
வாயைத் திறவாதே! வாள்பிடித்த சேவகர்காள்!
சேயையே நீக்கிச் செலுத்திக் கொடுபோங்கள்!
அந்தப் புரம்விட்(டு) அசையாமல் காவலிலே
இந்தப்பேய் தன்னை இறுத்துங்கள்!" என்றுரைத்தான்!
வந்தார் மறவர்! வனிதை நகரவில்லை!
நொந்தாகம் பற்றி நொடிந்தார்! அழகரசி
வாய்விட் டலறினாள்: "வாழ வகைஇலதேல்
போய்விட்டா ளுன்றன் புதல்வி! அறிந்திடுவாய்!
ஈசா! படைத்த இரக்கமிலாத் தெய்வதமே!
கூசாம லுன்னைக் குறைமொழிவேன்! ஏன் என்னை

மன்னன் இனத்து மகளாய்ப் பிறப்பித்தாய் ?
என்னுளம்போல் காதல் இனிமை யினைக்காண
மக்கள் இனத்தில் மலியப் படைத்திலையே"
" இக்கணமே கொண்டு இழுத்திவளை ஏகுங்கள் !'
என்று அரசன் இடைமொழிந்தான் சேவகர்கள்
நின்று புலம்பிய நீர்விழியாள் தன்னைப்போய்
ஈர்த்தார் அமுத இசைக்குயிலும், "காதலினைத்
தீர்த்தால் எனதாவி தீர்ந்தொழியும் ! ஐயகோ !
தந்தையே" என்று தவிதவித்தார் காண்மாந்தர்
சிந்தையே கெட்டார் ! சிலவினா டிக்குள்ளே
பாவை அகற்றவே பட்டாள்அந் தப்புரத்தில்
காவலிலே வைத்தார் ! கனிந்த புகழேந்தி
காட்சியெலாம் கண்டு கலங்கிக் கதறலுற்றார் :
"மாட்சியெலாம் பெற்றுயர்ந்த மன்னா இதுஎன்ன ?
ஏட்டுக்கு வந்த இழிநிலையோ ? அன்றியுன்றன்
நாட்டுக்கு வந்த நலிவோ ? புரியவில்லை !
கம்ப னுளத்தைக்—கலையறிந்த மாவேந்தே !
வெம்பவே நீயும் விடலாமா ? சிந்தித்துப்
பாராய் ! பகுத்தறிந்து பாராய் ! நறவொழுகும்
தாராய் !" எனமேலும் தண்டமிழ்த் தீங்கவியில்
வல்ல புகழேந்தி வாய்தொடர்ந்து பேசலுற்றார்
தொல்லை தரும்கூத்தன் தோன்றி நமன்போல்
இடைபுகுந்து வீசினான் "இன்தமிழ்ச் செல்வ!
விடைபுகுந்து கூறி விரியுன்றன் சொற்கடலை !
நீதி வழங்கும் நெடுந்தகையே ! மாமாட
வீதி வழியே விரைந்தோட்டித் தேர்க்காலில்
ஆவின் இளங்கன்றின் ஆவியினைப் போக்கித்தாய்
மாவின் இதயத்தில் மாளாத் துயர்செய்த

தன்னன்பு மைந்தனைத் தண்டிக்க ஓர்சோழ
மன்னன் புலன்தான் மயங்கி விடுத்தானா ?
தாய்மா விறல்வேந்தன் தன்கோட்டை வாயிலுக்குப்
போய்மா மணியசைத்துப் பொங்கியதன் வேதனையைக்
காட்ட அறமன்னன் கண்ணோட்டம் செய்தானா ?
மீட்டவே கொட்டும் மெலியவிசை போல்மழலைப்
பேசும் இளவலென்று பேதித்து நின்றானா ?
மாசு படராது மண்ணாண்டு நீதியினை
நாட்டவன்றோ எண்ணியவன் நற்புகழை ஆக்கினான் ?
ஊட்டங் குறையா உயர்சோழ மன்னனன்றோ ?
கற்றாவின் ஆவி களவுசெய்த பிள்ளையினைப்
பெற்றான் எனினுமவன் பேதமிலா நீதிமுறை
செய்யத் துணிந்தேதன் செம்மலினைத் தேர்க்காலில்
வெய்ய மனங்கொண்டு வேண்டி உயிர்பிரித்தான் !
அன்னவன் தோன்றி அறம்வளர்த்த நற்குலத்தில்
மன்னவனாய் வந்து மலர்ந்த மணிவிளக்கே !
தூக்கிச் சமன்செய் துலாக்கோல்போல் பாசத்தைப்
போக்கி நிலையில் புலனை நிறுத்திடுவாய் !
பெற்ற மகனென்றும் பேணாது நீதியொடு
கொற்றத்தைக் காத்த குலத்தினுக்கு, நீ புகுந்து
பெட்டைச் சிறுக்கி பெரிதென்று பேசிநின்ற
கெட்ட இளமைக் கிறுகிறுப்பை ஏதோஎன் (று)
எண்ணி மயங்கிப்போய், ஈனமுறச் செய்குதியோ ?
திண்ணியர்கள் ஆண்ட திருநாட்டில் வாஞ்சையினால்
நீதி நெறிக்கு—நிலவுலகின் கண்மணிக்குத்—
தீதினைச் செய்ய திருவுளமும் கொண்டாயோ ?
சற்று நடந்த சரிதையினை நோக்கிப்பார் !
கற்றுத் துறைபோன கம்பனையும் பிள்ளையையும்

வான்மட்டம் வைத்தேநீ வாழ்த்தி வணங்கிநின்றாய்!
தேன்மட் டவிழும் திருமலரை ஒக்குமெழில்
மங்கைப் பளிங்கு மனமதனை மாற்றியிந்தச்
சங்கையிலாத் தீய சழக்கன் களவுநெறி
கொண்டான்! அறிந்தே கொடுமையினைச் சாடினாய்!
கண்டார் மகிழ கவிசெய் புகழேந்தி,
'தீங்கவிகள் தெய்வத் திருவதன் மேல்நூறு
பாங்குறவே பாடினால் பாவையினை ஈந்திடுவாய்!
பாடத் தவறிவிட்டால் பார்த்திபனே! உள்ளம்போல்
போடவே தண்டம்'எனப் போதித்தார்! நீஇசைந்து
ஒப்பி அனுமதித்தாய்! ஒன்றென் றொளிர்கின்ற
அப்பர மன்தானும் அங்கீ கரிக்கவில்லை
நூறு கவியந்த நுண்பொருள்மேல் பாடவில்லை
வேறு மயல்காமம் வேட்டதனால் தோற்றான்
உரைத்த மொழிபோல் உளக்கலக்க மின்றி
வரைத்திடுக தண்டம்! வழியிலே வந்துதித்த
பெண்பெற்ற காதல் பிழைபடுமோ என்றஞ்சிப்
பண்பெற்ற நீதி பழிபெறவும் விட்டுவிட்டால்
மக்கள் குலோத்துங்க மன்னவனின் செங்கோலைப்
பக்க பலமென்று பற்றிப் படர்வாரோ?
நீதியா? அன்றி நிலைகேடா? நற்குலத்தோய்!
ஓதிடுக யாது?"என்(று) உரத்த குரல்கொடுத்தான்
"நீதிக்கே வாழ்வளிக்க நிச்சயித்தேன் முன்னோரின்
ஆதி வழியின் அறத்தையே நாட்டிடுவேன்!
கொண்டிருக்கும் கூர்வாள் கொலைஞர் வருக!"என்றான்
கண்டிருக்கும் வெண்பாக் கவிஞர், "அரசே!
வருவ துணர்ந்து வழங்குக தண்டம்
மருவு முனது மனதில் கருணைமலர்

பூத்திடுவாய்" என்றார்! புவியோன், "கவிமணியே!
மூத்திடுவாய் ஏனோ முரண்பட்டுப் பேசுகின்றாய்!

பாவலனின் நாவே பலவாறு பேசிநிற்கும்!
காவலனின் நாவோ – கடமை யுணர்வுளதால்

நீதி முறையின் நிலைநின்று மாறாது
ஓதிச் செயல்புரியும்! ஒட்டரே! நீரே

வழிபடுத்திக் காத்தீர்! வணக்கம்! எனையே
இழிபடுத்தி வைத்த இளையோனைக் கொல்க!

கொலைஞர்களே இக்கணமே கொண்டுசெல்க!" என்றான்
கலைஞர்களும் மக்கட் கணமும் உருகிநின்றார்!

காளை உடைந்து கதறினான் "மன்னவனே!
பாளை நகைமின்னும் பாவையொடு காதல்

உறவுற்ற போதே உளத்தினிலே சாவு
திறவுற் றெனக்குத் தெரிந்தது காண்! என்றனுக்குக்

காதலிலே வந்துற்றான் காலன்! உயிர்விடுத்துச்
சாதலிலே மூழ்கிப்போய்ச் சார எனக்குஅச்சம்

இல்லை! பிறந்தார் இறவாமல் வாழ்வாரோ?
எல்லை உயிர்உய்வுக் குண்டன்றோ?" என்று

நயத்தோ டுரைத்தான் நகைக்குங்கூர் வாட்கைப்
புயத்தோடு நின்ற புலைத்தொழி லாளர்கள்,

ஈர்க்கும் நிறைந்த இளமைப் பொலிவோடும்
வார்க்கும் அழகு வளத்தோடும் நின்றிருந்த

கம்பன்சேய் தன்னைக் கடிந்து பெயர்த்தகன்றார்!
அம்பொன் மணிமன்றில் ஆர்ந்திருந்த மக்கள்

அழுதுத் துடித்தார்கள்! ஆகாரம் எண்ணிக்
கழுது திரியும் களம்நோக்கிச் சென்றார்கள்!

வையமதில் பெற்றெழுந்த வாழ்வின் நிலையாமை
மெய்யதனை உய்த்துணர்ந்த மேலோரைப் போலந்தக்

காளை மடிய கலக்கமின்றி நின்றிருந்தான்
வேளை நெருங்கிவந்து விட்டதே என்றுதுயர்

பொங்கித் தவழவில்லை ! 'போக அமுதளித்த
மங்கை யவள்தன் மதுவார்க்கும் கூரியகண்

வேல்செய்த கேட்டை விடவோ தன்க்கெதிரே
மால்செய்து வந்தொளிரும் மாய்க்கும் கொலைவாள்கள்

தீமை செயும்'என்ற திட்பந்தான் போலுமது !
ஊமையாய் மக்கள் உரையின்றி நின்றார்கள்

வாளின் இடையிலே வாய்ந்த இளங்கவிஞன் !
நாளெல்லாம் தீந்தமிழை நாடித் திளைத்திருந்த

செம்மல் கொலையுண்டு செத்து மடிவதுவோ ?
அம்ம! பெருந்துயரம் யாரே பொறுத்திடுவார் ?

உற்ற துயரால் உளம்நெகிழ்ந்து வாடிநின்ற
கற்ற புகழேந்தி கண்ணீர் உகுத்திருந்தார் !

கண்ட இளவல் கழறினான் : "அண்ணலே !
அண்டத்து வாழ்வு அழிவுடைய தேயன்றோ ?

காரிகையைக் கூடிக் கலந்துவிட்ட அஞ்ஞான்றே
பேரிகையைக் கொட்டிப் பெருங்காலன் என்னெதிரே

வந்து புகுந்துவிட்டான் வாடுவதால் யாதுபயன் ?
நொந்து துயரில் நுழைந்துவிட்ட எந்தைக்கு

ஆறுதல் கூறி அருளுங்கள் ! என்வணக்கம்
கூறுதல் செய்துவிட்டுக் கூற்றன் வலைக்குள்ளே

வீழ்கின்றேன் !" என்றான் விரிந்த தமிழ்க்கடலில்
ஆழ்கின்ற தீந்தமிழ் ஐயன், "அருந்தமிழைப்

பாடித் திரிந்துவக்கும் பாலகனே ! காலனைத்
தேடித் திரிகின்றான் ! தீஞ்சொற் கவியரசன்

பெற்ற நலஞ்சான்ற பிள்ளைக்கோ இச்சாவு
உற்றது ? நீண்ட உலகம் முழுவதுமே

துன்பத்தில் மூழ்காதோ ? தூற்றியிச் செம்பியனை
மன்பதை அத்தனையும் மாபழி சொல்லாதோ ?

என்ன வினையோ ? எதுவருமோ இச்சோழ
மன்னனுக்குக் காணேன்? மதிகெட்டுப் போயினான்!

கம்பன் மகனைக் கடிந்தெழுந்து வாளாலே
செம்பியனும் மாய்க்கச் செயல்புரியச் செய்தானே !

நாட்டுக்கும் மக்கள் நலத்துக்கும் தன்புகழ்க்கும்
ஏட்டுக்கும் தீமைதர எய்துகின்றான் சோழர்

குலத்தெழுந்து வந்த குலோத்துங்கன் ! பாட்டு
நலத்தெழுந்த தீந்தமிழ் நம்பியே ! நீதான்

இறப்பினைக் கண்டு இதயமஞ் சாதே !
பிறப்பினைக் கண்ட பிறகு எவரெவரும்

மீண்டிந்தச் சாவினை மேவாமற் போவதில்லை !
ஆண்டிந்த நன்னாட்டை ஆட்சி புரிந்து

நிலமெல்லாம் வென்றாரும், நீண்டகன்ற மண்ணின்
புலமெல்லாம் வென்றாரும் புக்குவந் தேயடையும்

சாவினை வெல்லுகின்ற சக்தியினைப் பெற்றாரோ ?
நீவினை யொன்றிற்கு நின்று உயிர்கொடுத்துக்

காத்துப் புகழுற்றாய் ! காளையே ! நீயுனது
மூத்த கடமை முடித்துவிட்டுச் செல்லுகின்றாய் !

அஞ்சாதே ! கொள்க அமைதி!" எனவுரைத்து
வெஞ்சாவை நோக்கி விரையும்அம்பி காபதிக்கு

நல்லுறுதி சொன்னார்அந் நம்பி மகிழ்வுற்றான்
வல்லுறுதி கொண்டதோள் வாட்கைக் கொலைஞர்

கன்னெஞ் சுருகியது கைசோர்ந்து ஆட்டமுற்றார் !
"அன்னம் கொடுத்தான் அரசன் எனினுமென்ன ?

கம்பன் மகனைக் களத்தில் பிரிப்போமா ?
எம்பால் பழிவேண்டோம் !" என்று அவர்கள் தாம்

கூறிப் பழிபங்குக் கொள்ளாது போய்மறைந்தார்
சீறி எழுமந்தச் சீற்றத்து மன்னனுக்குச்

செய்தி பறந்தோடிச் சென்றது! ஓடிவந்தான்!
உய்திபெற்று ஆங்கு உயிரோடு நின்ற

இளைய கவியால் இடிஇடித்துச் சொன்னான்:
"வளைய மொழிபேசி வஞ்சகமாய்க் கூரியவாள்

சேவகரைப் போக்கிச் செலுத்த எழுந்துவிட்டாய்!
நாவகலப் பேசும் நயவஞ்சப் பாதகனே!

சாவின் கரத்தின்று சற்றும்நீ தப்பியினி
மேவ நினையாதே! மேதினியின் பூபதிக்குத்

தாங்காத் துயர்புரிந்து தப்பிடவும் எண்ணாதே!
பூங்கா அழித்த புயற்காற்றே! இன்றோடு

தீர்ந்தாய் அறிவாய் திருவில் நரகதனைச்
சேர்ந்தாய் நொடியில்பார்! சென்று களமெல்லாம்

வேங்கைக் கொடியை விளைத்த தளபதியே!
ஈங்கு வருக! இடர்செய்த இக்கொடிய

நச்சரவைக் கொன்று நலம்புரிஉன் வேந்தனுக்கே!
இச்சழக்கன் செய்த இழிவை மனத்தெண்ணிப்

பாய்ந்தோடி வா!" என்றான் பைய தளபதிதான்
ஆய்ந்தோடும் சிந்தை அழகோடு வந்துநின்றான்

மாலை மலர்போல் மலிந்துறையும் வீரமெனும்
கோலமெலாம் நெஞ்சில் குவித்தடக்கி வந்துநின்றான்

நின்றான் எதுவும் நிகழ்த்தவில்லை! ஓடோடிச்
சென்றான் அரசன் சினமென்னும் மாமலைமேல்!

"ஆணை! தளபதியே! அன்னவனை வீழ்த்தெ"ன்றான்
வீணை மொழியினைப்போல் வீரன், "விறல் வேந்தே!

ஆகுமுறை காக்கும் அரசே! எம் நல்லிறையே!
வாகுமுறை தந்தளித்த வள்ளல் இளவலையே

கொல்லப் பணிக்கின்றாய் ! கோது புரிந்திடவும்
வல்லேன்யான் ! எங்கட்கு வாழ்வில் படர

கொலையென்னும் வெய்ய கொடும்பாலை தானே?
கலையென்னும் பூமணக்கும் காவில் உலவிடவும்

நாங்கள் கருதோமோ ? நாயகனே ! எம்மையெலாம்
தாங்கும் பெருமைத் தலைமகனே ! செந்தமிழில்

கன்னல் பொழியும் கவியைக் கொலைபுரியும்
திண்ணமது என்பால் திகழவில்லை ! என்றனுடை

ஆவிக்கு உண்டிங்கு ஆபத்து என்றாலும்
பாவிக்கும் பொல்லாப் பழியைச் சுமந்திடயான்

போவதில்லை ! மன்ன ! பொறுத்தருள வேண்டுகிறேன்
சாவதில்லை யோ?இச் சகத்தில் !" என அறைந்தான்.

'ஆ' என் றிடித்தான் அரசன் ! அமைச்சர்களைப்
"போஎன் துயரதனைப் போக்"கென்றான் ! காளையினைக்

கொல்லும் துயர்சேர் கொடுமையினைத் தாங்குகின்ற
வல்லவர்கள் ஆங்கு வயங்கவில்லை ! மன்னனுற்ற

சீற்றம் விழிவழியே சிந்தியது ! தீவினைதான்
ஆற்றலெலாம் கொண்டு அடுத்துப் புகுந்து விட்டால்

துன்பப்பேய் நீங்கித் தொலையுமோ ? "ஆம் ! உற்ற
என்பழியைப் போக்க என்க்கே வழிகொடுத்தீர் !

உப்பிட்ட மன்னன் உளங்குமுறக் காணுகின்றீர் !
தப்பிட்ட தீயவனைத் தண்டிக்கச் சொல்லிய என்

ஆணை நிறைவுறுத்த ஆளில்லை ! சோழகுலத்
தூணைத் தனியே துடிக்கவிட்டீர் ! என்றும்

பணியத் தவறாப் படைபதியும் என்சொல்
அணிய மறுத்தான் அமைச்சர் குழாமதுவும்

வீரர் திரளும் விலகியது ! என்குலத்துச்
சீரை நலத்தைச் சிதையாது காப்பதற்கு

நானே புறப்பட்டேன் ! நச்சரவை மாய்க்கின்றேன்
மீனே சிலையே மிடுக்காலே தாழ்த்தியவென்

தோளின் திடமெல்லாம் தோற்று விடவில்லை !
வாளின் நெடும்பயிற்சி வற்றி டவுமில்லை !

பாரீர் !" எனவாட் படையை எடுத்தெழுந்தான்
"தாரீர் ! அமைதி ! தமிழன்னை மேல்ஆணை !

கன்னி மணத்தினையும் கம்பன் மனத்தினையும்
உன்னிடுவாய் மன்னா ! உடைவாளை ஈங்களிப்பாய் !

வேண்டாம் ! தீமைக்கு வித்திட்டுச் சீர்குன்ற
வேண்டாம் !" எனப்புக ழேந்தி விரித்தார்.

நகைத்து மொழியறைந்தான் நாடாள்வேரன்,"அண்டம்
பகைத்து எழுந்து பழிசொல்லி நின்றாலும்

சோழன் குலோத்துங்கன் சோர்வு அடைந்துள்ளம்
தாழவே மாட்டான் தமிழ்க்கவியே ! போதும் !

எனது குலப்புகழை ஏமாப்பைக் காத்தல்
எனது கடமை ! எவருமிக் கூட்டத்தில்

என்றன் அவலத்தை எண்ணியே பார்க்கவில்லை !
மன்றக் கவிபால் மயலுற்(று) ஒருதலையாய்ப்

பச்சமுடன் பேசுகின்றார் ! பாவலரே ! நீரென்பால்
உச்ச முறைசெய்யும் உண்மையினை யானறியேன் !

பாவலனை அவ்வினத்துப் பாவலனும் சார்ந்தணைக்கப்
போவ தியல்பே ! புகழேந்தி யார்கூட

நீதி மறக்க நினைந்துவிட்டார் ! என்னுடைய
ஆதி வினைப்பயனே ! ஆரைப் பழித்திடுவேன்?

இந்தப் பெரிய இழிவு புரிந்தவற்கு
அந்தம் படைத்தால்தான் ஆறும் எனதுமனம் !

வைய முழுதுமெதிர் வந்தாலும் அஞ்சுகிலேன் !
கொய்யத் தவறேன் ! கொடியோன் கொடுஞ்சிரத்தைக் !

காணுங்கள் ! கோக்குக் களங்கஞ்செய் தோர்கதியைக்
காணுங்கள்! நாடே! கருதிடுவாய்! தன்னந்

தனியாக நின்று தரும்பகையை வெல்வேன் !
இனியாது நேர்ந்திடினும் இன்னல் பெரிதுறினும்

தீர நெடும்பகையே தீப்போல் படர்ந்திடினும்
வீரக் களத்தில் விரயம் அதுபடினும்

அஞ்சுவது மில்லை அடநாயே! செந்தமிழில்
கொஞ்சுவது மேதுஇனி? கோலத் தமிழ்க் கவிதை

பாடுவது மேது ? பகட்டோடு நீ கூத்து
ஆடுவது மேது ? அழிகின்றாய் பார் ! கொண்ட

மன்னனுக்குத் தீமை மனத்தால் நினைப்பவர்க்கு
இன்னபரிசே இதோ ! பாராய் ! வாளாரம்

சாற்றுகின்றேன் உன்னைச் சகம்விட்டு வேறுலகம்
மாற்றுகின்றேன்!" என்று மணிவாளால் காளையினை

வெட்டியே சாய்த்தங்கு வெங்குருதிப் பேராற்றைக்
கொட்டியே காட்டினான் கோவேந்தன் ! கம்பன்றன்

மைந்தனையா கொன்றான்? மணித்தமிழ் ஒன்றனையே
சிந்தனையாக் கொண்டொளிர்ந்த சிற்பத்தை யன்றோ

இடித்துவிட்டான்? நம்மைஎலாம் ஈன்ற தமிழ்த்தாயை
அடித்துவிட்டான் பாடும் அழகுக் கவிக்கலையைச்

சென்று மிதித்தான் ! செறிந்த தமிழ்ப்பூங்கா
ஒன்றை யழித்துவிட்டான் ! 'ஓ'வென்றே ஆங்கு

அயல்நின்ற மாந்தர் அழுதழுது கண்ணீர்
வயல்நின்ற நீர்போல் வடித்தார்! புகழேந்தி

நொந்து உருக்குலைந்தார் நோக்கி இளங்கவியை
வெந்து மனம்வெடித்தார்! வெற்றிச் செருக்கோடு

கூத்தனும் மன்னன் குலோத்துங்கப் பாதகனும்
தூர்த்த சினந்தணிந்து துள்ளிப் புறப்பட்டார் !

மாறாத் துயர மனஞ்சேர் புகழேந்தி
கூறாத் துயர்சேதி கூற கவியரசை

நாடி விரைந்தார் நலிந்து மனங்கரைந்தார்
பாடித் திரிந்த பசுந்தமிழ்ப் பூந்தென்றல்

ஒய்ந்ததுயர் சேதி, ஒளிர்ந்த சுடர்விளக்கு
மாய்ந்ததுயர் சேதி மணிக்கவியும் எவ்வாறு

கம்பன்பால் சொல்வார்? கலைசேர் தமிழமிழ்த
கும்பமாய் நின்று குளிர விருந்தளிக்கும்

வள்ளல்பால் எங்ஙன் வகுத்துப் பெருந்துயரைத்
தெள்ள எடுத்துத் தெரிவிப்பார்? போர்க்களத்தில்

வென்றுவரு வானென்று வேந்தன் நினைந்திருக்க
குன்றிவரும் தானைக் குலபதியைப் போல்புலவர்

கல்விச் சிறப்புற்ற கம்பன் எதிரேபோய்
சொல்விளைவு செய்யாது சோக நிலை நின்றார்

பார்த்தார் கவியரசர் "பாவலரே ! யாது?" என்றார்
வேர்த்தார் புகழேந்தி, "வேந்தனுன்றன் நற்குலத்தை

வேரறுத்தான் தூய்தான வெற்றித் தமிழகத்துச்
சீரறுத்தான் பாவி! சிறுமை புரிந்து விட்டான்!

ஊழிற் பெருவலி யாவுள?" என்றார் ! துன்ப
ஆழி விழுந்தான் அருந்தமிழ்க் காவியத்தான் !

"கொன்றானோ? என்மகனைக் கொன்றினிய ஆருயிரைத்
தின்றானோ மன்னாளும் தீயன்? இளஞ்செல்வன்

வாழ்வினை ஓ ! அந்த வன்னெஞ்சன் தீர்த்தானோ?
தாழ்வினை என்றனுக்குத் தந்தானோ? என்சிறுவன்

தண்டமிழை ஆளும் தகைமையினைப் பெற்றுயர்ந்து
அண்டமிசை நீங்கா அமர நிலையுறுவான்

என்று நினைந்திருந்தேன் ஏமாந்தேன் மேனிலைக்குச்
சென்றுயர்வான் என்றே செருக்குற்றேன் ! என்மதலை

ஆவிக்கு வாய்ந்திருந்த ஆதரவாய் நின்றவனைப்
பாவிக்கு வாய்ந்த பலியாக இட்டேனே !

கன்னித் தமிழுக்குக் காணிக்கை யாமென்றே
மன்னி இருந்தவனை மன்னவனும் உண்டானோ ?

காதல் உயர்வதனைக் காட்டவந்த செம்மலுக்குச்
சாதல் தனையரசன் சன்மானம் தந்தானோ ?

பண்வாழ்வு கொண்டெழுந்த பாவலனைக் காவலனும்
மண்வாழ்வு நீக்கி மடியசெயல் செய்தானோ ?

கண்ணே ! மணியே ! கலைசேர் இளங்கதிரே !
பண்ணே ! இசையின் பயனே ! எனதன்பு

மாமகனே ! என்திருவே ! மாநிலத்தில் சீர்படைத்த
கோமகனே ! காதல் கொடுந்தீயில் பாய்ந்துயிரை

அர்ப்பணித்து என்னை அழவிட்டுச் சென்றாயே !
கற்பனையும் காணாத கட்டழகா ! உன்னையினிக்

காண்பேனோ ? உன்புகழைக் காதாரக் கேட்பேனோ ?
மாண்பேனோ என்றெண்ணி மண்விட்டு நீத்தாயே !

அன்பம்பி காபதியே ! ஆரமுதப் பேரறிவே !
இன்பம்பி ணித்து இறந்தாயே என்செய்வேன்

பொன்னே ! எனைவிட்டுப் போனாயே ! போ !உன்றன்
பின்னே வருகின்றேன் ! பின்னே வருகின்றேன் !

நன்றியிலா மாந்தர் நடுவே இருப்பேனோ?”
என்றினைய கூறி எழில்தமிழ்க் கம்பர்

அழுதார் ! புகழேந்தி, “அண்ணலே ! வேண்டாம்
பழுதார் புரிந்தார் ? பழவினையின் சூழ்ச்சி !

சாவு எவர்க்குமே சம்பவிப்ப தன்றோ ?காண் !
தாவும் அறிவுத் தடமெல்லாம் ஆள்கின்ற

உன்றனுக்கு யாரோ உரைசொல்லி ஆற்றிடுவார் ?
சென்றுனக்கு வாய்ந்திருந்த செம்மல் உடலத்தைக்

காண எழுக! கலங்குவதால் யாது ?கவி
வாண ! எழுந்து வருக !"என் றார் !கம்பர்

புறப்பட்டுப் போயினார் புத்திரனின் ஆவி
இறப்பட்டுப் போன இசைநீத்த ஆக்கையினைப்

பார்க்க! மனதில் பதைப்பும் பெருந்துயரும்
கோர்க்க மிகவிரைவு கொண்டு.

★ ★

கூத்தனும் மன்னன் குலோத்துங்கன் தானுமாய்
வார்த்தைகள் ஆடி வளர்த்திருந்தார் நட்பை

அரசன் மனையகத்தே! "அஞ்சாத வேந்தே!
முரசெனின் உன்றன் முரசே முரசாகும்!

வீரமிலா மன்னன் விழல்நிலத்தை யேயொப்பான்
சாரமிலாத் தீங்கனிபால் சால்பது ஏதுண்டு?

வாழ்க நினது வலித்தோள்கள் ! வாகையுடன்
வாழ்க நினது வயிரத் திருமார்பு !

வீழ்க பகைமை ! விரிகவே செங்கோன்மை
தாழ்க நலமில்லார் தாமே !" எனப்பலவும்

நஞ்சுற்ற சிந்தையுடை நாவலனும் மன்னனொடு
கொஞ்சுற்று நின்று குலவி இருக்கையிலே

ஆங்கு அறிவு அமைச்ச னொருவனுற்றான்
பாங்கு தவழப் பணிந்தான், குலோத்துங்கன்

"சேதிஎன்ன?" என்னவே, செப்பினான்: "கோவேந்தே
"நீதிஎன்ன? தீந்தமிழ் நீரவனாம் கம்பன்

இசைசேர் மகவுக்(கு) இறப்பினை ஈந்த
வசைசேர் கருமம்? வயவேந்தன் செங்கோல்

வழுவியது ! நீதி வளநாட்டை விட்டு
நழுவியது !' என்றுபல நாட்டோர்கள் பேசியே

நின்னைப் பழிக்கிறார் ! நீடு ஒளிதவழும்
பொன்னைப்போய்ச் செப்புப் பொருளென்று பேசுகின்றார்.

கம்பர் இளிய கவிபுகழேந்தியொடு
தம்பிள்ளைக் கூடு தனைக்காணப் போயுள்ளார்!

அவ்விடத்தே மக்கள் அரவம் மிகப்பெரிதே!
எவ்வினையோ? இன்னும் எதுவெல்லாம் எய்திடுமோ?''

என்றுமயங்கி நின்றான் "ஏன்? அச்சம் தீயவரைக்
கொன்று முடிப்பது கோன்முறையே! 'ஏராளன்

நற்பயிரைக் காக்க நாடிக் களைபறித்தல்
அற்பமன்று! நல்ல அறமே!' எனப் பெரியோன்

கூறிவைத்த வாக்கும் குலோத்துங்க! நீயறிவாய்!
மாறிவைத்த மக்கள் மனத்தை விநாடியிலே

நீதி வழியே திருத்தலாம்!" என்றொட்டன்
ஓதிச் சரிசெய்தான்! ஓடோடி யாங்குவந்து

நின்ற கவியரசர், "நீச்சனே! என்மகவைக்
கொன்று புசித்துவிட்ட கூற்றனே! நன்று!

மயக்கிமா யம்புரிந்து மன்னனுக்குத் தீமை
பயக்கிடும் தீய! பறித்தின்று மன்னன்

களைந்தது என்ன? களையையா? இல்லை!
வளர்ந்ததவன் செங்கோல்! வயலில் பசுமையுற

பாங்காய் வளர்ந்துவந்த பைங்கூழ் தனக்கன்றோ
தீங்காய் இறைமுடித்தான்! தீயவன் நீயேதான்!

பொல்லாக் களையாகப் — போகம் வருமென்று
நல்லார்க்குக் கூட நலிவதனைச் செய்து

வளர்ந்து வருகின்றாய் வாடிநா னின்று
தளர்ந்து எனது தனயனைப் போகவிட்டுச்

சாவின் அவதியிலே சஞ்சரித்து நிற்கின்றேன்
மேவியே நீயென்ன? மேலாய்வாழ் வாயோ?

இரக்கம் சிறிதும் இலாதவெம் பாலை
அரக்கமனப் பேய! அறங்கூறும் செந்தமிழைப்

பாடும்நா பெற்றுப் பயன்என்ன பெற்றுள்ளாய்?
வாடும்நான் இங்ஙன் வருந்திக் குமுறுவது

பேரின்ப மோடா!சொல் பேதையே! நீபுகழ்
கூரின்பம் தன்னையே கூட இதுநெறியோ?

சொல்லடா பேயனே! சொல்லடா தீயனே!
சொல்லடா கூத்தனே! சொல்"என் றழுதுகவி

வேந்தனவன் நெக்குருகி விம்மினான்! நன்னாட்டு
மாந்தரெலா மாங்கு மனங்குலைந்து வந்துற்றார்!

வந்தவ ரெல்லாரும் வாடித் தனதுவொரு
சொந்த மகவைச் சுடுகாடு போகவிட்டு

கையற்றோர் போலானார் காய்ச்சிட வெண்ணெயிலே
நெய்யுற்ற தேபோல் நெடுங்கண்க ளெல்லாம்

வருத்த நெருப்பால் வடித்தனகண் ணீரே!
பெருத்த இழவுற்றால் பேதளியார் யாவரே?

மின்னல் புரிந்து மிகஇடித்துப் பெய்யுமுகில்
என்ன கவிக்குலத்து ஏறு விழிகளிலே

கோபப் பொறிபறக்கக் கொட்டும் மொழியதிர
தாபத்தால் கண்,சுடுநீர் தாரை தனைப்பொழிய

மீண்டும் நிமிர்ந்தார்! மிடுக்காக வாய்வெடித்தார்:
"ஆண்டு புவிக்கு அறஞ்செய்ய வந்தவுயர்

சோழ அரசர் சுடர்வெய்யோன் நற்குலமே
தாழச் செயல்புரிந்த தார்நாறு மார்பனே!

நீதி உணர்வாயோ? நீடுதமிழ் நல்லறத்தின்
ஆதி வழியை அறிவாயோ? ஈரமில்லாப்

பாலை வனமே! பகுத்தறிந்து பார்த்தாயோ?
சீலம் அதுவே சிறிதேனும் பெற்றாயோ?

காதல் மனத்தைக் கணித்தறிய வல்லாயோ?
சாதல் எனுமந்த சந்நிதிக்கு என்மகவைப்

போக்கினாய்! மெய்க்காதல் போற்றி மகிழ்ந்தவரைத்
தாக்கினாய்! இதுதான் தமிழ்க்குலத்துப் பண்பாடோ?

காதலனை — நெஞ்சக் கருத்திலே கொண்டவனைச்—
சாதலினைப் போய்மூழ்கிச் சார அனுப்பிவிட்டு

நல்ல தமிழ்மங்கை நானிலத்தில் வாழ்வாளோ?
அல்லது போயோர் அயலவனைச் சேர்வாளோ?

சிந்தித்துப் பார்த்தாயோ? சீறித் தமிழ்நிலமே
நிந்தித்துப் பார்! உன்றன் நீச்ச செயலை

நகையே புரிகிறது! நன்றாகப் பாராய்!
தகையே பெறாத தமிழ்மன்னா! மங்கை

அமரா வதியை அறிவாயோ? உள்ளம்
நிமிரா நிலையுடைய நீர்மையிலா நங்கையென

எண்ணிநீ விட்டாயோ? ஏதம்தன் காதலுக்கு
நண்ணி யதைக்கேட்டு நல்லுயிரை வைப்பாளோ?

சென்ற உயர்காதல் செம்மலுடன் போய்க்கூடி
நின்று மகிழ்ந்திடவே நீங்கிப் பிரிந்திடுவாள்!

காதலுக்கு நீகொடிய காலனாய் வந்துற்றாய்!
ஆதலினால் மன்னா! அறத்திற்கு நீதீயன்!

ஈன்ற தமிழ்த்தாய்க்கு ஈனன்! தகைச்செல்வம்
சான்ற பெரியோர்க்குச் சத்துருநீ! செந்தமிழைப்

பாடுபவர்க் கெல்லாம் பயன்கொடா நச்சுமரம்!
கூடுபவர்க் கெல்லாருக் கும்கூற்றன்! நீயாகச்

சிந்திக்கக் கற்றறிவாய்! சீலத்தைப் பெற்றிடுவாய்!
வந்திக்க, பாவலரை வாழ்த்த, நெறிமுறையைத்

தேறிடுவாய்! என்றும் திருவில் சினமொடுங்கி
ஆறிடுவாய்! சோழ அரசே!" எனப்பேசி

ஏசியவர் நிற்கையிலே ஏங்கும் அழுகுரலை
வீசியங்கு மாதர் விரைந்தோடி வந்துற்றார்!

கம்பர் உணர்ந்துரைத்தார்: "காவலனே! உன்மகளும்
உம்ப ருறையும் உலகம் புகுந்துவிட்டாள்!

மண்ணுலகம் ஏற்க மறுத்துவிட்ட காதலரை
விண்ணுலகம் ஏற்று விரிந்த உளத்தோடு

மாமணத்தைச் செய்ய மணங்கொண்டு விட்டதடா!
வாமனத்து நெஞ்ச வயவேந்தே! பூங்குயில்கள்

சோதி விடுங்காதல் சொர்க்கத்தில் போய்ப்புகுந்து
வீதி உலாக்காட்டும் விண்மீன்க ளாய்மாறி

மின்னுகின்றார் காணாய்! மிளிரும் திருவிளக்காய்
மன்னுகின்றார் பார்! சோழ மன்னா!" எனவிரித்தார்!

மன்னன் நடுங்கி மயங்கித் தழுதழுத்தான்
அன்னத் திரள்போல ஆங்குற்ற தோழியர்கள்:

"ஆமாம் சுடர்வேல் அரசே!" எனமெல்ல
தாமாங்கு வந்து தரவெடுத்த சேதியினைச்

சொன்னார்! "இதுமெய்யா! சொல்லுங்கள்!" என்றந்த
மன்னாதி மன்னன் மருண்டயர்ந்து கேட்டான்

"உமதருமை சான்ற உயர்குணத்துப் பாவை
அமரா வதியே அமரநிலை யுற்றாள்"

எனவுரைத்தார்! வேந்தன் எரிசேதி கேட்டு
மனவுறுதி கெட்டான்! "மகளுக்கு உற்றதனைத்

தீர விரித்துத் தெரிவிப்பாய்! மேனகையே!
சீரா யுரை! எனக்குச் சீக்கிரமே" என்றான்

"அரசே! அழகுஅம்பி காபதி சாவின்
கரைசேர்ந்த சேதியவள் காதில் புகுந்துவிட்ட

அந்த நொடிமுதலே ஆராத் துயருற்று
வெந்து இதயம் வெடித்து உயிர்துறந்தாள்!

'தோழியே! என்காதல் தோன்றலினைக், கற்பனையின்
ஆழியை, நீங்கா அமரன்அம்பி காபதியை,

அன்பின் பெருங்கடலை, ஆதரவோ டேயொளிர்ந்த
இன்பச் சுடரின் இசைவிளக்கை, என்றனுக்கு

ஆவி கொடுத்து அணைத்த அருள்நிதியைக்
கூவி யழைத்தோடிக் கூடி மகிழ்ந்திடுவேன் !

காதலித்தேன் வெற்றியினைக் கண்டேன் அதன்பிறகு
சாதலிலே நட்டமது சார்வதுவு முண்டோ?

இறப்பேஎன் காதலனை ஈய முடியும் !
பிறப்பே அளித்த பிதாஎன்றன் காதலனை

என்றனுக்கு ஈயா(து) இரக்கமின்றி கூர்வாளால்
கொன்றனுப்பி விட்டான்! கொடுமையடிமேனகையே!

ஓலமது கண்டு உருகி நெகிழ்ச்சியுற்று
காலனவன் என்பால் கருணைக் கடல்காட்டி

என்னை எனது எழில்காதல் மன்னனொடு
பின்ன, எனது பிரிவைத் தகர்த்தெறியக்

காத்துநிற் கின்றான்பார் ! காவலனைக் காட்டிலும்
கூத்தன் இனியனன்றோ? கூறு அரசனிடம்!

போகின்றேன் ! கூடிப் பொருந்தும் மணப்பெண்ணாய்
ஆகின்றேன் ! பெண்ணே! அழவேண்டாம் ! நானிங்கு

வாழ்வதனால் நன்மை வருவதுண்டோ? கைம்மையொடு
தாழ்வதனால் மேன்மைத் தரமுண்டோ?' என்றே

குமரி அறம்பலவும் கூறிப் பிரிந்தாள்
அமரில் சிறந்த அரசே !" என விம்மி

சோர முடித்தாள்! சுழன்றது வேந்தன் தன்
ஈர மிலாத இதயம் ! கவியரசர்

சோகம் பெருகிச் சிரமேறி நின்றதவர்
ஆகம் நிலத்தின் அதிர்ச்சிபோ லாடிற்று !

'பட்சி மறைந்தால், படர்ந்து பிரியாது
ஒட்டித் தொடர்ந்தேபின் ஓடும் நிழல்மட்டும்

நின்று தனித்து நிலவிடுமோ ? ஆடாத
குன்று உனது குலமகள்! தானிருந்த

எல்லை விடுத்தோடி எங்கும் படர்கின்ற
முல்லைக் கொடியன்று முத்தமிழ்ப் பேரரசி !

மன்னா அவள்தன் மதியைப்பார் ! அவ்வுயர்ந்த
பொன்னாளின் வாழ்வினைப் போக்கித் தொலைத்தாயே!

என்குலத்து வேரறுக்கும் ஏமனா யுற்றாயே !
உன்குலத்து சோதியினை ஊதி யணைத்தாயே !

பேயாநீ வாழ்வாயோ? பேசும் தமிழ்க்குடிக்குத்
தாயாய்நீ வாழத் தவறி பெருங்கேடு

செய்தாயே! நஞ்சத்தைச் செந்தமிழர் பண்பாட்டில்
பெய்தாயே! சித்தமிலாப் பேதை மடமகனே !

நீதி விழிபறித்த நீச்சா! அரசாளும்
சாதிமட்டு மென்ன ? சகத்தில் மிகப்பெரிதோ?

பாடும் குலமே பயந்தளித்த மாந்தரெலாம்
மாடும் சிறுநாய் மரபினிலே வந்தவரோ ?

நாட்டிற்கு நீசெய்த நன்மையினும் நான்தமிழர்
ஏட்டிற்குச் செய்தது எவ்வகையில் தாழ்ந்ததடா !

மண்ணோடு உன்னுடைய மாண்பு புதைந்தொழியும் !
பண்ணோடு யான்செய்த பாட்டு மறைவதுண்டோ ?

வையகத் தேதமிழர் வாழ்ந்து இருக்குமட்டும்
துய்ய தமிழாழி தூர்ந்துபோ காதமட்டும்

நீதியதை அண்டம் நினைந்தொழுகிச் செல்லுமட்டும்
ஓதியறி கல்வி உயர்வாக ஓங்குமட்டும்

இன்பக் கவிதை இசைவிருந்து உள்ளமட்டும்
என்பசுங் காவியம் எங்கே மறைந்துவிடும் ?

ஆவியத்தை வார்த்தோர் அழியாத் திறம்கொண்ட
காவியத்தை யேஆக்கிக் கன்னித் தமிழ்நாடே !

உன்றன் பதத்திற்(கு) உரிமையாய் ஆக்கினேன்
என்றனுக்கு நீசெய்த கைம்மா(று) இதுதானோ ?

நன்றி மறவாத நன்னாடே ! ஏனோநீ
இன்று மறந்துவிட்டாய் ? ஈனம் புரிந்துவிட்டாய் !

பொன்னை நிகர்த்துப் பொலியும் தமிழ்த்தாயே !
என்னை நிகர்த்த எழிலாரும் மக்களினி

உன்றன் மணிவயிற்றில் உண்டாக எண்ணுவரோ ?
பொன்ற உனக்குப் பொருந்திய தேதீமை !

கன்னல் தமிழே ! களித்தெடுத்து வாரியே
மன்னர் இனிமேல் மடித்தலத்தில் இட்டுவுனைக்

காக்க தமிழ்ப்புவியும் கண்டு மகிழ்ந்திடுமோ ?
ஊக்கம் தமிழ்மேல் உடைகின்ற தீக்காலம்

வந்துவிட்ட தென்றற்கு வாய்த்த அறிகுறியாய்த்
தந்துவிட்ட திந்தத் தமிழ்நாடு கம்பனுக்குத்

தீரா இடும்பை ! திருவற்ற மண்ணிடத்தே
சேராமல் யானும்போய்ச் செல்லுகின்றேன்! வானுலகில்

காத்திருக்கும் என்றனுடைக் காளைக்கும் நல்லிதயம்
பூத்திருக்கும் காதற் புனித வனிதைக்கும்

நன்றாகும் வாழ்த்து நவின்றிடச் செல்லுகின்றேன்
வென்றாகும் வெற்றி வெறியோடு, வேந்தனே !

திட்டம் இயற்றிய தீய புலனுடைய
ஒட்டனொடு நீயிதயம் ஒட்டி மகிழ்ந்திடுவாய் !

மன்னர் குலமெல்லாம் மாய்கின்ற நற்காலம்
இன்னே வரவும் இருக்கிறது ! இராகவன்போல்

வேந்தருக்கே உண்டினி வெற்றி ! அரசுடையோன்
மாந்தருக்கு நல்வாழ்வு மாண்பு கொடுத்திடவே

வந்தான் எனுமுணர்வு வந்தால் அரசகுலம்
சிந்தாது போமோ ? சினத்து மனத்தவனே !

நீதி நிலவிடுக ! நீர்மைத் தமிழ்வாழ்க !
சாதி வெறியே சரிந்திடுக ! பூதலமே

எல்லா மொருகுலமாய் ஏற்றமுடன் மேம்படுக !
நல்லார் தம் காதல் நலம்பெறுக ! அல்லாத

செய்திடுவோர் வீழ்க ! செம்மை நெறிநின்று
உய்திடுக ! விட்டேன் உயிர்'' என்று கம்பர்

நிலம்விட்டு கற்பகமே நேர்ந்தபுயல் காற்றால்
பலம்விட்டு வீழ்ந்ததுபோல் பாரிடத் தேவீழ்ந்தார்

கூவிப் புலம்பியதே கூடிய மக்களினம்
ஆவி துடித்தார் அருமைப் புகழேந்தி !

''காவியம் சொன்ன கவியரசே ! செந்தமிழில்
ஓவியம் செய்து உலகுக் (கு) உதவிய

பேரரு ளாளா! பெரியோய் ! இனியுனைப்போல்
யாரருள வல்லார் அரியதமிழ்த் தீம்பாடல் ?

கம்பருயிருக்குக் காலனா யாகிநிற்கும்
செம்பியனும் நாளெல்லாம் செந்தமிழைப் பாடுகின்ற

கூத்தனும் மட்டும் குவலயத்தில் எந்நாளும்
பூத்த மலராய்ப் புலராது வாழ்வாரோ ?

மூவ ருயிரை முடித்துக் குடித்துவிட்டு
ஏவரும் வாட்டமுற்று ஏங்கத் துயர்செய்த

புன்னெறி யாளர்காள் ! புண்ணிய செந்தமிழின்
நன்னெறிக் கன்றே நலிவு புரிந்துவிட்டீர் !

பாவிகளே ! அந்தோ ! பறித்தீர்கள் மூவருடை
ஆவிகளே !'' என்று அலற, குலோத்துங்கன்

உள்ளத்தின் மேலே உறைநலிவைப் பேரறிவு
வெள்ளம் புகுந்து விலக்க உணர்வுற்றுப்

''போதும் ! உயர்கவியே! போதும் ! மிகப்பெரிய
தீதும் புரிந்துவிட்டேன் ! தீதும் புரிந்துவிட்டேன்!

காட்டும் நெறியமுதக் கற்பகம்போல் ஓங்கிவந்து
ஊட்டும் அருள்சேர் உயர்தாயா யாகுதமிழ்

நாட்டுக்கு நான்தீயன் ! நன்றி மறந்துவிட்டு
ஏட்டுக்குத் தீமை இயற்றிவிட்டேன் ! யானும்

உயர்வுதாழ் வென்றே உளந்தனிலே எண்ணி
அயர்வுதா னுற்றேன் ! அழிவதுவும் பெற்றேன் !

கவியரசர் ஆவிக்குக் காலனு யானேன் !
புவியரசர் தன்னுள் புனிததமிழ்ச் சோழர்குல

மன்னர் பெரும்புகழை மாருக் களங்கமது
தின்ன சிறுமதியேன் தீமை புரிந்துவிட்டேன் !

ஐயோ ! தமிழின் அருங்காதல் நன்னெறியின்
மெய்யோட ஆணவத்தால் மேவி யொழுகிவிட்டேன்!

'பூதலத்தில் தெய்வப் புனிதம் தவழ்ந்தோங்கும்
காதலது எல்லாம் கடந்தது'எனத் தேருது

மாருன தீய மதத்தால் வெறிகொண்டு
வேருன செய்துவிட்டு வீழ்ந்தேனே ! நல்லறிவு

மங்கை உளத்தை மதியாது போய்விட்டேன் !
சங்கை இலாத சழக்கன்யான் ! பேதை

சுயமாய்எண் ணுது சுழல பிறர்தம்
நயமான வாசகத்தால் நான்மதியே கெட்டேன்

அழியாது நிற்கும் அபகீர்த்தி யுற்றேன் !
பழியாள நானுமினிப் பாரகத்தே வாழ்ந்திடுதல்

ஆமோ ?'' எனவேந்து ஆராத் துயர்மொழித்தான்
"ஏமோ இழந்தேன்!'' எனஉள் ளிடிவுற்ருன்

"தீது புரிந்துவிட்டேன் ! தீது புரிந்துவிட்டேன்
யாது புரிவேன் ?''என்(று) ஆருய் விழிநீர்

வடித்தான் ! குலோத்துங்கன் வாகைநெடு மார்பு
துடித்தான் ! புகழேந்தி, "தூய தமிழ்வேந்தே !

ஊழி பலபலவும் உள்ளம் கசிந்துருகி
ஆழிபோல் நீர்விட்(டு) அழுதாலும் எங்கேனும்

மாண்டு மடிந்தோர் மறுபடியும் ஆவிபெற்று
மீண்டு வருவதுண்டோ? மேதினியின் மன்ன !

இனிஆ வதனை இயற்றுக !"என் றாரே !
நனிஆ ரஞருற்ற நாட்டவனும், "ஐயனே !

யாதுஇனி யான்புரிய ஆணை !" எனக்கேட்டான்
"மாதுஇனி யாளுக்கும் மாக்கவிச் செம்மலுக்கும்

பூவிரித்த சோலைப் பொறிவண்டு பின்னோடும்
காவிரிநல் ஆற்றின் கரையில் அழகொழுக

சிற்பக் கலைசேர் சிலையெடுப்பாய் ! செந்தமிழில்
அற்புதம் செய்த — அழியாப் புகழ்பெற்ற—

கம்பனுக்கு உன்றன் கவின்மன்றில் காவியம்போல்
செம்பொன் திருவால் சிலையொன் றமைத்திடுவாய் !

செய்த பிழைக்குச் செயலாலே நீ புரியும்
உய்தி இதுவே உரைத்தேன்!" எனமொழிந்தார்

"அவ்வாறே" என்று அரசனும் தானிசைந்தான்
"எவ்வாறே யானும் இசைகெட் டிரும்புவியில்

பாவியாய் வாழ்ந்திடுவேன் பைந்தமிழ் அன்னையாம்
தேவிக்குப் பொல்லாத தீங்கிழைத்தேன் !ஆகா !

புனித கவியே ! புகழேந்தி ! நீயே
மனித குலத்தொளிரும் மாணிக்கம்! தீதுசெயும்

காலக்கோள் போலக் கடையன் திரிந்துவிட்டேன்
சீலக்கோள் விட்டுச் சிறுமதியால் ஓ! யானோ !

மூவர் உயிரை முடித்துவிட்டேன் ! ஐயகோ !
மூவர் உயிரை முடித்துவிட்டேன்!" என்றலறி

கூத்தனார் பேதைக் குழவியைப்போல் விம்மினார் !
தீத்தன்மை என்றும் திகழ்அறிவை மூடிவிட்டு

ஆட்சியிலே நிற்பதுண்டோ? ஆராத் துயர்படர்ந்த
காட்சியிலே நின்றார்! கழறினார் பின்னுமவர்:

"மன்னா! உன் நன்னல் மதியையே மாய்த்தழித்துச்
சின்னாபின் னம்செய்தேன்! சீர்கெடுத்தேன் தீயன்!

இறவாப் புகழ்படைத்த கம்பர்க்(கு) இனிய
உறவாய் இருந்து உலவாமல் அந்தோ! யான்

நீங்காத் துயர்புரிந்தேன்! நீர்மைத் தமிழ்மணக்கும்
பூங்காத் திருவைப் புகுந்து அழித்துவிட்டேன்!

கீத மினிய குயிலின் உயிர்குடித்த
பாதகன்யான்! கல்வி படரலையே வீசிவந்த

முத்து மணிவளம் மூழ்குவார்க் கீகின்ற
மொத்து பெருங்கடலை மூடியே தூர்த்துவிட்டேன்

யான்பாவி மன்னா! அரசனுக்கும் தீங்கிழைத்தேன்
தேன்பாவும் கூந்தல் திருமகளின் நல்வாழ்வைக்

கள்ளன் தனைப்போல் கவர்ந்தேன்! அவள்துயரால்
உள்ளம் உடைந்து உயிர்துறத்தல் உற்றகல

ஈனமாய்த் தீமை இயற்றினேன்! நீலநிற
வானமார்க் கத்தில் வனப்பென்னும் நல்லமுதை

வாரி இறைத்தெழுந்து வந்த சுடர்மதிக்குத்
தூறினைச் செய்தேன்! துயர்செய்தேன் மாபாவி!

நல்ல கவிவானில் நாடி இளங்கதிர்போல்
செல்ல எழுந்தொளிர்ந்த செல்வத் தமிழ்ச்சுடரே

பாய்ச்சும் உயர்குலத்துப் பாவலனை யானேதான்
மாய்த்தேன்! மிகுந்த மதிநுட்பம் வாய்ந்தபுகழ்

ஆர்ந்த புலமை அழகுஅம்பி காபதிக்குச்
சேர்ந்து மடியச் செயல்புரிந்தேன்! மன்னவனே

வேண்டுகோ ளொன்று விடுக்கின்றேன்! தீமைக்குத்
தூண்டுகோ லல்ல! துரையே! அருள்புரிவாய்!

காதல் நெறிக்கும் கவிநெறிக்கும் மற்றுதமிழ்
பூதல மன்னர் புகழ்நெறிக்கும் யானே

அடாத பழிசெய்தேன் ! ஆளும் அரசே !
விடாதே எனையே ! விரியுலகம் கண்டுவக்க—

நின்றன் இறைமுறையின் நீர்மை, தமிழ்மணமே
சென்ற திசையெல்லாம் சென்று திகழ்ந்தோங்க—

தண்ட மெனக்கே தருவாய் ! எனை,வெற்றி
கொண்டவுன் வாளாலே கொல்க ! மயங்காதே !

நானும் பழிகூறும் நானிலத்தை விட்டுசென்று
வானுலகம் ஏகிப்போய் வாடாப் புகழுற்ற

மூவரையும் கண்டு முடியால் அடிபணிந்து
நாவரையும் தீரா நறுந்தமிழால் மன்னிப்புக்

கோரி வணங்கிடுவேன் ! கொண்டு திரும்பிவந்து
சீரில் அடுநரகைச் சேர்வேன் ! அருள்புரிவாய் !

நீதி வழுவா நெடுந்தகையே !" என்றொட்டர்
ஓதிப் பணிந்து உருகிக்கண் ணீர்பொழிந்தார் !

கூர்ந்த அறிவுப் புகழேந்தி கொண்டினிது
ஓர்ந்த மொழியே உரைசெய்தார்: " கூத்தரே !

நன்று ! வருந்தற்க ! நன்றல்ல(து) அந்நாளே
மென்று மறைப்பதுவே மேன்மை ! உமதுமனம்

உண்மை உணர்வதனை உற்ற(து) ! அதுசாலும் !
தண்மை யுறுக ! தளர்த்தும் கொடுவினையை

மாற்றவல் லார்ஆரே ? மாதவத்தோ ரும்கூட
ஆற்றவல் லாரோ அருவினையை ? மீண்டும்

துயர்வினையை உன்னற்க ! தூக்கியே மூவர்
உயர்வினையே இந்த உலகுக்கே ஓதிடுவோம் !

நன்னாடும் மேலும்ஓர் நற்றமிழ்ப் பாவலர்க்(கு)
இன்னா புரிய இசையாது ! வேண்டுமெனில்

மக்க ளினமதுவே மன்றில் தலையெடுத்து
தக்கதாம் நீதி தரட்டுமே! மக்களென்ன

மேலும் இழவு, மெலியும் திருநாட்டில்
சாலும் படியோதான் சாற்றிடுவார்?" என்ன

இருந்த தமிழ்க்கூட்டம் "இன்னலினி வேண்டாம்!
திருந்திவிட்ட கூத்தருக்குத் தீமை செயவேண்டாம்"

என்று நெறிமொழிந்தார்! "எல்லை துயருக்கு
நின்று விடட்டும் நெடுந்தமிழ்க் கூத்தரே!

சாந்தி யடையுங்கள்! சஞ்சலமே உற்றதெலாம்
ஏந்தி உயிர்வாழ்ந்(து) இருந்தால் அதுபோதும்!

கொள்க அமைதி!" எனக் கோரினான் மாமன்னன்!
உள்கும் மகிழ்வால் உயிர்த்து இனிதெழுந்து,

"இன்னா புரிந்தார்க்(கு) இனிதே புரிகின்ற
பொன்னாடு நாமெல்லாம் போற்றும் திருநாடு!

குற்றம் புரிந்தவர்க்கும் கூட நலம்புரிய
கற்றவர்கள் அன்றோ கலந்து இசைபழுத்த

மூத்த உயர்ந்தகுடி முத்தமிழ் நன்னாட்டார்!
கூத்தர் அவர்பாலே கொண்ட பெருநெறியே

காட்டியது காணீர்! கருணை மிகுநீதி
தீட்டியது ஆம்! நல்ல தீர்ப்பே! தமிழ்நெறியே!

'இன்னா புரிந்தார்க்(கு) இனியசெயல் சால்பு' என்று
முன்னால் மறையும் முழக்கியே விட்டதன்றோ?

வாருங்கள்! தோழர்களே! வாட்டம் தனைமுழுதும்
தீருங்கள்! விட்டகன்று தீர்ந்தமூ வர்க்கும்

தகுந்த மரியாதை தந்து அனுப்பப்
புகுந்திடுவோம்!" என்றார் புகழேந்தி! ஒட்டர்

இருக்க இசைந்தார்! மூவர் ஆக்கை எரியில்
உருக்களெல்லாம் போனார் உயிர்த்து.

ஒருநாள் ! தமிழ்நா(டு) ஒருங்கே உவந்த
திருநாள் ! எழுந்து திருவிழா காண்டலினே

நண்ணி விரைந்து நடக்கும் திருக்கூட்டம்
என்ன தமிழ்மக்கள் ஏராரும் காவிரியின்

பூவார் கரையின் புலம்நோக்கிப் போனார்கள்
தீவார் கதிரின் திறத்தினையும் எண்ணாது !

ஆமாம் கவிஞன் ‘அமரன்அம்பி காபதிக்கும்’,
ஏமார் வனிதை எழில் அம ராவதிக்கும்,

வாய்ந்த நிறமும், வனப்பும், நலன், அழகும்
ஆய்ந்து சமைத்தியற்றி ஆக்கி முடிவான

நற்பிறப் பேமீண்டும் நல்கி விடுத்ததுபோல்
அற்புதமாய் யாவும் அமைந்த சிலையுருவை

நாட்டும் இசைகொண்ட நன்னாள் அறிகின்றோம் !
நீட்டும் உரையால் நிகழ்த்திடவும் ஒண்ணுமோ?

ஆடிப் பெருக்கோ? அடர்ந்த சனக்கடலோ?
நீடி வளர்ந்த—நிசியில் மிளிர்கின்ற

விண்மீன் இனமோ ? விரிந்த பெருந்திரளே !
கண்மீறி நீண்டெழுந்த கன்னித் தமிழ்க்கணத்தை

யாதோ டுவமித்து யானுரைப்பேன்! தாய்மொழியின்
மீதோடும் ஆசை மிகுதி யதுவிருந்தால்

கூட்டத்திற் கென்ன குறைச்சல்? நறுமொழியின்
ஊட்டத்திற் கென்ன உலைவு? அதுபோல

எக்காலும் இன்ப எழில்நாடு ஓங்கினால்
முக்காலும் தீமை முளையாது சத்தியமே !

ஆங்கு, புகழேந்தி, அன்பு மிகுங்கூத்தர்,
மாங்குயிலை ஈன்றிட்ட மன்னவன் மூவருமே

வந்துற்றார் ! நின்றஎழில் வண்ணச் சிலைகண்டார்
சிந்துற்றார் கண்ணீர் ! சிறந்த உருவிரண்டும்

மாலை திகழ மணக்கோலம் கொண்டுசுடர்
சால முகக்குறிப்பில் சல்லாபத் தோடுநகை

செய்யும் உயர்பாவம் சீராய்த் திகழ்ந்ததுவே
துய்ய எழில்கண்டு துள்ளினான் மாவேந்தன்:

"சிற்பக் கலைஞன் சிருட்டித்த ஓவியத்தின்
அற்புதம் என்னே ! அழகென்னே ! சீரென்னே !

மாண்ட எழிலார் மணிக்கவியை, என்மகளை
மீண்டு மளித்தான் ! மிகுங்காதற் கையால்

வணக்கோலம் செய்து வருத்தமெலாம் ஏக
மணக்கோலம் செய்து மகிழ்வித்தான் ! ஆமாம் !

கலைசெய்து ஆக்கியது ! காவலனே அந்தோ !
கொலைசெய்து போக்கினான்! கோரம்! திருநாட்டீர் !

நல்லம்பி காபதிக்கும் நங்கைக்கும் மாமணம்செய்(து)
இல்லம்பு குத்தி இனிமையது யானே

புரிந்திருந்தால் அன்னோர் புதுவாழ்வி லின்பம்
சொரித்திருந்தால், ஆகா ! சுகமெத் தனையாகும் !

மன்னரின மென்ற மமதைக்கு ஐயோ !நான்
என்னரிய நாட்டிருந்த ஏறு கவியரசை—

அன்னோன் இளவல் அறிவுஅம்பி காபதியைப்—
பொன்னோ டொளிர்ந்த புனிதத் திருமகளைத்

தின்னக் கொடுத்துவிட்டேன்! தீமை புரிந்துவிட்டேன்!
சின்ன மதியாலே சீரழிந்து போனேனே !

பூண்ட தமிழ்த்தாய் புதல்வர்களே ! பூதலமே !
நீண்ட புவிதனிலே நீவிரெலாம் சாதியது

ஒன்றே எனஉளமே ஓர்ந்து உணருங்கள்
நின்றே உயர்ந்த நிலையென்றும், தாழ்வென்றும்

பேசித் திரியாதீர் ! பேதமையே கொள்ளாதீர் !
நேசித் தகன்ற நிலமெல்லா மோர்குலமாய்

உற்று மகிழுங்கள்! உண்மை உணர்வுநெஞ்சில்
பெற்று மகிழுங்கள்! பேதம் இகழுங்கள்!

காதல் மலரைக் கசக்கத் துணியாதீர்!
பூதலத்தில் காதல் புகழை முழக்குங்கள்!

இன்று, நிலவும் எழிலாலே நம்மையெலாம்
வென்று மயக்கி விழுங்கும் உயிர்ச்சிலைகள்

தம்மைக் கவிதைத் தமிழ்சேர் புகழேந்தி
நம்மை மகிழ்விக்க நாட்டி யருள்புரிவார்!

ஆன்ற தமிழின் அழியாத பேரறிவு
சான்ற பெரியீர்! வருக!"எனச் சாற்றினான்

வந்த புகழேந்தி, "வண்டமிழ்ப் பொன்னாட்டீர்!
சிந்தை குளிர சிலவார்த்தை கூத்தனார்

கூறி யருள்வார்! குறித்த பெரும்பணியை
ஈறில் பிறகு இயற்றிடுவேன்! கூத்தரே!

ஈண்டி வருக!"என் றிசைத்தார்! அவருந்தான்
வேண்டி இனிது விளித்துத் "திருநாட்டீர்!

திங்களொன்று முன்னர் திருவார் குலோத்துங்கன்
மங்களம் சான்றவுயர் மன்றில் கவியரசன்

தன்னுடைய சிற்பத் தரஞ்சான்ற ஓவியத்தை
என்னுடைய கையால் எடுத்தினிது நாட்டும்

பெரும்பேறு பெற்றேன்! பெருநாள் விளைந்த
கரும்பேறு சாரக் கவிதை வடித்தளித்த

அன்னவன் மைந்தன் அருமையம்பி காபதிக்கும்
மன்னவன் பெற்ற மலர்க்கொடிக்கும் இன்றே

சிலையெடுக்க உள்ளோம்! சிலவார்த்தை ஈண்டுத்
தலையெடுக்க யானும் தரவுள்ளேன்! இவ்விடத்தே

முத்தமிழ் நாட்டு முடிமன்னர் மூவருமே
ஒத்த மனத்தவராய் ஒன்றி யடைந்துள்ளார்

இக்காட்சி போல இவர்மூவ ரெந்நாளும்
ஒக்காட்சி செய்தால் ஒருதீதும் நன்னாடு

கண்டிடுமோ ? கூடிக் கலந்து இனிதுறைந்தால்
அண்டிடுமோ போரே ? அமைதி நிலவும்

இடத்தில்தான் இன்பம் இருக்கும் ! அசையாத்
தடத்தில்தான் வண்டிசைக்கும் தாமரை பூத்தொளிரும் !

அல்ல லுறுத்தும் அலைபாயும் சாகரத்தில்
நல்ல மலரினங்கள் நாடிப் படர்வதுண்டோ?

பாடும் பொறிவண்டு பற்றியே சூழ்ந்திடுமோ ?
நாடும் தமிழ்த்தாய் நலத்தைக் கருதிடவே

வேண்டி யுரைத்தேன் ! விடுதலையில் நாட்டமுறும்
கூண்டின் கிளிபோலென் குற்ற நெடுநெஞ்சில்

நின்று தவிக்கும் நினைவுத் திரளுக்கு
இன்று விடுதலை ஈகின்றேன் ! நன்னாட்டீர் !

செந்தமிழை யோதும் செயல்சேர் புலவீர்காள் !
அந்தமிலாத் தீமை அனைத்துக்கும் வித்தாக

ஒன்று உளது ! உரைக்கின்றேன் !அவ் விடத்தை
என்றுமே உங்கள் இதயத்தில் கொள்ளாதீர் !

கொண்டு எனைப்போலக் கோதுற்று நோகாதீர் !
அண்டும் பழிசேர் அழுக்காறே யான்சொன்னேன் !

விட்டு ஒழியுங்கள் ! வீணில் அழுக்காற்றுக்
கட்டுள் விழுந்து கருத்தழிந்து மாயாதீர் !

தீய பொறாமை திரிய, உளத்தினிலே
தோய இடங்கொடுத்துத் தோற்றால், வருந்துயரம்

வீசும்அலை ஆழி விடப்பெரிது ! ஓங்குமுயர்
பேசுமலை தன்னில் பெரிதாகும் ! நண்பர்களே !

பீடில் அழுக்காறு பெற்று எவருமே
கேடில் விழாமல் கிளர்ந்த புகழுற்று

மேம்பா டதுகொண்டு மேதினியில் வாழ்ந்ததுண்டோ ?
தீம்பாட லாலே திருவைத் தமிழுக்குத்

தந்த கவியரசன் தன்னை, அவனிளவல்,
முந்துதமிழ்க் கோவை முடித்த இளமணியை,

மன்னன் குலத்து மலரை, அழுக்காறே
தின்ன கொடியோன் திருடிக் கொடுத்துவிட்டேன்!

பொல்லாத அந்தப் பொறாமை பிறர் புகழைச்
சொல்லாது ! கண்டடங்கிச் சும்மா இராது !

திருவில் செயல்பால் திணிக்கும் ! அதனைக்
கருவில் அழியாது காலூன்ற விட்டுவிட்டால்

தீரா இடும்பை ! திகழும் அறிவு அழிக்கும்
பேரா இடும்பை ! பெருங்கல்வி கற்றவரைக்

கூட, பொறாமைக் கொடுநோய் பிடித்தறிவை
மூடவே காண்கின்றோம் ! முத்தமிழ்த் தாய்மொழியைக்

காக்கும் பணியையே கண்ணாகக் கொள்ளுங்கள் !
ஆக்கும் பணியில் அழுக்கா(று) அடையாதீர் !

உள்ளமது ஒன்றாய் உருப்பெற்று இன்பநலத்
தெள்ளமுத மாகின்ற தீந்தமிழ் அன்னைதனைப்

பேணுங்கள் ! நெஞ்சில் பெருந்தமிழின் நன்னலமே
காணுங்கள் ! அன்பர்களே ! கள்ளச் சுயநலத்தை

முன்னிறுத்திச் செல்லாதீர் ! மோகப் பெருஞ்செல்வம்
கன்னித் தமிழன்றோ ? காட்ட பிறிதொன்று

செய்தி எனக்குண்டு ! செந்தமிழர் நாட்டிலே
உய்தி யடைந்துங்கள் உள்ளங் களைமீண்டும்

பெற்றடைந்து சேர பெரிய பொறுப்பெடுத்தேன்
கற்றடைந்த நற்கல்வி கம்பன் திருவாய்

உரையாது விட்டுவிட்ட உத்தர காண்டம்
மறையார்ந்த அன்னை மலர்ப்பதத்தை வேண்டியே

பாட நினைந்துள்ளேன் ! பாடும் உயர்தகுதி
கூட எனக்கில்லை என்றாலும் கூறத்

துணிந்தேன் ! தமிழே துணையாக நெஞ்சில்
அணிந்தேன் !" எனமுடித்தார் ஆர்ந்த தமிழ்மக்கள்

ஆரவா ரம்செய்தார் ஆன்ற தமிழின்பால்
பேரவா கொண்ட பெருமிதத்தால் ! பின்அடுத்துப்

புன்னகை பூத்த புகழேந்தி வாய்மலர்ந்தார்:
"என்னருமை நாட்டீர் ! இனிய தமிழினத்தீர் !

நீங்கள் புரிந்த நெடுந்தவத்தின் மாட்சியதால்
ஓங்கியது நம்முடைய ஒண்டமிழே ! கூத்தர்

உயர்ந்த கவியாலே உத்தர காண்டம்
நயந்தளிக்க உள்ளார் ! நறியதமிழ் மாமாலை

இன்னும் மணக்க இயற்றிடவும் போகின்றார்
மன்னும் தமிழ்மொழிதான் மாநிலத்தில் மேம்படுக !

கூத்தரும் கம்பரும் குற்றமிலா மாத்தமிழ்க்கு
நேத்திரங்க ளாவர் ! நிகழ்த்துகின்ற ஊழாலே

கம்ப ரெனுமந்தக் கண்ணை இழந்துவிட்டோம் !
நம்பைந் தமிழுக்கு நம்மிடையே கூத்தர்

இருக்கின்றார் ! நாமும் இதனா லுவந்து
செருக்கின்றோம்! சீர்மிகுந்த செந்தமிழ்க்கு அன்னோர்

அடுத்த கவியரசர் ஆவார் ! (அரசன்
தொடுத்துளான் எண்ணம்) தொலையா நெடுநாட்டில்

உள்ள பெருங்குறையை உற்றுரைத்தார் அன்னவர்பால்
கள்ளமு முண்டோ ? கபடுண்டோ ? நெஞ்சகத்தில்

கூம்பும்தீ மைக்குக் குடியிடம் தான்விடுதல்
பாம்புக்குத் தான்வளர பால்வார்த் துறையவிடம்

ஈவதையே ஒக்கும் ! இதனை விடுத்துநெறி
ஆவதையே எண்ணுங்கள் ! ஆய்ந்து உணருங்கள் !

உள்ளுவ தெல்லாம் உயர்வாக உள்ளுங்கள்
கள்ளவுளம் தன்னில் கடலலைபோல் ஓயாது

துன்பமே என்றும் தொடரும் ! நலஞ்சான்ற
இன்பமே என்றும் இடம்பெற்று நில்லாது !

கூத்த ருளத்தில் குவித்திருந்த தீமையெலாம்
வார்த்தையால் கொட்டி வடித்துவிட்டார் ! மெய்யுணர்வு

பெற்றார் ! உயர்தமிழைப் பேணி வளர்த்திடவும்
கற்றார் ! அழுக்காற்றில் கால்வைத்த காரணத்தால்

தாழ்ந்தார் தனது தவற்றை யுணர்ந்தமையால்
வாழ்ந்தார் மறுபடியும் ! வல்ல தமிழ்ப்புலவீர் !

என்றும் உளத்தில் இதனைத்தான் வையுங்கள் !
நன்றுவந் தெய்தும் ! நலிவு மறைந்தொழியும் !

சேர்ந்தாரைக் கொல்லும் அழுக்காற்றைச் சேர்ந்தாரில்
வாழ்ந்தாரைக் காணோம் வரலாற்றில் ! இன்றொன்று !

கூத்தரோ அன்றி குலோத்துங்கச் சோழனோ
மாத்திரமோ மூவர் மடியச் செயல்புரிந்தார் ?

இல்லைஅவர் தம்மை இகழாதே ! மாநிலமே !
தொல்லைஅவ லத்தைத் தொடுக்காதே ! எவ்வுயிரும்

ஆட்டிப் படைக்கும் அவனொருவன் உள்ளதனை
நாட்டியே உள்ளார் நலமார் தமிழ்ச்சான்றோர் !

வையம் படைத்து வளமாக்கி நல்லுயிர்கள்
உய்ய வழிவகுத்த உத்தமன்தன் ஆணையினால்

தானிந்த வையம் தளையுற்றே ஆடுவது !
ஏனிந்த மாந்தரினம் எண்ணியிதைக் காணவில்லை ?

ஈசன் அருளால் இயற்றியே சீவர்களைப்
பாசத் தளையினிலே பற்றுறுத்தி வைத்துள்ளான் !

வெற்றி யடையும் வினைதான் அவன்சட்டம் !
சுற்றி வினையுயிரைச் சூழும் ! உதித்தெழுந்து

செம்பிற் களிம்புடனே சேர்வதுபோல் ஆன்மாவை
அம்பில் விரைந்து அடையுமே கன்மவினை !

சென்ம மெடுத்து செகத்தில் புகுந்துவிட்டால்
கன்ம பலனைக் கழித்தே உயிரினங்கள்

தீர்வதாம் ! ஐயன் திருவடியில் பின்னொடுங்கிச்
சேர்வதாம் ! ஆம்பிறப்பில் செல்லா வினையடைந்து

சந்திப்ப தாகும் ! சமய நெறிபுகுந்தார்
நிந்திப்ப தில்லார் ! நிகழ்வதெலாம் ஈசன்

திருவுள்ள மென்றே திருப்தி யுறுவார்
செருவுள்ள நெஞ்சே செயலை யுணராது

வாடி மயங்கும் ! வருந்த நமைவிட்டு
ஓடிய மூவர், உறுவினையின் கட்டாலே

அன்றோ பிரிந்தார் ? அரசனும் கூத்தனும்
கொன்றோர் எனஏனோ கொண்டீர் ?மற் றொன்று!

இறப்பென்றால் என்ன ? இதையுணர்ந்து விட்டால்
சிறப்பென்று முண்டு ! சிறுத்த நிலையில்

கருவுள் சிசுவாகிக் காலம்சென் றால்மனிதன்
உருவுற்றுப் பின்னர் உலகில் பிறக்கின்றான் !

பச்சைக் குழவியாய்ப் பாலகனாய் வாலிபனாய்
மெச்ச வளர்ச்சியுற்று மேவித் திரிகின்றான்

மூத்துக் குனிந்து முதுமைப்பின் எய்துகின்றான்
பார்த்தஇவை எல்லாம் பருவ நிலையன்றோ ?

அவ்வாறே சாவும் அமைந்த ஒருபருவம் !
எவ்வாறு நாமும்தான் எல்லாப் பருவமதும்

கொண்டோமோ அவ்வாறே கொள்ளாது ஏன்சாவைக்
கண்டோடி வீணில் கதறி நடுங்குகிறோம் ?

சாவாலே இந்தச் சடலம்தான் மாய்கிறது !
சீவான்மா தானும் சிதைவெய்தப் போவதுண்டோ ?

ஓர்ந்தே அறியுங்கள் ஒன்றும் அழியவில்லை
கூர்ந்த அறிவு குறைகண்டு நிற்காது

எல்லாப் பொருளும் ஒடுங்கி அவன்பதமே
செல்லும் எனுமந்தச் செம்மை நினையுங்கள் !

கம்பனும் நம்மிடையே காவியமாய் வாழ்கின்றான்
செம்பொற் கொடியும் செழித்த இளங்கவியும்

காதல் எனும்வானில் கண்காட்டும் தாரகையாய்ப்
பூதலம் காணப் புகுந்துவிட்டார் ! காதலுக்குக்

காட்டாக என்றும் கவியும் சுடர்க்கொடியும்
நாட்டாகம் தன்னில் நடக்கின்றார் ! இச்சிலைகள்

காதல் நெறிக்குக் கதிகாட்டி நின்றிடுக !
சீதத் தமிழ்நிலத்தில் சீர்த்தி வளம்பெற்று

வாழ்க ! தமிழும் வளர்ந்து நெறிவிரித்து
வாழ்க ! பெரும்நிலையே வாய்ந்து" எனவாழ்த்திப்

புத்தமுதம் பெய்தார் புகழேந்தி தீந்தமிழ்தான்
நித்தமும் வாழ நிலத்து.

(வெண்பா)

*காதல் பெரிது ! கடிய வினையாலே
ஏதம் புகுந்துவிட்டால் என்செயலாம் ?—பூதலமே
கூடி எதிர்த்தாலும் கூறும் பழவினைதான்
வாடிச் செயுமோ ? வழி.*

தேவி அச்சகம், அம்மாப்பேட்டை, சேலம்-3.

பிழை திருத்தம்

பக்	வரி	பிழை	திருத்தம்
6	15	களையை	களேயே
69	12	நீநிலா	நீணிலா
73	10	ஒற்றுை	ஒன்றுை
110	330	நொடிந்தார்	நொடித்தார்
121	619	ஒய்ந்ததுயர்	ஓய்ந்ததுயர்
122	664	என்றிணைய	என்றினைய
133	974	ஒ !யானே	ஓ !யானே
134	999	மணிவளம்	மணிபவளம்
138	1104	சொரித்திருந்தால்	சொரிந்திருந்தால்
144	1273	காலம் சென்றுல் மனிதன்	காலத்தில் மாந்தன்

டாக்டர் மு. வ.

கூறுகிறார்

****

'அமரன் அம்பிகாபதி'யைப் படித்து மகிழ்ந்தேன். நடையும் கருத்தும் ஒருங்கே நன்கு அமைந்துள்ளன. இலக்கிய மரபும் தமிழர் பண்பாடும் நன்கு விளங்கும் வகையில் - மரபுக்கும், பண்பாட்டுக்கும் யாதோரிழுக்கும் நேரா வகையில் - செம்மையாக அமைக்கப்பட்டிருக்கிறது. இடையிடையே புலவர் பெருமிதமும் கலையுள்ளமும் புலப்படுமாறு சிறந்த உரையாடல்களைக் கற்பனை செய்துள்ளமை போற்றத்தக்கது.

பத்திரிகைகள் பாராட்டுகின்றன

:O:

தமிழகத்தில் கர்ண பரம்பரையாக உலவிவரும் காதல் கதை அம்பிகாபதி — அமராவதியினுடையது. இதை முதன்முதலாகக் கவிதை இலக்கியத்தில் சமைத்து வெற்றி கண்டிருக்கிருர் கவிஞர் சே. ர. குமாரசாமி. வியக்கத்தக்க ஓசை நயம், பாராட்டத்தக்க பாவ உணர்ச்சி ஆகியவற்றை நூல் முழுதும் கண்டு மகிழ்கிரேும்.

— குமுதம்

Scenes and actions are beautifully drawn in appropriate metres and emotions are well portrayed. Conversations are brisk and natural and characterisation vivid and revealing. The theme has all the grandeur and the immutability of a Greek tragedy. The work is a welcome addition to our modern literature and the author deserves hearty congratulation on his production.

— THE HI

In this tragic poem, poetic brilliance is to be in many places. The genuine appreciation and admir of Kamban by the author is evidenced in many lines.

It is a welcome attempt, for, except for small of fragmentary poems, no long poems are attempt Tamil, and the author is to be congratulated.

— INDIAN EXP

தேவி அச்சகம், அம்மாப்பேட்டை, சேலம்-3.